பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2034 மார்கழி 23 புதன்கிழமை (07-01-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:42

# ஜனாதிபதி-பிரதமருக்கிடையே சமரச முயற்சிகளுக்கு முடிவு!

## அமைச்சர்களின் அவநம்பிக்கையை அடுத்து மனோ-மலிக் குழுவின் செயற்பாடுகளும் நிறுத்தம்

கொழும்பு,ஜனவரி7

**ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையேயான அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணும் சமரச முயற்சிகளுக்கு முடிவு கட்டப்பட்டுக்கொண்டிருக்கிறது. இம் முயற்சி குறித்து சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் பலத்த அவநம்பிக்கை தெரிவித்து வருவதையடுத்து அரசியல் நெருக்கடிக்குத் தீர்வுகாண பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தி வந்த மனோ-மலிக்குழுவின் செயற்பாடுகளும் முடங்கிப் போயிருக்கின்றன. இந்த நிலையில், அரசு - புலிகள் சமாதானப் பேச்சுகளின் எதிர்காலமும் கேள்விக்குறியாகியுள்ளது.**

மனோ தித்தவெல- மலிக் சமரவிக்கிரம குழு பல தடவைகள் கூடி ஆராய்ந்த போதிலும் இதுவரை உருப்படியான தீர்வு எதுவும் காணப்படாததால் அந்தக்குழு மீண்டும் கூடுவதில் பயனில்லை என்று ஐ.தே.க.சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் கருதுகின்றனர்.

நேற்றுமுன்தினம் ஐ.தே.க.வின் செயற்குழுக் கூட்டம் பிரதமர் தலைமையில் நடைபெற்ற போது இந்த உறுப்பினர்கள் அவ்விடயத்தைச் சுட்டிக் காட்டினர் எனத் தெரிகிறது. ஆயினும் மனோ - மலித் குழுவின் பேச்சுகள் குறித்து எந்த ஒரு முடிவும் மேற்கொள்ளப்படவில்லை என அறியப்படுகிறது.

மனோ - மலிக் குழுவின் பேச்சுகளை கண்டிப்பவர்களில் காணியமைச்சர் ராஜித சேனாரத்ன முன்னணி வகிக்கிறார். இக்குழுவினர் பேச்சு நடத்தி வருகையிலேயே பிரதமரைக் கண்டித்து ஜனாதிபதி கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். எனவும் பேச்சுகள் தொடர்பாக ஏற்கனவே காணப்பட்ட இணக்கத்தை இது மீறுகின்றது எனவும் குறிப்பிட்டிருக்கும் அமைச்சர் சேனாரத்ன இந்தச் சூழ்நிலையில் பேச்சுகளை எவ்வாறு தொடரமுடியும் எனவும் வினவியிருக்கிறார்.

சமாதானப் பேச்சுகளை யார் முன்

(16ஆம் பக்கம் பார்க்க)

## தென்னிலங்கை அரசியல் குழப்பங்களால் தீர்வு தடைப்படுவதை அனுமதிக்கக் கூடாது

### மட்டு.-அம்பாறை பொங்கு தமிழ் நிகழ்ச்சி வலியுறுத்தும்

ஈழத்தமிழர்களின் நியாயபூர்வமான உரிமைகளையும், அதற்காக நடத்தப்படும் போராட்டங்களையும் சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும். தென்னிலங்கை அரசியல் குழப்பங்களால் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தீர்வு தடைப்படுவதை அனுமதிக்கக் கூடாது. இவற்றைக் கோரி மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் உள்ள கல்விசார் நிறுவனங்கள், பொது அமைப்புக்கள் இணைந்து எதிர்வரும் 21ஆம் திகதி கிழக்கு பல்கலைக்கழக மைதானத்தில் பொங்கு தமிழ் நிகழ்ச்சியை நடத்த உள்ளன.

நேற்றுமுன்தினம் மாலை மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இதற்கான தீமானம் எடுக்கப்பட்டது.

பொங்கு தமிழ் நிகழ்ச்சிக்கு சிங்கள, முஸ்லிம் மக்களையும், வெளிநாட்டு இராஜதந்திரிகள். தமிழ் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் ஆகியோரையும் அழைப்பதென முடிவு செய்யப்பட்டது.

## உள்துறை, பாதுகாப்பு அமைச்சிடம் மீண்டும் பொறுப்புகள் ஒப்படைப்பு

பாதுகாப்பு அமைச்சின்கீழ் கொண்டுவரப்பட்ட ஆள்களைப் பதிவு செய்யும் திணைக்களம், குடிவரவு - குடியகல்வு திணைக்களம், சிறைச்சாலை திணைக்களம், இந்திய வம்சாவளியினரைப் பதிவு செய்யும் திணைக்களம் ஆகியவை மீண்டும் உள்துறை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கடந்த நவம்பர் மாதம் 4ஆம் திகதி பாதுகாப்பு, மக்கள் தொடர்பாடல், உள்துறை அமைச்சுக்களைப் பொறுப்பேற்றார் என்பது தெரிந்ததே. அதையடுத்து அவர் உள்துறை அமைச்சின்கீழிருந்து மேற்படி திணைக்களங்களைப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவந்திருந்தார்.

ஆயினும், திணைக்களங்கள் மீண்டும் உள்துறை, பாதுகாப்பு அமைச்சின் கீழ்க் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இதற்கான வர்த்தமானி அறிவித்தல் கடந்த 2ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது.

### மின்கட்டணம் அதிகரிப்பு

வரவு-செலவுத்திட்ட மூலம் 'வற்' வரி அதிகரிக்கப்பட்டிருப்பதால் இந்த மாதம் தொடக்கம் மின்சாரக்கட்டணம் உயர்த்தப்படுவதாக இலங்கை மின்சார சபை தெரிவிக்கிறது.

இதன் பிரகாரம் மின்சாரக்கட்டணங்கள் 5 சதவீதத்தால் அதிகரிக்கப்படுகிறது. ஆயினும் முதல் 40 அலகுகள் வரைக்கும் கட்டணம் அதிகரிக்கப்படவில்லை என்று சபையின் தலைவர் தெரிவித்தார். கட்டண அதிகரிப்பின் மூலம் மேலதிகமாகக் கிடைக்கப் பெறும் வருமானம் திறைசேரிக்கு அனுப்பப்படும் என்று மின்சாரசபைத் தலைவர் மேலும் கூறினார்.

### யாழ். பல்கலைக்கு 647 மாணவர் அனுமதி

யாழ். பல்கலைக்கழகத்துக்கு இவ்வருடம் 647பேர் அனுமதிக்கப்படடுள்ளனர். அனுமதி பெற்ற மாணவர்களின் பெயர்ப் பட்டியல் யாழ். பல்கலைக்கழகத்துக்கு நேற்றுக் கிடைத்துள்ளது.

தெரிவான மாணவர்களின் விவரங்களை பதிவாளரிடம் பார்வையிடலாம் எனத்தெரிவிக்கப்பட்டது.

தெரிவான மாணவர் விரம் பீடரீதியாகவருமாறு:-

மருத்துவம் 84, விவசாயம் 57, உயிரியல் விஞ்ஞானம் 44, பௌதீக விஞ்ஞானம் 91, முகாமைத்துவம் 137, வர்த்தகம் 10, கலை 224. (ஒ-3-7)

## துணைவேந்தரை அறையில் வைத்து பல்கலைக்கழக ஊழியர்கள் பூட்டினர்!

யாழ்ப்பாணம்,ஜன.7

யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் துணைவேந்தரை அவரது அலுவலக அறைக்குள் பூட்டினார்கள்.

பல்கலைக்கழக ஊழியர்களின் நலனுக்கு குந்தகமாகவும், ஊழியர்சங்கத்தினரைப்பழிவாங்கும் வகையிலும் பல்கலைக்கழகப் பேரவை தீமானங்களை மேற்கொள்வதாகவும்.

அத்தகைய தீர்மானங்களை உடனே விலக்கிக் கொள்ள வேண்டும் என்றும் - வலியுறுத்தி பல்கலைக்கழக ஊழியர்சங்கம் நேற்று அடையாள வேலைநிறுத்தம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்திருந்தது. இந்த நிலையில் ஊழியர் சங்கப்பிரதிநிதிகளுக்கும் துணைவேந்தருக்கும் இடையே நேற்று

(16ஆம் பக்கம் பார்க்க)



பல்கலை. ஊழியருடன் மாவை சேனாதிராஜா எம்.பி. பேசுகிறார்.

## தோட்டாக்களைக் கடத்தியதாக சீருடையினர் இருவர் கைது!

யாழ்ப்பாணம்,ஜன.7

துப்பாக்கிரவைகளைக் கடத்தியவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சீருடையினர் இருவர் பலாலி விமானப் படைத்தளத்தில் நேற்றுக்கைது செய்யப்பட்டனர்.

பலாலி இராணுவமுகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவரும், கொடிகாமம் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலீஸார் ஒருவருமே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

இவர்கள் இருவரும் விடுமுறையில் சொந்த ஊர்களுக்குச் செல்வதற்காக நேற்று பலாலி விமானத்தளத்திற்குச் சென்றனர் என்றும் -

அங்கு விமானப்படையினர் நடத்திய சோதனையில், இவர்கள் துப்பாக்கிரவைகளை வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

துப்பாக்கிரவைகள் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து இவர்கள் இருவரையும் விமானப்படையினர் கைது செய்து

(16ஆம் பக்கம் பார்க்க)

## கிறிஸ்பெட்டன்-மிலிந்த சந்திப்பு

கொழும்பு.ஜன.7

ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளர் கிறிஸ்பெட்டனை, அமைச்சர் மிலிந்தமொறகொட நேற்றுமுன்தினம் பெல்ஜியத்தின் தலைநகர் பிரஸல்ஸில் சந்தித்துப் பேசினார்.

மிலிந்த கடந்த 29ஆம் திகதி வாஷிங்டனில் அமெரிக்க அரசின் அதிகாரிகளையும், கடந்த 2ஆம் தகதி ஒஸ்லோவில் நோர்வே அரசின் பிரதிநிதிகளையும் டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் பங்கு பற்றிய இணைப்பங்காளிகள் என்ற வகையில் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.




சில விநாடிகளில் நீங்களும் ஸ்பீட் லோனை பெற்றுக்கொள்ளலாம். விபரங்களுக்கு அருகிலுள்ள NSB கிளைக்கு விரையுங்கள்.

ஸ்பீட் லோனின் முக்கியத்துவம்: * வைப்புத் தொகையில் 90% வரை * ஆகக் குறைந்த வட்டி வீதம்.

ஸ்பீட்லோன் | NSB

# காலையில் பேசுவதை மாலையில் மறந்துவிடும் ஜனாதிபதியின் பேச்சை எவ்வாறு நம்புவது?

## சார்க் மாநாடு உரை தொடர்பாக அமைச்சர் கிரியெல்ல வினா

உள்நாட்டில் ஒன்றும் வெளிநாட்டில் மற்றொன்றும் பேசும் ஜனாதிபதியின் பேச்சைக் கேட்டு எந்த முடிவுக்கும் வரமுடியாது. அவர் இனப்பிரச்சினை விடயத்தில் காலையில் பேசுவதை மாலையில் மறந்து விடும் சுபாவமுடையவர். எனவே, அவர் சொல்வதை எப்படி நம்புவது?

- இவ்வாறு பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று செய்தியாளர்களுடன் நடந்த கலந்துரையாடலின் போது வினவினார்.


அவர் அப்பொழுது தொடர்ந்து கூறியதாவது:

சமாதானத்தை நிலைநாட்ட ஜனாதிபதி தொடர்ந்து செயற்படுவார் என்றால், சமாதானத்தை முன்னெடுத்துச் சென்ற ஐ.தே.க.அரசின் மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்று அந்த முயற்சிக்கு அவர் ஆப்பு வைத்ததேன்? 1994ஆம் ஆண்டு சமாதானத்தின் சின்னமான புறாவைப் பறக்கவிட்டு பெரும்பான்மையான மக்கள் ஆதரவுடன் அவர் ஆட்சிக்கு வந்தார். ஆயினும், சமாதானத்துக்கான யுத்தம் என்று கூறி பின்னர் போர் தொடுத்தார். சமாதான முயற்சியில் விடுதலைப் புலிகள் நம்பிக்கை கொள்ளும் வகையில் அவர் நடந்து கொள்ளவில்லை.

விடுதலைப் புலிகளிடம் தூதுவர்களாக அனுப்பப்பட்டவர்கள் கூட நம்பிக்கை தரக்கூடியவர்களாக இருக்கவில்லை. ஆனால், ஐ.தே.க. அரசு அப்படிச் செய்யவில்லை. நேரடியாக அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களைப் பேச்சுக்களில் ஈடுபடுத்தியது. சமாதானத்தை நிலைநாட்ட வேண்டும், இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்காகவே மக்கள் ஐ.தே.கவுக்கு பெரும் ஆதரவு வழங்கினர். நாம் ஒரு முக்கிய கட்டத்தை அடைந்த போது சமாதான முயற்சியைக் குழப்பிவிடும் நடவடிக்கையில் ஜனாதிபதி ஈடுபட்டார்.

சார்க் மாநாட்டில் ஆற்றிய உரையில் பிரதமருடன் தான் ஒத்துழைப்பதாக ஜனாதிபதி கூறினார். இதுபற்றி எதுவும் கூறமுடியாத நிலையில் நாம இருக்கின்றோம். அவரின் ஆட்சிக் காலம் முடிவுறும் கட்டத்தில் அவர் இந்தநாட்டுக்கு நன்மையைச் செய்து வரலாற்றில் இடம்பிடிக்க வேண்டும். அந்த கௌரவத்தை அவர் பெறுவாரா? என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

- இவ்வாறு அவர் கூறினார்.



நவாலியூர் நா.செல்லத்துரையின் பவள விழா நிகழ்வு நேற்று யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பவளவிழா மலரின் முதற்பிரதியை விழா நாயகரிடமிருந்து வாழ்நாள் பேராசிரியர் எஸ்.சிவஞான சுந்தரம் பெற்றுக்கொள்கின்றார்.

## 'மிலேனியம் சிற்றி' ஆணைக்குழு அறிக்கை
# நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு முக்கிய எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு

கொழும்பு,ஜன.7

அத்துருகிரிய 'மிலேனியம் சிற்றி' இராணுவ இல்லப் பொலீஸ் முற்றுகை தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை ஆராய நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்க அரசு மேற்கொண்டிருக்கும் தீர்மானத்துக்கு பிரதான எதிர்க்கட்சித் தலைவர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் கூடிய கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே இந்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

தெரிவுக்குழு நியமிக்கும் பிரேரணை நாளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென சபை முதல்வரும நீதியமைச்சருமான டப்ளியூ.ஜே.எம். லொக்குபண்டார ஏற்கனவே தெரிவித்திருக்கிறார்.

எதிர்க்கட்சித் தலைவர்கள் இதற்குத் தெரிவித்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் தெரிவுக்குழு நியமிக்கும் நடவடிக்கையில் அரசு ஈடுபட்டிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் கூறியிருக்கிறார்.

ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை இன்னமும் அதிகாரபூர்வமாக வெளியிடப் படவில்லை என்பதாலும், 'மிலேனியம் சிற்றி' சம்பவம் சட்ட நடவடிக்கையுடன் சம்பந்தப்பட்டிருப்பதாலும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்படுவது சரியானதல்ல என்று எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் பலர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

சபாநாயகர் ஜோசப் மைக்கல்பெரேரா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அரசின் சார்பில் அமைச்சர்களான லொக்குபண்டார, மஹிந்த சமரசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

## விஷ சாராய மரணங்கள் ஒன்பதாக உயர்ந்தன!

விஷ சாராயம் குடித்தவர்களில் மேலும் நான்குபேர் இறந்துள்ளனர். சிகிச்சை பெறுவோரில் ஏழு பேர் ஆபத்தான நிலையில் இருக்கின்றனர் என்று கராபிட்டிய வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த சனிக்கிழமை பத்தேகம, பொரலுகல என்ற கிராமத்தில் "வைன ஸ்பீரிட்" திரவத்தால் தயாரிக்கப்பட்ட விஷ சாராயத்தைக் குடித்தவர்களில் ஐந்து பேர் இறந்தனர் என்பதும் மேலும் 11பேர் காரபிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர் என்பதும் தெரிந்ததே சிகிச்சை பெறுவோரில் நான்கு பேர் இறந்துவிட்டனர்.

விஷசாராயம் குடித்ததில் இதுவரை மொத்தம் ஒன்பது பேர் இறந்துள்ளனர்.

# மானியம் அதிகரித்த போதும் உரங்களின் விலைகள் உயர்வு

உரத்துக்கான மானியம் அதிகரிக்கப்பட்ட போதும் யூரியா உட்பட 5 உரவகைகளின் விலைகள் நேற்று முன்தினம்முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதிகரிக்கப்பட்ட புதிய விலை விவரங்கள் சகல உரக்களஞ்சியங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றும் -

தனியார் உரஉற்பத்தி நிறுவனங்களும் விலை அதிகரிப்பை மேற்கொண்டுள்ளன என்றும் - கூறப்படுகின்றது.

வரவு செலவுத்திட்டத்தில் யூரியா உரத்துக்கான மானியம் அதிகரிக்கப்பட்டது. இதனால் யூரியாவின் விலை கடந்த முதலாம் திகதிமுதல் குறைக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகின.

ஆனால் தற்போது யூரியா உட்பட 5 உரவகைகளுக்கான விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது.

உலக வர்த்தக சந்தையில் சுமார் 12 ஆயிரத்து 500ரூபாவுக்கு விற்கப்பட்ட ஒரு தொன் யூரியாவின் விலை தற்போது 21 ஆயிரம் ரூபாவரை உயர்ந்துள்ளதாகவும் -

அதன் காரணமாகவே இலங்கையிலும் உரவிலைகள் அதிகரிக்கப்பட்டுளளதாகவும் -

விவசாய கால்நடைவளம் மற்றும் சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா தெரிவித்தார். (ஒ)

## டென்மார்க் ஊடக நிபுணர்கள் இலங்கை விஜயம்

கொழும்பு,ஜன.7

டென்மார்க்கைச் சேர்ந்த ஊடகவியல்துறை நிபுணர்கள் இருவர் அடுத்தவாரம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்கின்றனர்.

மார்கஸ் ரொயின், அஸ்ஜம்ஜோர் ஜென்சன் ஆகிய அந்த இருவரும் யாழ்ப்பாணத்துக்கும் வரவுள்ளனர்.

வடக்கு - கிழக்கில் நீண்டகால ஊடகப் பயிற்சித் திட்டமொன்றை செயற்படுத்துவது தொடர்பாக ஆராய்வதே இவர்களது விஜயத்தின் நோக்கம் என்று கூறப்படுகிறது.

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜன.7

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவர் மன்றத்தின் "முகாமை நோக்கு" நூல் வெளியீடு நாளை வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# விடுமுறையில் கடைகள் திறக்க பொங்கலையொட்டி அனுமதி

யாழ்ப்பாணம்,ஜன.7

பொங்கல் திருநாளையொட்டி இன்று புதன்கிழமைமுதல் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விடுமுறை தினங்களிலும் கடைகளைத் திறக்கலாம் என்று யாழ் வணிகர்கழகம் அறிவித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட தினங்களுக்குள் சனிக்கிழமை முழுநாளும், ஞாயிற்றுக் கிழமை மற்றும் வர்த்தகவிடுமுறை நாள்களிலும் கடைகளைத் திறந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்றும் -

இந்த நாள்களில் பணியாற்றும் ஊழியர்களின் நலன்கள் பேணப்பட வேண்டும் என்றும் - யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது. (ஒ)

## மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஜன.7

கொக்குவில் லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச மருத்துவ முகாம் இன்று காலை 8.30 மணி தொடக்கம் மாலை 1 மணிவரை ஆறுகால் மடம் ஸ்ரீவைத்திலிங்க வித்தியாசாலையில் நடைபெறும்.

இலவச கண்பரிசோதனை, பொது வைத்திய பரிசோதனை என்பன இதில நடைபெறவுள்ளன. (ஒ-ரி)

# தனியார் பஸ் உரிமையாளர்கள் 12ஆம் திகதிமுதல் வேலைநிறுத்தம்!

கொழும்பு,ஜன.7

தனியார் பஸ் உரிமையாளர்கள் எதிர்வரும் 11ஆம் திகதி நள்ளிரவு முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதெனத் தீர்மானித்துள்ளனர்.

கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் கடன் அடிப்படையில் பஸ்களைக் கொள்வனவு செய்வோர் மீது தவணைக கட்டணத்துக்கு 15சதவீத வற் வரி விதிக்கப்பட்டது. இதை எதிர்த்தே வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்படவிருப்பதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கச் செயலாளர் கெமுனு விஜேரத்ன நேற்றுத் தெரிவித்தார்.

வற் வரி விதிப்பால் வங்கிகளில் பெற்ற கடனுக்கு வட்டி செலுத்துவதுடன் கடனுக்கு மேலதிகமாக இரண்டு அல்லது மூன்று லட்சம் ரூபா வரை செலுத்தவேண்டியிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வற் வரியை நீக்கும் வரை வேலை நிறுத்தம் தொடருமென பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவித்திருக்கிறது.

வற் வரியை நீக்கும்படி தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அரசுக்கு வேண்டுகோள் விடுத்தது. போக்குவரத்து அமைச்சருடன் பேச்சு நடத்தியது. இருந்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனாலேயே வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதென தீர்மானித்துள்ளோம் என்றும் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். (ஒ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.7

திண்மக்கழிவுகளால் ஏற்படும் அபாயம் குறித்த முக்கிய கலந்துரையாடல் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு வலி.தென்மேற்கு மானிப்பாய பிரதேச சபைக் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் பணிப்புரைக்கமைய இந்தக் கலந்துரையாடல் இடம்பெறுகின்றது.

பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அனைத்து சனசமூக நிலையங்களின் தலைவர் செயலாளர்களையும், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும், பொது சுகாதார பரிசோதகர்களையும இதில் கலந்து கொள்ளுமாறு பிரதேச சபைச் செயலாளர் கேட்டுள்ளார். (ஒ-185)

## நீர்வழங்கல் சபை சேவைகளைத் தடுக்காதிருக்க
# 20 தொழிற்சங்கங்களுக்கு எதிராக நீதிமன்றம் இடைக்காலத் தடை

கொழும்பு,ஜன.7

தேசிய நீர்வழங்கல் சபையின் சேவைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நடந்து கொள்ளாதிருக்க அச்சபையின் 20 தொழிற்சங்கங்களுக்கு கல்கிசை மாவட்ட நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளது. தேசிய நீர்வழங்கள் சபை தாக்கல் செய்த மனுவை மேலதிக மாவட்ட நீதிவான் திருமதி ஜராங்கனி பெரேரா ஆராய்ந்ததை அடுத்தே இத்தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நாளை 8ஆம் திகதி வேறோரு தினத்தில் சபையின் நடவடிக்கைகளைச சீர்குலைக்கும் வகையில் ஊழியர்களைப் பயமுறுத்துவதில், ஊழியர் சேவையில் ஈடுபடுவதைத் தடுப்பதில் ஈடுபடக்கூடாதென தடையுத்தரவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

எதிர்மனுதாரர்களான தொழிற் சங்கங்கள் ஜனவரி 8ஆம், 9ஆம் திகதிகளில் ஊழியர்கள் கடமைக்கு வருவதைத் தடுத்தால் தண்ணீர் விநியோகத்தில் தடையேற்படும், விநியோகக் குழாய்களில் வாயு நிறைந்து அவை வெடித்துவிடும் என்றும், 48 மணி நேரம் தடைப்படும் தண்ணீர் வநியோகத்தைச் சீர்படுத்த மேலும் 48 மணிநேரம் செல்லும் என்று மனுவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஒ)

## பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத்தால்
# அங்கத்துவ சங்கங்களுக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா
## விபத்து, ஓய்வூதியம், மரணக் கொடுப்பனவுக்காக

வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தனது அங்கத்துவ சங்கங்களுக்கு விபத்து, ஓய்வூதிய, மரணக் கொடைகள் வழங்கும் நிதியாக 2 லட்சத்து 43 ஆயிரத்து 663 ரூபாவினை கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் வழங்கியிருப்பதாக சமாச் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நிதி குடாநாட்டில் உள்ள 15 பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளன.

கரவெட்டி, அச்சுவேலி, ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை, சுன்னாகம், பருத்தித்துறை, பண்டத்தரிப்பு, கோண்டாவில், மானிப்பாய், சாவகச்சேரி, சங்கானை, அரியாலை, காரைநகர், யாழ்ப்பாணம்,கோப்பாய் போன்ற பகுதிகளில் இயங்கும் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கே நிதி வழங்கப்பட்டது. (ஐ-17)

# நெடுமாறனுக்குப் பிணை கிடைத்தது! சிறையிலிருந்து விடுவிக்கப்படுவார்!!



தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறனுக்கு சென்னை உயர் நீதிமன்றம் நேற்றுப் பிணை வழங்கியது. இதனையடுத்து அவர் சிறையில் இருந்து விடுவிக்கப்படவிருக்கிறார்.

பொடா வழக்கில் அவருக்கு முதலில் பிணை வழங்கப்பட்டது. பின்னர் திண்டுக்கல் நீதிமன்றத்தில் இருந்த வழக்கிலும் பிணை கிடைத்தது.

ஆனால் 10 ஆண்டுகளுக்குமுன் காவியத் தலைவன் கிட்டு என்ற புலிகள் ஆதரவுப்புத்தகத்தை வெளியிட்டதற்காக தொடரப்பட்ட வழக்கு சென்னை ஆலந்தூர் நீதிமன்றத்தில் இருந்தது. அதில் பிணை கிடைக்காததால் நெடுமாறன் சிறையில் இருந்து விடுவிக்கப்படவில்லை .

இந்த வழக்கை விசாரித்த ஆலந்தூர் நீதிமன்ற நீதிபதியை தமிழக அரசு திடீரென மாற்றியது. இதையடுத்து பூந்தமல்லி நீதிமன்றத்தில் நெடுமாறன் மனுதாக்கல் செய்தார். அங்கு பிணை மறுக்கப்பட்டது. பின்னர் செங்கல்பட்டு நீதிமன்றத்தில் மனு செய்தார். அங்கும் பிணை மறுக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து உயர் நீதிமன்றத்தில் நெடுமாறன் மனுதாக்கல் செய்தார். மனுவை நேற்று விசாரித்த நீதிபதி ராஜன், நெடுமாறனுக்கு பிணை வழங்கி உத்தரவிட்டார்.

# 'சார்க்' உச்சி மாநாடு நேற்று முடிவு

இஸ்லாமாபாத்,ஜன.7

'சார்க்' நாடுகளுக்கிடையிலான பிராந்திய ஒத்துழைப்பைப் பலப்படுத்தும் தெற்காசிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டதையடுத்து மூன்று நாள் 'சார்க்' உச்சி மாநாடு நேற்று நிறைவுபெற்றது.

பிராந்திய ஒத்துழைப்பிற்கான மூன்று பத்திரங்களில் 'சார்க்' நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கைபெழுத்திட்டனர். இக்கையெழுத்து நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருந்த 'சார்க' நாடுகளின் தலைவர்கள் கைகளைத்தட்டி அதனை வரவேற்றனர்.

2006ஆம் ஆண்டு முதல் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை நடைமுறைக்கு கொண்டுவருவதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஒப்பந்தத்தின் கீழ் பாகிஸ்தான், இந்தியா, இலங்கை ஆகியவை முதல் ஏழு ஆண்டுகளுக்குள் தீர்வைகளை பூச்சியம் முதல் 5 சதவீதத்துக்கு இடைப்பட்ட விகிதத்தில் குறைக்கவிருக்கின்றன.

பங்காளதேஷ், நேபாளம், பூட்டான், மாலைதீவு என்பன 10 ஆண்டுகளில் இந்த நடைமுறையைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட ஒரு திட்டத்தை வரைவதென வும் இந்த நாடுகள் இணங்கியுள்ளன.

# சீனா - தாய்வான் இடையே மீண்டும் விரிசல் அதிகரிப்பு!

தைபே,ஜன.7

தாய்வான் தனது சுதந்திரத்தை வலியுறுத்தி நடத்தவுள்ள பொது வாக்கெடுப்பினால், சீனாவுக்கும் தாய்வானுக்கும் இடையிலான விரிசல்கள் அதிகரித்து வருகின்றன.வாக்கெடுப்பை நடத்தவிடாமல் தாய்வான் மீது சீனா போர் தொடுக்கலாம் என்று அச்சமும் எழுந்துள்ளது.

சீனா அருகில் உள்ள தீவு தாய்வான். இது தனிநாடு போல் செயல்பட்டு வருகிறது. ஆனால், தாய்வானைத் தனி நாடாக சீனா அங்கீகரிக்கவில்லை. சீனாவில் இருந்து பிரிந்து போன ஒரு மாகாணமாகவே அது கருதுகிறது.

இந்த நிலையில் எதிர்வரும் மார்ச் மாதம் தாய்வானை தனிநாடாக்குவது குறித்து பொது வாக்கெடுப்பை நடத்த தாய்வான் ஜனாதிபதி சென் திட்டமிட்டுள்ளார். குறிபார்த்து நிறுத்தப்பட்டு இருக்கும் ஏவுகணைகளை அகற்ற வேண்டும் என்றும் தாய்வான் கூறுகிறது. இது குறித்தும் அன்றைய தின வாக்கெடுப்பில் மக்களின் கருத்து அறியப்படும்.

இந்த வாக்கெடுப்பு நிறைவேற்றப்படுமானால் அதைக்காட்டி சட்டபூர்வமாக தாய்வான் விடுதலை கோரும் என்று சீனா கருதுகிறது. இதனால், வாக்கெடுப்பை தடுத்து நிறுத்த சீனா முயற்சி செய்கிறது.

வாக்கெடுப்பு நடத்தினால் தாய்வான் மீது சீனா போர் தொடுக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. அமெரிக்காவும் அப்படித்தான் கருதுகிறது. எனவே, போரைத் தடுப்பதற்காக வாக்கெடுப்பு நடத்த வேண்டாம் என தாய்வானை அமெரிக்கா எச்சரிக்கை செய்துள்ளது.

ஆனால், வாக்கெடுப்பு நடத்துவதை தாய்வான் கைவிடுகிற நிலையில் இல்லை. அப்படி கைவிடாமல் அது பிடிவாதமாக இருந்தால் அதை வழிக்குக் கொண்டு வர அமெரிக்கா, தாய்வான் மீது பொருளாதார ரீதியில் நடவடிக்கை எடுக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் முதற்கட்டமாக தாய்வானில் உள்ள அமெரிக்கப் பிரதிநிதிகள் அலுவலகங்களை மூடிவிட அது தீர்மானம் எடுக்கலாம் என்று கூறப்படுகிறது.

1979ஆம் ஆண்டு சீனாவுடன் நட்புறவு ஏற்பட்ட பின்பு தாய்வானுடன் உள்ள தூதரக உறவை அமெரிக்கா முறித்துக்கொண்டது. அதன்பிறகுதான் பிரதிநிதிகள் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய - பாகிஸ்தான் பேச்சு அடுத்த மாதம் ஆரம்பிக்கும்



இஸ்லாமாபாத்,ஜன.7

சுமார் ஐம்பது வருடங்களாகத் தொடர்ந்து வரும் பகைமையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான பேச்சுக்களை பாகிஸ்தானும் இந்தியாவும் ஆரம்பிக்கவுள்ளன. அடுத்த மாதம் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளன.

இரு நாட்டு வெளிவிவகார அமைச்சர்களும் இணைந்து வெளியிட்ட அறிக்கையில் தமது பேச்சுக்கள் காஷ்மீர் விவகாரம் உட்பட அனைத்து விடயங்களையும் தொட்டுச் சென்றதாக தெரிவித்துள்ளன.

"இது இணக்கப்பாட்டுக்கு கிடைத்த வெற்றி. இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகளுக்கு கிடைத்த வெற்றி" என்று பாகிஸ்தானிய வெளிவிவகார அமைச்சர் குர்திஷ் கசூரி செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இந்த வெற்றி இந்திய - பாகிஸ்தான் மக்களுடையதும் என்றும் அது முழுத் தெற்காசியாவுக்குமே பொருந்தும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

எனினும் இந்த சமாதான முயற்சி தொடர்ந்து கொண்டிருப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சின்ஹா தெரிவித்தார்.

பெப்ரவரி பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பும் இந்தியப் பிரதமர் வாஜ்பாயும் இணங்கியுள்ளனர்.

தெற்காசிய நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இஸ்லாமாபாத் சென்றிருந்த இந்தியப் பிரதமர் வாஜ்பாய் நேற்றுமுன்தினம் பாக். அதிபர் முஷாரப்பை சந்தித்து ஒரு மணி நேரத்துக்கு அதிகமாகவும் பேசியிருநதார். அதன் பின்னரே இந்த ஆச்சரியகரமான அறிவிப்பு வெளிவந்துள்ளது.

இரண்டு வருடங்களுக்கு முன்னரும் இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையில் இந்தியாவில் பேச்சு நடநதது. எனினும், அவர்களால் எந்த இணக்கமான தீர்வுக்கும் வரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

# ஈரானியத் தலைநகரினை மாற்றுவது பற்றி யோசனை

## பூகம்பத்தை அடுத்து நடவடிக்கை

ஈரான் தலைநகரை தெஹ்ரானிலிருந்து மாற்றுவது குறித்து ஈரான் பாதுகாப்புத்துறை ஆராய்ந்து வருகிறது.

இத்தகவலை அந்நாட்டின் உயர் [illegible]லை தேசிய பாதுகாப்பு கவுன்சில் தலைவர் ஹஸன் ரவ்ஹானி தெரிவித்தார்.

அண்மையில், பாம் நகரில் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. அதில் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். ஏராளமான பொருள்சேதமும் நேர்ந்தது; நாடு பேரழிவைச் சந்தித்தது.

இதையடுத்து, தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், தலைநகரை தெஹ்ரானிலிருந்து மாற்ற வேண்டியது அவசியம் என்று ஹஸன் ரவ்ஹானி தெரிவித்தார்.

1991 ஆம் ஆண்டுமுதலே இந்த யோசனை இருந்து வருகிறது. ஆனால், இப்போதுதான் அதற்கு முக்கியத்துவம் கிடைத்துள்ளது என்றார் அவர்.

ஈரானில் 150 ஆண்டுகளுக்கு ஒரு முறை கடும் நிலநடுக்கம் ஏற்படும் வாய்ப்புகள் உண்டு. இதற்கு முன் 1830 ஆம் ஆண்டில் பாரிய நிலநடுக்கம் ஏற்பட்டது என்று வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

தெஹ்ரான் இப்போது நெரிசல் மிகுந்து, உயர்ந்த கட்டடங்கள் உள்ள நகராக மாறிவிட்டதால், நில நடுக்கம் ஏற்பட்டால் மீட்புக் குழுவின் பணி மிகவும் கடுமையாக இருக்கக்கூடும் என்று அவர்கள் கவலை தெரிவித்தனர்.

## பூனை இறைச்சிக்குத் தடை



சீனாவில் கடந்த ஆண்டு சார்ஸ் நோய் பரவியதால் 300 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். தற்போது அங்கு மீண்டும் சார்ஸ் நோய் ஏற்படுவதற்கான அறிகுறி தோன்றியுள்ளது. குவான்சு பகுதியில் இளைஞர் ஒருவருக்கு சார்ஸ் நோய் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சீனர்கள் உண்ணும் காட்டுப் பூனை மற்றும் வனவிலங்குகளாலேயே அங்கு அதிகம் சார்ஸ் பரவுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் காட்டு விலங்குகளில் சார்ஸை பரப்பும் 'கரோனா' என்ற வைரஸ் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து வன விலங்குகளை விற்பனை செய்யும் கடைகளை மூடிவிடவும் 10,000 காட்டுப் பூனைகளை அழித்துவிடவும் குவாஸ்டஸ் மாகாண நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. இதன் காரணமாக இப்பொழுது அங்குள்ள பெரும்பாலான சீனர்கள் பூனைக் கறியை விட்டுவிட்டு எலிக் கறி உண்பதில் நாட்டம் காட்டுகின்றனர்.

இங்கே பூனை ஒன்று சமைப்பதற்கு தயார்படுத்தப்படுவதை படத்தில் காணலாம்.

# லிபியா மீதான பொருளாதாரத் தடை தொடரும் என்று அமெரிக்கா அறிவிப்பு!

சென்லூசியஸ்,ஜன.7

லிபியா மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடை தொடர்ந்து அமுலில் இருக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் அறிவித்திருக்கிறார்.

லிபியா பேரழிவு ஆயுதங்களைத் தயாரித்து வருகிறது. அது நிறுத்தப்படவேண்டும். அதேவேளை, அந்நாடுக்கு ஐ.நா. ஆயுத பரிசோதகர்கள் சென்று பரிசோதனை நடவடிக்கைகளில் ஈடுபட லிபியா அனுமதிக்க வேண்டும் என்று அமெரிக்கா முன்னர் விடுத்த கோரிக்கையை லிபியா ஏற்றிருந்தது. இதையடுத்து இரு நாடுகளுக்கும் இடையில் சுமுக உறவு ஏற்படுவதற்கான சமிக்ஞைகள் தென்பட்டன.

இத்தருணத்தில், அமெரிக்கா, லிபியா மீது 1986இல் விதித்த பொருளாதாரத் தடையை உடன் நீக்க வேண்டும் என்று லிபியா அரசு அமெரிக்காவுக்கு அழுத்தம் கொடுத்தது.

ஆனால், ஜனாதிபதி புஷ் விடுத்துள்ள தற்போதைய அறிவிப்பால் லிபியாவுக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

அவர் இது குறித்துத் தெரிவித்திருப்பதாவது:-

பேரழிவு ஆயுதங்களை அழிப்பது தொடர்பாக லிபியா வழங்கிய உறுதிமொழியைச் சரியாகப் பின்பற்றினால் - அதற்கு உரிய நடவடிக்கைகளை - மேற்கொண்டால் - அந்நாட்டின் மீதான பொருளாதாரத் தடையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

லிபியா தொடர்பான பிரச்சினைகள் தொடர்பான தீர்வில் முன்னேற்றங்கள் காணப்பட்டாலும் கூட, சிக்கல் முழுமையாகத் தீர்க்கப்படவில்லை.

அதனால், தேசிய அவசர நிலைமையைக் கருத்திற்கொண்டு லிபியா மீதான பொருளாதாரத் தடையை முழுமையாகப் பேணுவதை உறுதி செய்து கொள்வது அத்தியாவசியமாகிறது.

இந்த விடயங்கள் தொடர்பாக லிபியா உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டால், அமெரிக்காவும் லிபியாவின் நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து உரிய பதில் நடவடிக்கை எடுக்கும்.

இப்படி அவர் தெரிவித்திருக்கிறார். தடை நீக்கும் விடயத்தில் லிபியாவுக்கு அமெரிக்க ஜனாதிபதி இந்த நிபந்தனை விதித்து, அறிவித்திருக்கும்போதும், இவ்வருட இறுதியில் லிபியா மீதான சில தடைகளை நீக்குவது குறித்து அமெரிக்கா ஆலோசித்து வருகிறதெனவும், இது குறித்து இன்னமும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# மதகுரு கொலை!

பாகிஸ்தானில் கத்தோலிக்க மத குரு ஒருவர் இனம்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

லாகூர் செல்வதற்காக கனேவால் ரயில் நிலையத்துக்குச் சென்ற அவரை, துப்பாக்கிகள் சகிதம் வந்த சிலர் பொதுமக்கள் கண்முன்பாகவே சுட்டுக்கொன்றுவிட்டு தப்பியோடி விடடனர்.

பொலீஸார் இது குறித்துக் கூறுகையில்:-

தீவிரவாதிகளின் செயலாகத்தான் இது இருக்கும். இதுவரை மத குருவின் கொலையுடன் சம்பந்தப்பட்ட எவரும் கைது செய்யப்படவில்லை. பொதுமக்கள் கண்முன்னே இக்கொலை நடந்தாலும், மத குருவை சுட்டுக்கொன்றவர்கள் யார்? என்பது குறித்து எவருக்குமே தெரியாது. இது குறித்து விசாரணை செய்து வருகிறோம் - என்றார்.

"மதகுருவின் உடலில் மூன்று குண்டுகள் பாய்ந்தன. அந்த இடத்திலேயே அவர் சரிந்து விழுந்து விட்டார்" - என்று சம்பவத்தை நேரில் பார்த்த பெண் ஒருவர் கூறியிருக்கிறார்.

# விளையாட்டரங்கில் குண்டு வெடித்து பிலிப்பைன்ஸில் பதினொருபேர் மரணம்!

மணிலா,ஜன.7

தெற்கு பிலிப்பைன்ஸில் உள்ள விளையாட்டு அரங்கில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் 11பேர் பலியாகினர்; 68 பேர் காயம் அடைந்தனர்.

பராங் நகரில் இந்தத் துயரச் சம்பவம் நடந்தது. கூடைப்பந்து ஆட்டத்தைப் பார்க்க அரங்குக்கு ஏராளமானோர் வந்திருந்தனர்.

இவர்களில் நகர ஆளுநர் விவென்சியோ படாகவும் ஒருவர். இவரை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று பொலீஸார் தெரிவித்தனர். ஆனால் சம்பவத்தில் அவர் காயத்துடன் தப்பி விட்டார்.

விபத்துக்குள்ளான அனைவரும் கடாபடோ நகர மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

தாக்குதலுக்கு அரசியல் விரோதம் காரணமாக இருக்குமோ என்ற சந்தேகமும் பொலீஸாருக்கு உள்ளது. காயம் அடைந்தவர்களில் பெண் பொலீஸின் 11 மாதக் குழந்தையும் ஒன்று. இதுவரை எந்த அமைப்பும் தாக்குதலுக்குப் பொறுப்பேற்கவில்லை. இதற்கு முன் 3 தடவைகள் ஆளுநரை இலக்கு வைத்து தாக்குதல்கள நடந்துள்ளன. விளையாட்டு அரங்குக்கு வெளியே வேறு ஒருவருடன் பேசிக்கொண்டிருந்ததால் இந்தத் தாக்குதலில் அவர் அதிஷ்ட வசமாகத் தப்பி விட்டார்.

இந்தச் சம்பவத்தில் அவரது பற்கள் சிதறிவிட்டன. குண்டுச் சிதறல்கள் பாய்ந்ததில் அவருக்குக் காயம் ஏற்பட்டது; மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள அவர் தேறி வருகிறார். (ம)

# 450 மாடுகளைக் கொல்ல அமெரிக்கா அதிரடி முடிவு!

வாஷிங்ரன்,ஜன.7

450இற்கும் மேற்பட்ட மாடுகளைக் கொல்ல அதிரடி முடிவை அமெரிக்கா எடுத்திருக்கிறது.

'மேட் கௌவ்' எனப்படும் விசர் நோய், மாடு ஒன்றுக்கு தொற்றியமையே மேற்படி முடிவுக்குக் காரணம்.

கடந்த மாதம் அமெரிக்க மாடு ஒன்றுக்கு விசர் நோய் தொற்றியமை கண்டுபிடிக்கப்பட்டது.

உடனடியாக அந்தப் பண்ணையில் இருந்த மாடுகள் அனைத்தும் தனிமைப்படுத்தப்பட்டன. பரிசோதனையில் விசர் நோய் தொற்றியிருப்பது உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து, அமெரிக்க மாட்டிறைச்சியை இறக்குமதி செய்வதை பெரும்பாலான நாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்திவிட்டன. இதனால், அமெரிக்க பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது.

இந்நிலையில், தமது பொருளாதாரத்தை நிமிர்த்தும் வகையிலும், விசர் நோய் ஏனைய மாடுகளுக்குப் பரவுவதைத் தடுக்கும் வகையிலும் மாடுகளைக் கொல்வது என்று அமெரிக்கா முடிவு செய்திருக்கிறது.

விசர் நோய் பாதிப்புக்குள்ளாகலாம் என்று கருதப்படும் 450 இற்கும் மேற்பட்ட மாடுகள் முதல் கட்டமாக கொல்லப்படவுள்ளன என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம)

# தியாகி அறக்கொடை நிறுவனம்

தியாகி அறக்கொடை நிறுவனம், இன்று புதன்கிழமை தனது மூன்றாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறது.

இந்த நிறுவனம், நலிவுற்ற மக்களின் மேம்பாட்டுக்காக கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் போன்ற துறைகளில் பணியாற்றி வருகின்றது. இந்த நிறுவனத்தின் திட்டங்கள், தமிழர் தாயகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அத்துடன் பேருவளை, கேகாலை, ஜாஎல, இரத்தினபுரி போன்ற தென்பகுதிப் பிரதேசங்களிலும் இதன் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நீண்டகால யுத்தத்தின் கோரப் பிடிக்குள் சிக்குண்டமையினால் எமது தேசம், மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. தியாகி அறக்கொடை நிறுவனம், இந்தத் தேவையை அறிந்து காலத்துக்கேற்ற வகையில் தனது செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றது.

இந்த நிறுவனம், யாழ்.நல்லூரைச் சேர்ந்தவரும் தற்போது சுவிற்ஸர்லாந்தில் வசித்து வருபவருமான வாமதேவா தியாகேந்திரனின் நிதிப் பங்களிப்போடு செயற்பட்டு வருகின்றமை குறிப்பிட வேண்டியதாகும்.

தியாகி அறக்கொடை நிறுவனம் மேற்கொண்டுவரும் முக்கிய செயல் திட்டங்களில் சிலவருமாறு:-

★ வறிய குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 600 திறமையான மாணவர்களுக்கு கல்விக்காக மாதாந்தம் உதவுத்தொகை வழங்கப்படுகிறது.

★ வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட, உழைப்பாளிகளற்ற 139 குடும்பங்களுக்கு நிரந்தர வருமானத்தைத் தேடும்வரை மாதாந்த உதவுத் தொகை வழங்கப்படுகிறது.

★ இலவச ஆங்கில வகுப்புகள் நடத்தப்படுகிறது.

★ கிராமங்களில் இலவச மருத்துவசேவை மேற்கொள்ளப்படுகிறது.

★ புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 40 நோயாளர்களுக்கு மாதாந்தம் உதவுத்தொகை வழங்கப்படுகிறது.

★ சுயதொழில் பயிற்சிக்காக மூன்று இடங்களில் இலவச தையல் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டு அவை இயங்கி வருகின்றன.

★ சுயதொழில் முயற்சிக்கடன் வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

தியாகி அறக்கொடை நிறுவனம், தனது சேவையை இந்த ஆண்டு மேலும் விஸ்தரிக்கவுள்ளது.

தற்போது ஆயிரத்து 616 பாடசாலை மாணவர்கள் தியாகி அறக்கொடை நிறுவனத்தின் கல்விச் செயற்றிட்டங்கள் மூலம் நன்மையடைந்து வருகின்றனர். தமிழர் தாயகப் பகுதியைச் சேர்ந்த மேலும் ஆயிரம் மாணவர்கள் இந்த ஆண்டு முதல் மேற்படி திட்டத்தின்கீழ் நன்மைபெறவுள்ளனர்.

கச்சாயில் அமைந்துள்ள இலவச தையல் பயிற்சி நிலையம்



யாழ்ப்பாணம், கைதடி மற்றும் கச்சாய் ஆகிய இடங்களில் உள்ள தையல் பயிற்சி நிலையங்களுக்கு இந்த ஆண்டு மேலும் 65 மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் வசதி குறைந்த நிலையில் உள்ள 15 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு அங்கு நடமாடும் சுகாதார சேவைகளை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் வன்னிப் பெருநிலப் பரப்பிலும் நடைமுறைப்படுத்தப்படும்.

யாழ்.மாவட்டம் மற்றும் வன்னிப் பெருநிலப்பரப்பில் மேற்கொள்ளப்படும் சுயதொழில் முயற்சிக்கடன் திட்டம் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டதிலுள்ள தெரிவு செய்யப்படும் நூறு விதவைகளுக்கு மாதாந்த உதவுத்தொகை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நல்லூரில் இயங்கி வரும் ஆங்கில வகுப்புகளுக்கு மேலதிகமாக கச்சாயிலும் 50மாணவர்கள் கொண்ட புதிய ஆங்கில வகுப்பு ஒன்றை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வறிய குடும்பங்களிலுள்ள மாணவர்களின் தொழில்நுட்ப அறிவை விருத்தி செய்யும் வகையில் தகவல் தொழில்நுட்பப் பயிற்சி நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.




இலவச மருத்துவ முகாம் ஒன்றில்....

இவற்றுடன் வன்னி மாவட்டத்திலுள்ள வசதி குறைந்த கிராமம் ஒன்று தெரிவு செய்யப்படும். அந்தக் கிராமத்தை சகல விதத்திலும் தன்னிறைவுள்ள கிராமமாக மாற்றுவதற்கான ஒட்டுமொத்த செயற்றிட்டம ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டங்களுக்கு மேலதிகமாக தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் உதவிகளை தொடர்ந்து மேற்கொள்ளவும் இந்நிறுவனத்தின் பொதுச்சபை அங்கீகாரம் அளித்துள்ளது.

- ராஜபுத்திரன்

# ஆனந்தக்காட்சியாம் ஆருத்திரா தரிசனம்

இன்று மார்கழித் திருவாதிரை. ஆலயங்களில் ஆருத்திரா தரிசனம் சிறப்பாக நடைபெறும் நாள். இது மிகவும் விசேடமும் புனிதமும் மகிமையும் நிறைந்த ஒரு நாளாகும். இன்று பரங்கருணைத் தடங்கலாகிய ஸ்ரீபரமேஸ்வரன் தில்லைச் சிதம்பரத்திலே கனகசபையின் கண்ணே திருநடனமிடுகின்ற திருக்கோலக்காட்சி பக்திபூர்வமானது, காணக் கண்கோடி வேண்டும்.

### மார்கழி மகிமை

மார்கழி பிறந்து விட்டாலே சிவனடியார்களுக்குக் கொண்டாட்டந்தான். மாதங்களிற் சிறந்தது மார்கழி. இந்த மார்கழி முழுவதும் வீட்டு வாசலில் மெழுகிக் கோலமிட்டுப் பிள்ளையார் பிடித்து வைத்து, மங்களகரமாகக் காட்சியளிக்கும் சைவ இல்லங்கள் லட்சுமீகரமாக விளங்குவதைப் பரக்கக் காணலாம். ஆலயங்கள் தோறும் அதிகாலையிலேயே எம்பெருமானுக்கு விசேட பூசை, அபிஷேக, ஆராதனைகள் ஆரம்பமாகிவிடும். அடியார்கள் அனைவரும் அதிகாலையில் எழுந்து நீராடி சந்தியாவந்தனம் செய்து தவக்கோலம் புனைந்து சிவக்கோலமாக சிவசிந்தனையுடன் திருவாசகம் பாடிக்கொண்டே சிவாலய தரிசனஞ் செய்வார்கள்.

நெற்றியில் திருநீறு துலங்க, கழுத்தில் உருத்திராட்சமாலை இலங்க, திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை, திருப்பாவைப் பாடல்களை இசைத்தவண்ணம் ஆங்காங்கே பஜனைக் கோஷ்டிகளும், கூட்டுப் பிரார்த்தனைகளும் வீதிவலம் வரும் போது நம்மை அறியாமலே நமக்குத் தெய்வசிந்தனையை ஏற்படுத்தி விடுகிறது.

## இன்று மார்கழித் திருவாதிரை

### அருட்காட்சி

ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெருஞ் சோதியாக விளங்குகின்ற பொன்னம்பலத்தாடும் அம்பலவாணன் கனகசபையின் கண்ணே திருநடனமிடுவதனால்தான் இந்த உலகமே இயங்குகின்றது.

*"குனித்த புருவமும் கொவ்வைச்*
*செவ்வாயிற் குமிண் சிரிப்பும்*
*பனித்த சடையும் பவளம் போல்*
*மேனியிற் பால் வெண்ணீறும்*
*இனித்தமுடைய எடுத்த*
*பொற்பாதமும் காணப்பெற்றால்*
*மனிதப் பிறவியும் வேண்டுவதே*
*இந்த மாநிலத்தே"*

என்றபடி இந்த மானிடப்பிறவி எடுத்ததனால்தான் இந்த அரிய காட்சியைக் காணக்கூடியதாக, அரிய வாய்ப்புக் கிடைத்தாகக் கூறும் பாங்கு வியக்கத்தக்கது.

### பிறவிப்பயன்

அதுமாத்திரமின்றி, இந்தப்பிறவி எடுத்ததன் பயன் இறைவனுக்குத் தொண்டு செய்தலேயாகும். ஆதலினால் இந்த உடம்பு இறைவன் தந்தது. அது அவனுக்கே சொந்தமானது. இந்த வகையில் பார்த்தால், அவன் ஆட்டுவிக்கின்றான். நாம் ஆடுகின்றோம். அவனன்றி ஓரணுவும் அசையாது. அவனுடைய பேரருட்கருணை இருந்தால்தான் நாம் அவனை வழிபாடு செய்யமுடியும். "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்ற சிவபுராண வரிகள் இதனைப் புலப்படுத்தி நிற்கின்றன.

ஈழத்துச் சிதம்பரத்திலும் நல்லூர் சிவன்கோயிலும் இந்த ஆனந்தமயமான அற்புதக்காட்சியைக் கண்குளிரக் காணலாம். அதிகாலையிலேயே அடியார்கள் அனைவரும் பக்தி மேலீட்டுடன் ஆலயத்தில் கூடி விடுவார்கள்.

தில்லை நடராஜப் பெருமான் திருத்தாண்டவமாடும் கோலாகலமான பக்திரசம் ததும்பும் ரம்மியமான காட்சியைக் காண்பதற்கு நாம் பூர்வ ஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண்டும்.

எம்பெருமானுக்கு திருநீறு, சந்தனம், குங்குமம், பால், இளநீர், தேன், கரும்பு, முக்கனிகள், அன்னம் முதலியவற்றால் அபிஷேகமாகி விசேட தீபாராதனை, பூசைகள் என்பன நடைபெறும்.

### உள்ளத்தைத் தொடும் உருக்கமான காட்சி

அடியார்கள் புடைசூழ - பக்தர் வெள்ளத்தின் நடுவிலே தோணி ஒன்று மிதந்து வருதுபோல - நடராஜர் ஆடி ஆடி வரும் அழகுக் காட்சி உள்ளத்தைத் தொடவல்ல உருக்கமான காட்சியாகும்.

ஆ என்றால் பசு. ருத்திரன் - என்றால் சிவபெருமான். ஆகவே பசுவையும் பரமசிவனையும் ஒன்றாக வழிபடும் தினமே ஆருத்திரா தரிசன நாள் எனப்படுகிறது.

- பரமபக்தன் -

# வாசகர் திருமுகம்

## சட்ட அங்கீகாரமின்றி மக்களிடம் முத்திரைக்குப் பணம் அறவிட முடியாது

தங்களது 2003.12.19ஆம் திகதி உதயன் நாளிதழில் "சேதுகாவலன்" என்ற பெயரில் வெளியிடப்பட்ட "முத்திரை வரி தொடர்பாக உறுதியான முடிவு எட்டப்படுமா?" என்ற தலையங்கம் உடைய கட்டுரை, சட்டப்படியும், நேர்மையாகவும் ஒழுங்காகவும் நொத்தாரிஸ் தொழில் செய்யும் என்னைப் போன்றவர்களை அவமானப்படுத்தியும், மக்கள் மத்தியில் கேவலப்படுத்தியும் உள்ளதுடன் எமக்கு அவமானத்தையும், வேதனையையும் உண்டாக்கியுள்ளது.

ஏனெனில் முத்திரைக் கட்டணம் இன்றி உறுதி எழுதுபவரில் நானும் ஒருவராகும். தங்களது பத்திரிகையில் "நொத்தாரிசுகள் சிலர் சட்டத்தையும் சுற்றறிக்கையும் துருவி ஆராய்ந்து அதிலிருந்த தெளிவற்ற தன்மையை தமக்குச் சாதகமாக்கினார்கள். அதன் மூலம் முத்திரை ஒட்டுவதை தடுத்தனர்" என்று எம்மை மக்கள் மத்தியில் கேவலமாகவும் சட்டவிரோதமாக செயற்படுபவர்களாகவும் காட்டி எமக்கு மன வேதனையையும் அவமானத்தையும் உண்டாக்கியுள்ளீர்கள்.

மேலும், அக்கட்டுரையில் "யாழ்ப்பாணத்தில் உள்ள சட்டத்தரணிகள் சங்கத்தினர் உட்பட" பலர் நடவடிக்கை எடுத்துள்ளனர். என்று பொய்யான விவரம் கொடுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் சட்டத்தரணி சங்கம் இதுவரை இப்பிரச்சினை சம்பந்தமாக எதுவித கூட்டமும் கூடவில்லை என்றும் தீர்மானம் எடுக்கவில்லை என்றும் தெரிவிக்கிறேன். அதே நேரம் எனது நண்பரும் யாழ். சட்டத்தரணி சங்க செயலாளருமான க. கேசவனும் முத்திரைக் கட்டணம் இன்றி உறுதி எழுதி வருகிறார் எனவும் அறியத்தருகிறேன்.

எனது நண்பர்களும், யாழ்.நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டத்தரணிகளும் நொத்தாரிசுகளுமான அ.விநாயகமூர்த்தி, என்.ரவிராஜ், என்.ஸ்ரீகாந்தா போன்றவர்களும் முத்திரைக் கட்டணமின்றி உறுதி எழுதி வருகின்றனர் என்று அறியத் தருகிறேன்.

மேலும் நான் தெரிவிப்பதாவது, கௌரவ நிதியமைச்சரும் ஜனாதிபதி சட்டத்திரணியுமான கே.என்.சொக்ஸி அவர்களால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு சட்டமாக்கப்பட்ட இல.11/2002ஆம் இலக்க நிதிச் சட்டப்படி 1982ஆம் வருட 43ஆம் இலக்க முத்திரை வரிச் சட்டம் 2002.5.01ஆம் திகதியிலிருந்து ரத்துச் செய்யப்பட்டுள்ளது. என்றும், மாகாணசபைகளுக்கு அரசியலமைப்பின் பிரகாரம் வழங்கப்பட்ட நிதி சேகரிக்கும் அதிகாரத்தையும் மறுக்கவில்லை என்றும், ஆனால் வடகிழக்கு மாகாணசபையே இதுவரை சட்ட ஏற்பாடுகளை (FINANCIAL STATUS) இயற்றவில்லை என்றும், எனவே எதுவித சட்ட அங்கீகாரமின்றி பொதுமக்களிடம் முத்திரைக்கு பணம் அறவிட எமக்கு அதிகாரம் இல்லை என்றும் தெரிவிக்கிறேன்.

கொழும்பு சட்டமா அதிபரும் தேசிய இறைவரி ஆணையாளரும் பதிவாளர் நாயகமும் முத்திரை வரி வடகிழக்கு மாகாணத்தில் அறவிட சட்ட ஏற்பாடுகள் இல்லை என திட்டவட்டமாக அறிக்கையிட்டுள்ளனர். வடகிழக்கு மாகாண பிரதிபதிவாளர் நாயகமும் முத்திரைக் கட்டணம் அறவிட நிதிச்சட்ட ஏற்பாடுகள் (FINANCIAL STATUS) இல்லை எனத் தெரிவித்துள்ளனர்.

மீண்டும், 2003.4.17ஆம் திகதியுடைய 'உதயனில்' "வடக்குக் கிழக்கில் நொத்தாரிசுமார் பணமோசடியில்" என்று செய்தி வெளியிட்டு முத்திரைக் கட்டணம் அறவிடும் நொத்தாரிசுகளை மோசடி காரராக காட்டப்பட்டுள்ளது.

தற்போது 19.12.2003ஆம் திகதி 'உதயனில்' முத்திரைக் கட்டணமின்றி உறுதி எழுதுபவர்களை சட்டத்தை தமக்கு சாதகமாக்குகின்றனர் என்று எழுதப்பட்டுள்ளது.

மேலும் "சேதுகாவலன்" என்ற பெயர்வழியின் கட்டுரைக்குப் பதிலாக நான் கூறுவது என்னவெனில், இலங்கையில் வடகிழக்கு மாகாணம் ஒரு தனித்துவமானதும், தமிழ் பேசும் மக்களது தாயகமாகவும் இருந்து வருகின்றது. அப்பகுதி மக்கள் மீது வரி அறவிட மாகாண சபைக்கு அப்பகுதி மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளாலேயே சட்டம் இயற்ற முடியும். அல்லது தமிழ் பேசும் மக்களின் ஏகப்பிரதிநிதிகளால் கோரப்படும் இடைக்கால நிர்வாக சபையாலேயே சட்டம் இயற்ற முடியும். அது கூட குறித்த மாகாணசபைத் தேர்தல் அல்லது இடைக்கால நிர்வாகம் அமைக்க அனுமதிக்கப்பட்ட திகதிக்கு பின்னரே முத்திரை வரி அறவிட சட்டம் உருவாக்க முடியும். அதற்குமுன் முத்திரை வரி அறவிட முடியாது என்றும் தெரிவிக்கிறேன். எனவே தற்சமயம் முத்திரைவரி இன்று எழுதப்படும் உறுதி களுக்கு முத்திரைவரி இனிமேல் செலுத்த வேண்டிய சட்ட ஏற்பாடுகள் இல்லை என்றும் தெரிவிக்கிறேன்.

க.சிவசுப்பிரமணியம்
சட்டத்தரணி - நொத்தாரிஸ்
*ஊரெழு, சுன்னாகம்.*

## வடக்கு – கிழக்கு மாகாண சபை இலக்கிய பரிசுகள் பற்றி...

வடக்கு - கிழக்கு மாகாணசபை இலக்கியப் பரிசில்கள் பற்றி மு.கணபதிப்பிள்ளை, இரா.சுரேந்திரபாலன் ஆகியோரின் கடிதங்கள் படித்தேன். இரண்டிலுமே உண்மை உள்ளது. இவ்விடயம் பற்றி இலக்கியகாரர் யாவரும் நியாயங்கேட்டுக் குரல் எழுப்பவேண்டும்.

மேலும், இரா.சுரேந்திரபாலன் என்பவரின் கடிதத்தில், 2002ஆம் ஆண்டு கவிதைக்கான பரிசுகளில் ஒன்று மொழிபெயர்ப்பிற்காகக் கொடுக்கப்பட்டதாகக் குறைப்படுகிறார். ஆனால், அதற்கு முந்திய ஆண்டில். கவிதைக்கான ஒட்டுமொத்தப் பரிசும் ஒரு மொழிபெயர்ப்புத் தொகுப் பிற்கே வழங்கப்பட்டமையை அவர் மறந்தாரா? மறைத்தாரா?

மேலும், அந்த ஆண்டில்(2001) சிறுகதைக்கான பரிசு இரண்டாம் பதிப்பாக வந்த ஒரு தொகுப்பிற்கு வழங்கப்பட்டது உண்மையே. அவ்வாண்டில் நானறிந்த மட்டில் யாழ்ப்பாணத்திலிருந்தே சிறப்பான இரு தொகுதிகள் (ஒன்று பிரபல எழுத்தாளர் சாந்தன் எழுதியது. மற்றது சி.சுதந்திராஜா எழுதியது) வெளியாகியிருந்தன. இவை எவ்வாறு தவிர்க்கப்பட்டன? எழுதியவர்கள்தான் பரிசீலனைக்கு அனுப்பவில்லையா? இது போன்ற விவரங்களை வெளியுலகு அறியவேண்டும்.

ஜோ.சகாயசீலன்
*சுண்டிக்குளி.*

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

உதயன்

## அமெரிக்கத் தலையீடு அவசியம்தானா?

இலங்கை உள்விடயங்களில் அமெரிக்காவின் பங்களிப்பு - தலையீடு - அதிகரித்து வருவது அப்பட்டமாகத் தெரிகின்றது.

★ அமெரிக்காவின் கரையோரக் காவல்படை மற்றும் பாதுகாப்பு பந்தோபஸ்து ஒத்துழைப்புச் செயலணி ஆகியவற்றின் கூட்டு அணி ஒன்று விரைவில் கொழும்பு வரவிருக்கின்றது.

★ அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள் சபையின் சர்வதேச தொடர்புகள் கமிட்டியின் உயர்குழு ஒன்று மூன்றுநாள் விஜயமாக எதிர்வரும் 15 ஆம் திகதி கொழும்பு வருகின்றது. தற்போது இலங்கையில் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள அதிகாரப்போட்டியால் உருவாகியிருக்கும் அரசமைப்பு நெருக்கடியைத் தணிப்பதற்கான வழிவகைகள் குறித்தும் இங்கு இக்குழு ஆராயும்.

★ இலங்கை அமைதிமுயற்சிகள் தடைப்பட்டிருப்பது குறித்து அமெரிக்கா கவலை வெளியிட்டிருக்கின்றது. அந்நாட்டின் பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் இந்நிலைமை குறித்து விசனம் தெரிவித்திருக்கின்றார். இராஜாங்க அமைச்சர் கொலின்பவல் இவ்விவகாரம் குறித்து இலங்கை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் தனித்தனியாகக் கடிதம் எழுதியிருக்கின்றார்.

- கடந்த சில தினங்களாகப் பத்திரிகைகளிலும், ஏனைய ஊடகங்களிலும் வெளிவந்த செய்திகள் இவை.

இராணுவ ஒத்துழைப்பு நடவடிக்கை என்ற பெயரில அமெரிக்க இராணுவப் பங்களிப்பு இலங்கையில் அதிகரித்து வருவது பற்றிய செய்திகளும் அடிக்கடி வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

ஒருபுறம் இராணுவ ஒத்துழைப்பு வழங்குவதாக சிங்களப் பேரினவாதத்துக்கு ஆசை காட்டிக்கொண்டு, மறுபுறம் அரசியல் விடயங்கள், விவகாரங்கள் ஊடாக மெல்ல ஊடுருவும் தனது பாணியை கனகச்சிதமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது அமெரிக்கா.

ஆரம்பத்தில் இனப்பிரச்சினையையும் தற்போது தெற்கு அரசியல் நெருக்கடியையும் சாட்டாக வைத்துக கொண்டு மெல்ல மெல்ல இலங்கை விடயத்தைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து, இங்கு காலூன்றும் முயற்சியை செவ்வனே முன்னெடுத்து வருகின்றது அது.

தனக்கு விரும்பிய - தனது பூகோள, வல்லாதிக்க நலன்களுக்குத் தேவைப்படுகின்ற - ஏதேனும் ஒரு நாட்டின் மீது கண்வைத்தால், அந்த நாட்டில் உள்ள பிரச்சினையை ஒருபுறம் மறைமுக மாகத் தூண்டிவிட்டுக்கொண்டு, மறுபுறம் அதனையே சாட்டாக வைத்து அதில் தலையிட்டு அங்கு தனது ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டுவது அமெரிக்காவுக்குக் கைவந்த கலை. உலகநாடுகள் பலவற்றிலும் தற்போது அமெரிக்க ஏகாதிபத்தியம் அரங்கேற்றிக் கொண்டிருக்கும் பல்வேறு நாடகங்களின் மூலக்கதை - கரு - இதுதான்.

மனிதப் பேரழிவுக்கு வழிசெய்யும் ஆயுதங்களை அழித்தல், பயங்கரவாதத்தை ஒழித்தல் என்ற புனைகதைகள் எல்லாம் இந்த நாடகங்களில் போடப்படும வெற்றுக்கோஷங்கள்.

இந்தப் பூகோளப்பந்தையே பல தடவைகள் அழிக்கப் போதுமான அனு ஆயுதங்களைத் தயாரித்து வைத்துக்கொண்டுதான் - அந்த ஆயுதத்தை மனித குலத்துக்கு எதிராகப் பயன்படுத்திய ஒரேயொரு நாடு என்ற கீழ்த்தரமான தகுதியை வைத்துக்கொண்டு தான் - அத்தகைய ஆயுதங்களை நினைத்துக்கூடப் பார்க்காத ஈராக் போன்ற நாட்டின் மீது, அவ்வாறான ஆயுதங்களை அது வைத்திருக்கின்றது என்ற பொய்க்குற்றச்சாட்டைச் சுமத்தியபடி ஆக்கிரமிப்புப்போா நடத்தியது அமெரிக்கா.

பலஸ்தீனர்களுக்கு நியாயமான உரிமை கிடைப்பதைத் தடுத்துக்கொண்டு அவர்களுக்கு எதிராகப் பயங்கரவாதத் தாக்குதலை நடத்துகின்றது இஸ்ரேல். அந்த நாட்டின் பயங்கரவாதத்தாக்குதல் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பும், ஊக்கமும் அளித்தபடியே உலகில் தான் விரும்பிய இடங்களில் மட்டும் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற தனது புரட்டு நடவடிக்கையைக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது அமெரிக்கா.

இவ்வாறு கீழத்தரப்போக்கில் செயற்படும் அமெரிக்காவைத்தான் இலங்கையில் நடைபெறும் சமாதானப் பேச்சுக்களில் மேன்மேலும் தலையிட்டு, தன்னை ஈடுபடுத்திக்கொள்ளும்படி அழைப்பு விடுத்திருக்கின்றார் அமைச்சர் மகேஸ்வரன்.

'ஆடு நனையுதென்று ஓநாய் கவலைப்படுவது போல' இலங்கை சமாதான முயற்சிகள் தடைப்பட்டிருப்பது குறித்து நீலிக்கண்ணீர் வடிக்கின்றது அமெரிக்கா.

ஓநாய்க்கு வெற்றிலை வைக்கும் வேலையை அமைச்சர் மகேஸ்வரன் போன்றோர் தவிர்த்துக் கொள்வது நல்லது.

# சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் சில விளம்பரத்திற்காகவே பணியாற்றுகின்றன

## தமிழர் புனர்வாழ்வு நிறுவன உதவிப்பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.ஜன.7

சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் சில குடாநாட்டில் விளம்பரத்திற்காகவே பணியாற்றி வருகின்றன. இவற்றிடம் இருந்து எமது மக்களுக்கு உருப்படியான உதவிகள் ஏதும் கிடைக்கவில்லை.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழர் புனர்வாழ்வுக்கழக சிரேஷ்ட உதவிப்பணிப்பாளர் இனியவன்.

அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் 13 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் நேற்றுமுன்தினம் அதன் அலுவலகத தில் இடம்பெற்றது.

அங்கு உரையாற்றிய இனியவன் மேலும் தெரிவித்ததாவது:-

பல நெருக்கடிகளுக்கு மத்தியில் தனது பணிகளை திறம்பட முன்னெடுத்து குடாநாட்டு மக்களுக்கு சிறந்ததொரு சேவையை யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் வழங்கியுள்ளது.

இக்கட்டான காலப்பகுதிகளில் அரசசார்பற்ற நிறுவனங்களின இணையம் மேற்கொண்ட சேவைகளை எவராலும் மறந்துவிட முடியாது. எனவே, அது தனது பணியைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

இங்கே பல சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் விளம்பரத்திற்காகத் தமது சேவையை மேற்கொள்கின்றன. இவற்றிடமிருந்து எமது மக்களுக்கு உருப்படியான உதவிகள் எதுவும் கிடைக்கவில்லை. எனவே, இந்த சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் ஏமாற்று வித்தையை எமது மக்களுக்குத் தெளிவாக எடுத்துக்காட்ட வேண்டிய தேவைப்பாடு எமக்குண்டு - என்றார்.

இக்கூட்டத்தில் ஆசியுரை வழங்கிய 'கியூடெக்' நிறுவனத்தின் இயக்குநர் வண.பிதா சி.ஜி.ஜெயக்குமார் தனதுரையில் கூறியதாவது:-

அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் அங்கம் வகிக்கும் பலர் ஊதியம் இன்றி அல்லது குறைந்தளவு ஊதியத்துடன் தமது சேவையை மேற்கொண்டு வருகிறார்கள். சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களில் பணிபுரிவோரைப் போன்ற வசதிகள் இங்குள்ளவர்களுக்கு இல்லை. எனினும், அவர்கள் தமது சேவையைத் திறம்பட மேற்கொள்கின்றார்கள். தொடர்ந்தும் அவர்கள் இப்பணியை முன்னெடுக்கவேண்டும்.

எமது மக்களுக்குத் தொடர்ந்து தொண்டாற்றுவதே அவர்கள நோக்கமாக இருக்கவேண்டும். அதிலிருந்து தவறிவிடக்கூடாது - என்றார்.

இவ்வாண்டுக்கான நிர்வாகத் தெரிவும் இக்கூட்டத்தில் இடம் பெற்றது. அரசசார்பற்ற நிறுவனங்களின் புதிய தலைவராக வி.ஸ்ரீ.சக்திவேலும், செயலாளராக எஸ்.ஜோசப்பும், பொருளாளராக புனிதவதியும் தெரிவானார்கள். (ம-8)

# குடாநாட்டில் பருவமழை பொய்த்ததால் இருபது சதவீதமான நெற்பயிர் அழிவு!

யாழ்ப்பாணம்,ஜன.7

குடாநாட்டில் 8ஆயிரத்து 900ஹெக்டேயர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்ட நெல்லில் சுமார் 20 சதவீதம் வரட்சியால முற்றாக அழிந்துவிட்டது. அடுத்த ஒருவார காலத்துக்குள் மழைபெய்யாவிட்டால் அழிவுவீதம் 50சதவீதமாக உயர வாய்ப்பு உள்ளது.

- இப்படிக் கூறினார் விவசாயத் திணைக்கள யாழ்.அலுவக அதிகாரி எஸ்.சிறிபாலசுந்தரம்.

குடாநாட்டில் பருவமழை வீழ்ச்சி குறைந்திருப்பதால் நெற்செய்கையாளருக்கு ஏற்பட்ட பாதிப்புக் குறித்துக் கேட்டபோதே அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் இம்முறை பெரும்போகத்துக்கு 8ஆயிரத்து 900 ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. டிசெம்பர் மாதத்தில் மழை குறைவாகப்பெய்த காரணத்தால் மேட்டுநிலத்தில் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்கள் அழிந்துள்ளன.

தீவுப்பகுதி, வலிகாமம் மேற்கு, வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பகுதிகளில் மேட்டுநிலத்தில் செய்கை பண்ணப்பட்ட நெல்லில் 20சதவீதம் அழிந்துவிட்டது. அடுத்த ஒருவாரத்தில் போதியளவு மழைபெய்யாவிட்டால் அழிவு வீதம் 50சதவீதமாக அதிகரிக்கும் சாத்தியம் உள்ளது.

கடந்த காலங்களில் ஒரு ஹெக்டேயர் நிலப்பரப்பில் 3.4 மெற்றிக்தொன் விளைச்சல் ஏற்பட்டது. ஆனால், இம்முறை 2.5 மெற்றிக்தொன்னாக விளைச்சல் வீழ்ச்சி காணலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

இங்குள்ள விவசாயிகள் நெல்லுக்குக் காப்புறுதி செய்யாததால் நஷ்டஈடு கிடைக்கும் வாய்ப்பு இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ஜ-3-6)

# தெற்கு அரசியல் நெருக்கடியைத் தீர்க்க பௌத்த பீடாதிபதிகள் உதவ வேண்டும்

## நல்லை ஆதீன முதல்வர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜன.7

தெற்கில் நிலவும் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வுகண்டு சமாதானப் பேச்சுக்கள் தொடர பௌத்த பீடாதிபதிகள் தமது செல்வாக்கைப் பயன்படுத்தவேண்டும்.

- இப்படி கோரிக்கை விடுத்தார் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.

நயினாதீவில் ரஜமகா விகாரையில் புத்தர் சிலை ஒன்றை நேற்றுமுன்தினம் பிரதிஷ்டை செய்தபின் இடம்பெற்ற நிகழ்வில் பேசுகையிலேயே ஆதீனமுதல்வர் மேற்கண்டவாறு கூறினார்.

அஸ்கிரிய பீடாதிபதி வண.உடுகம புத்தரசித்த மகாநாயக்க தேரரின் ஆசியுரையுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

தெற்கில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகள் காரணமாக சமாதானமுயற்சிகள் தடைப்பட்டுள்ளன. முன்னெடுக்கப்பட்ட சமாதானமுயற்சிகள் காரணமாக நிம்மதியான வாழ்க்கை அமையும் எனத் தமிழ்மக்கள் எதிர்பார்த்தனர்.

அரசியல் நெருக்கடி காரணமாகத் தடைப்பட்டிருக்கும் சமாதானமுயற்சிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும். தெற்கு அரசியலில் செல்வாக்குள்ள பௌத்த பீடாதிபதிகள் தெற்கு நெருக்கடிக்குத் தீர்வைக்கண்டு சமாதானமுயற்சிகள் தொடர உதவவேண்டும்.

இன்று இங்கு சகல மதங்களைச் சேர்ந்தவர்களும் வீற்றிருக்கின்றோம். சகல மதத்தவர்களும் ஒன்றுபட்டுச் செயற்பட இத்தகைய நிகழ்வுகள் உதவும் - என்றார்.

யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் பேசுகையில் கூறியதாவது:-

மூன்று மதங்களையும் கொண்டுள்ள இந்தப் பிரதேசத்தில் இன்று நாங்கள் சங்கமித்துள்ளோம். மணிமேகலை கூறும் அம்மன் கோயிலையும், மகாவம்சம் கூறும் பௌத்த விகாரையையும் கத்தோலிக்க, முஸ்லிம் ஆலயங்களையும் கொண்டு விளங்கும் இந்தப்பிரதேசம் யுத்தத்தால் பாதிக்கப்படவில்லை. சகல மக்களும் ஒன்றுபட்டு வாழும் நிலை காணப்படுகின்றது - என்றார்.

இந்நிகழ்வில் பலர் உரையாற்றினர். (ம-3)

# சேதமடைந்த பாலங்களுக்குப் பதிலாக 'ரெடிமேட்' பாலங்களே பொருத்தப்படும்

யாழ்ப்பாணம்,ஜன.7

யாழ்.மாவட்டத்தில் கடந்தகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நான்கு பாலங்கள் 'ரெடிமேட்' பாலங்கள் மூலம் புனரமைக்கப்படவுள்ளன.

பிரிட்டிஷ் அரசு வழங்கிய நிதி உதவியுடன் புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சு இந்த 'ரெடிமேட்' பாலங்களை கொள்வனவு செய்துள்ளது.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு தற்போது ராகமவில் வைக்கப்பட்டுள்ள இந்தப் பாலங்கள் விரைவில் இங்கு எடுத்துவரப்படவுள்ளன.

வண்ணாத்திப்பாலம், கைதடி, நாவற்குழி, தொண்டமனாறு ஆகிய பகுதிகளில் பிரதான வீதிகளில் பாலங்கள் சேதமடைந்துள்ள இடங்களில் இந்த ரெடிமேட் பாலங்கள் பொருத்தப்படவுள்ளன.

சேதமடைந்த பாலங்களை அப்படியே புனரமைத்து போக்குவரத்தை மேற்கொள்வதற்குக் கால அவகாசம் தேவையென்பதால் இந்த ரெடிமேட் பாலங்கள் பொருத்தப்படவுள்ளன.

'ரெடிமேட்' பாலங்கள் பொருத்தும்போது ஓரிரு தினங்களுக்கு மட்டுமே அந்தப் பாதை ஊடாக போக்குவரத்தைத தடைசெய்ய வேண்டியிருக்கும் என்று கூறப்பட்டது. (ஐ-3)

### நாளை

மார்கழி 24
வியாழக்கிழமை
(08.01.2004)
திதி:பிரதமை
முன்னிரவு 11.04வரை.
நட்சத்திரம்:புநர்பூசம்
மாலை 6.19 வரை
சுபநேரம்:8.02-9.32
ராகுகாலம்:02.02-03.32
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

சத்தியம் ஒன்று அதனை ஆராதனை செய்யும் வழிகளோ பல.

# ஆஸி.தமிழர் கழகத் தலைவர் ஈழலிங்கம் யாழ். வருகை



யாழ்ப்பாணம்,ஜன.7

தெல்லிப்பழையில் இன்று இடம் பெறும் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 79 ஆவது பிறந்த நாள் அறநிதிய விழாவில் கலந்துகொள்வதற்காக ஆஸ்திரேலிய ஈழத்தமிழர் கழகத் தலைவர் வை.ஈழலிங்கம் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில் இன்று நடைபெறும் நிகழ்வில் 'ஈழத்தமிழ் மாணவர்கள் கருணை நிதியம்' என்னும் புலமைப்பரிசில் திட்டத்தை அவர் அங்குரார்ப்பணம் செய்துவைப்பார்.

ஆஸ்திரேலிய ஈழத்தமிழர் கழகத்தின் தலைவராகப் பணியாற்றிப் புலம்பெயர்ந்த மக்களுக்கும், ஈழத்தில் இன்னல்படும் மக்களுக்கும் உதவிகளை வழங்கிவருபவர் ஈழலிங்கம். ஆஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளராகவும் அவர் பணிபுரிகிறார்.

இவர் யாழ். பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட சமயம் அதன் முதலாவது நிதியாளராகப் பணிபுரிந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஜ-37)

## சித்த மருத்துவ மாணவர்களுக்கான அறிவித்தல்

சித்தமருத்துவ மாணவர்கள் அனைவரையும் நாளை (08.01.2004) வியாழக்கிழமை மு.ப. 10மணிக்கு சித்த மருத்துவத்துறை கைதடிக்கு சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

(26860) சித்தமருத்துவ மாணவர் ஒன்றியம். (26-21-14)

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 1935 - 03 - 15



மறைவு 2002 - 12 - 19

**அமரர் சின்னக்குட்டி வல்லிபுரம் (ஆனந்தம்)**

திதி: 07-01-2004

பாசத்தின் முழு உருவே! அன்பின் ஒளி விளக்கே
உங்கள் அன்பு முகம் காண்பதெப்போ?
ஆசைக்குரல் கேட்பதெப்போ?
ஆண்டொன்று சென்றாலென்ன
ஆதவன் தான் மாறி வந்தாலென்ன
அன்பின் ஐயாவை மறந்திடாது எம்மனம்.

விலாசம்:
மட்டுவில் கிழக்கு,
வாங்களாவடி, சாவகச்சேரி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மனைவி. மக்கள். மருமக்கள். பேரப்பிள்ளைகள்.

(26829)(34-21-19-14)

## நீங்காத நினைவில் ஆண்டுகள் மூன்று

மலர்வு 02 - 09 - 1945



உதிர்வு 09 - 01 - 2001

**திருமதி யோகமலர் நடராஜா**

திதி: 07-01-2004

நான் எல்லாம் நாம் உயர நீ உழைத்தாய்
அம்மா! சீரான கல்வி பெற்று நான் உயர நீ வழிவகுத்தாய்
காலம் எல்லாம் நீ காணக்காத்திருந்த பேர்த்தியைக்
காணமுன் நீ சென்ற வேதனை
தாங்க முடியவில்லையம்மா!

'லிங்க வாசா'
நெல்லியடி,
கரவெட்டி.

கணவர்,
மகன், மருமகள்,
பேர்த்தி.

(26603) (21-19-14)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 1936 - 11 - 05



உதிர்வு 2003 - 12 - 08

**அமரர் கந்தையா சந்திரசேகரம்**

(ஓய்வுபெற்ற இ.போ.ச.சாரதி, S.N.J வாகன சாரதி)

அன்பின் அணிகலமே பாசத்தின் உறைவிடமே!
குடும்பத்தின் குலவிளக்கே குவலயத்தின் உத்தமரே!
பரிதவிக்க விட்டு விட்டு எங்கு ஐயா சென்றீர்?
உறவுகள் மட்டுமல்ல தேசமே தேடுகின்றது
மனங்களில் மறையாத மாணிக்கமே ~ உங்கள்
ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ஓம் சாந்தி!! ஓம்சாந்தி!!

நிரந்தர முகவரி:
'முரளி வாசம்'
No.114, பழந்த மகளிர் திட்டம்.
மிருசுவில்.

தற்காலிக முகவரி:
கண்டுவில் வீதி
டச்சுவீதி,
சாவகச்சேரி.

உங்கள் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

(26854)(21-14)

## திருவெம்பாவை வீதி பஜனை

அரியாலை, ஜன.7

திருவெம்பாவை பூஜையை முன்னிட்டு ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலய இந்து இளைஞர் தொண்டர்கள் தினமும் அதிகாலை 3.30மணிக்கு வீதிப்பஜனையை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-17)

## கோப்பாய் ஆஸ்பத்திரியில் 57 ஆயிரம் பேருக்கு சிகிச்சை

வலி.கிழக்கு,ஜன.7

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் கடந்த ஆண்டு 57 ஆயிரத்து 40 பேர் சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்தியசாலையின் பதிவுகள தெரிவிக்கின்றன.

இவர்களில் 55ஆயிரம் பேர் வெளிநோயாளர் பிரிவிலும் 2 ஆயிரத்து 40 பேர் விடுதிகளில் தங்கியிருந்தும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

ஒரு மாதத்தில் சராசரியாக 150 பேர் நாய்களினால் கடியுண்டு சிகிச்சை பெற்றுள்ளதாகவும் பதிவுகள் தெரிவிக்கின்றன. (ம-10-180)

## உரிமையாளர்கள் இல்லாத சமயத்தில் வீட்டில் திருட்டு

யாழ்ப்பாணம்,ஜன.7

வீட்டில் உள்ளவர்கள் ஆலய வழிபாட்டுக்குச் சென்ற வேளையில் திருடர்களால் 2 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

சங்கரத்தை வீதி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த போதகர் ஜெயசீலன் என்பவரது வீட்டிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

புதுவருட தினத்துக்கு முதல்நாள நள்ளிரவுப் பூசைக்காக வீட்டில் உள்ள அனைவரும் தேவாலயத்துககுச் சென்றதைப் பயன்படுத்தியே திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

நகைகள், கையடக்கத் தொலைபேசி வீடியோக் கமெரா, கடவுச்சீட்டு என்பனவே திருடப்பட்டுள்ளன. இத் திருட்டுச் சம்பவம் தொடர்பாகப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-10-6)

## விடுதிக்கட்டடம் அமைக்கும் பணி

சண்டிலிப்பாய்,ஜன.7

வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலையில் வைத்திய அதிகாரிக்கான விடுதிக் கட்டடம் (வசிப்பிடம்) அமைகதும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த விடுதியை அமைபபதற்கு 'நீர்ப் (Neerp) திட்டத்தின கீழ் 30லட்சத்து 76ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - இவ் வைத்திய சாலைக்கு சுற்றுமதில் ஒன்றை நிர்மாணிப்பதற்கு இப்பகுதியிலுள்ள பொது மக்கள் நிதி சேகரித்து வருவதாக தெரியவருகின்றது. தற்போது சுற்றுமதில் எதுவும் இங்கு இல்லாமையால் கட்டாக்காலி ஆடு மாடுகளின் தொல்லை இருந்து வருகின்றது. (ஐ-135)

**அறிவகம்**
அச்சுவேலி
**A/L- 2006 கலைப்பிரிவு**
ஆரம்பம்:
07-01-2004
புதன் காலை
8.மணி
(26836)

**SKY COMPUTER SYSTEMS**

| | |
|---|---|
| MS Office | Visual Basic |
| Auto Cad | Photo Shop |
| Hard Ware | Page maker |
| Quick Books | Corel Draw |
| Accounting | Advanced Excel |

Note:
1.மாணவர்கள் ஒவ்வொருவரும தனித்தனியான முறையில் கவனிக்கப்படுவர்.
2.உங்களுக்கு வசதியான நேரத்தைத் தேர்நதெடுத்துக் கொள்ளலாம்.
❋சான்றிதழ்கள் யாவும் கொழும்பு தலைமைக் காரியாலயத்திலிருந்து பெற்றுத்தரப்படும். ரூ.15.000/= இலிருந்து கணனிகளைப் பெற்றுக்கொள்ளலாம். மொனிட்டர் 15" - 6000/=
❋ ஆறுமாதகால உத்தரவாதத்துடன் கொள்வனவு செய்பவர்களுக்கு 15 நாள் இலவசப் பயிற்சி.
Petm IV 1800MHZ
Computer with Multi media
(Intel or Motherboard) 56,500/=
தேவை
☆ ரைப் செற்றர்
**Type Setter**
நேரில் வரவும
**SKY COMPUTER SYSTEMS**
109, Kandy Road, Chundikuli, Jaffna
(கச்சேரிக்கு அருகில்). ☎ 0777283654.
Today You Learn
Tomorrow you lead.

**Jaffna College Institute of Technology**
Vaddukoddai, Jaffna,
Sri Lanka.

**The Following Courses will Commence From 12th January 2004**
Certificate Courses in Business & Scientific Applications

- MS Word
- MS Excel
- MS Access
- MS Power Point

Duration: 3-4 Months
Fees: 2,500/-

❖ Facilities :- Library, Hostel & Sports
Application Forms are Available at

☞ **JCIT, Vaddukoddai.**
☞ **Undergraduate Department, Jaffna College.**
*(Hospital Road, Jaffna).*

Director
**Jaffna College Institute of Technology, Vaddukoddai.**
T.P.: 060 2213139 E-Mail :- jcit @ sltnet.lk.

# மரண அறிவித்தல்கள்

## செல்வன் கந்தையா இராசமோகன் (ராசு)

கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட செல்வன் கந்தையா இராசமோகன் 06-12-2003 லண்டனில் காலமானார்.

அன்னார் இளையவன் கந்தையா (ஓய்வுபெற்ற சுகாதார உத்தியோகத்தர்) - சீதேவி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிறிஸ்கந்தராசா மற்றும் செந்தில்நாதன் (சுகாதாரத் திணைக்களம், சாவகச்சேரி), சறோஜினி தேவி (சுவிஸ்), பவளராணி, சத்தியசீலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஈஸ்வரன் (சுவிஸ்), செல்வரத்தினம் (தபாலகம், வேலணை), கஜேந்திரன், மல்லிகாதேவி, பத்மாதேவி, விஜிதா ஆகியோரின் மைத்துனரும் சர்மிளா, செந்தூரன், ரவிசங்கர், யதுஷன், இந்துஜன் ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07-01-2004) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊத்தல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நூலக வீதி,
கைதடி தெற்கு,
கைதடி. (26855) (21-14-19)

தகவல்:
இ.கந்தையா (தந்தை).
ஈஸ்வரன்
(மைத்துனன்-சுவிஸ்)

## குணரட்ணம் சித்திரம்

உடுப்பிட்டி, சந்தனத்தறையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட குணரட்ணம் சித்திரம் 05-01-2004 திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குணரத்தினத்தின் அன்பு மனைவியும் டாக்டர் ஜெயசீலன் (கண்டி), திருமதி T.ஜெயகுணறஞ்சினி (கனடா), பிறேமாவதி, பிறேமகுமார் (நல்லூர்), கலாவதி (வவுனியா), கலாநிதி (டென்மார்க்), மைனாவதி (ஏழாலை தெற்கு), மைனசீலன் (அச்சுவேலி), பிரபாகர், கிருபாகர், பிரதீபன் (கண்டி), பிரதாபன் (லண்டன்), தர்சினி (உடுப்பிட்டி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தேவமணிமோகன், திருமதி P.சுகந்தி, அண்ட்றூ, திருமதி M.அனோ, திருமதி K.காஞ்சனா, திருமதி P.லியினா ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி செ.அழகம்மாவின் சகோதரியும் பிறின்ஸ் றேச்சல் (கனடா), ஸ்டீபன் (டென்மார்க்), இந்திரஜித், சிந்துஜா (கண்டி), சோபிகா, பிறேமிகா, சுபிகா (நல்லூர்), அன்ட்றுயா, ஞானிஸ்தி (ஏழாலை), மாஷா (அச்சுவேலி), அபிஷேகர், ஹரிஸ், சேகா (உடுப்பிட்டி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07-01-2004) புதன்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் (உடுப்பிட்டி) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

சந்தனத்தறை,
உடுப்பிட்டி. (26852)

தகவல்:
G.D. மைனசீலன் (மகன்).
(21-14-19)

## வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற கல்வித்திணைக்கள கட்டட பொறியியலாளர், காரைநகர்)

காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகவும் நடுத்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம் நேற்று (6.1.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை பரிமளத்தின் சிரேஷ்ட புத்திரனும் கைலாசபிள்ளை அபிராமன் தம்பதிகளின் மருமகனும் அன்னலட்சுமியின் கணவரும் காலஞ்சென்ற சிங்காரம் மற்றும் சிந்தாமணி (மலேசியா), காலஞ்சென்ற சோதிமணி மற்றும் சுந்தரம்மா (கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரனும் சின்னம்மா, காலஞ்சென்றவர்களான Dr.கனகரத்தினம், நாகலிங்கம், அரசரட்ணம் (ஓய்வுபெற்ற பொறியியலாளர், மின்சாரசபை ) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நடுத்தெரு
காரைநகர். (26868)(21-35-14)

*தகவல்:*
விக்னேஸ்வரன் சிவராஜினி
(றாஜி -மருமகள்)




# வெறுப்பது இதயமல்ல மூளையே!

நம்மை யாராவது மட்டம் தட்டிப் பேசும்போது கவலையடையும் நாம் "இதயமே நீ கலங்காதே" என்று சொல்வதுண்டு. ஆனால், இனிமேல் அவ்வாறு சொல்வது தவறென்றாகிவிடும். "மூளையே நீ கலங்காதே" என்று தான் சொல்லவேண்டும். மனதில் ஏற்படும் சஞ்சலங்களைப் பிரதிபலிப்பது நமது இதயமல்ல நமது மூளையே என ஆஸ்திரேலியாவின் மக்குவாரிப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் நிரூபித்துள்ளார்கள்.

உடலில் ஏற்படும் நோவையும் வெறுப்பினால் மனதில் உண்டாகும் சஞ்சலத்தையும் மூளையின் ஒரே பகுதிதான் உணர்வதாக அவர்கள் கண்டறிந்துள்ளார்கள். தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் மூளை பற்றிய விவரங்களைப் பதிவுசெய்ய உதவும் காந்தப்புல எதிரொலி விம்பங்களின் துணைகொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் இதனைத் தெளிவுபடுத்தின. ஒருவரை விலக்கும் விதமாக மூன்றுபேர் பங்கேற்கும் கணனி விளையாட்டு ஒன்று இதற்காகப் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டது. இக்கணனி விளையாட்டை மாணவர்கள் விளையாடும் போது அவர்களது மூளையின் செயற்பாடுகளைக் காந்தப்புல எதிரொலி விம்பங்களின் துணையுடன் பதிவுசெய்தார்கள் ஆராய்ச்சியாளர்கள். ஒரு மாணவன் தோல்வியடைந்து வெறுப்பேற்றப்பட்ட போது அவனது மூளையின் செயற்பாடு ஆராயப்பட்டது. அப்போது உடல்நோவை அறிய உதவும் பாகமும் மன உணர்வுகளை உணர உதவும் பாகமும் அவனது மூளையில் மிகவும் அதிகமாகச் செயற்பட ஆரம்பித்ததை அவதானிக்க முடிந்தது. (பார்க்க படம்) இந்த ஆய்வின் முடிவு - இதயமே நீ கலங்காதே அல்ல மூளையே நீ கலங்காதே என்பதே.

- தாரணி



# துடுக்குத்தனம் பெறுகிறது ரோபோ

மனிதர்கள் இயந்திரங்களை விரும்புவது இன்று அதிகரித்து விட்டது. அன்றாட வாழ்க்கையில் அவற்றின் பாவனை இன்றியமையாததாகி விட்டது. எதைச் சொன்னாலும் எதிர்த்துப் பேசாது செய்கின்றவை என்பதால் அவை எப்போதுமே வசதியானவை; விரும்பப்படுபவை.

இயந்திர மனிதர்கள் என்று சொல்லப்படும் ரோபோக்களின் பாவனையும் அதிகரித்து வருகின்றது. அவை இயந்திர மனிதனாக இருந்தாலும் மனிதத்தன்மை என்பது அவற்றிடம் இல்லை. இதனால் அவற்றுக்கு மனிதத்தன்மை ஊட்ட ஆராய்ச்சியாளர்கள் முயன்றுகொண்டிருக்கின்றனர்.

ஒருபுறத்தில் மனிதனுக்கு உதவியாய் இருக்கக்கூடிய 'அய்போ' போன்ற ரோபோக்கள் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதேசமயத்தில் மனித உருவத்தை ஒத்த மனிதப் பண்புகளைப் பிரதிபலிக்கக்கூடிய ரோபோக்களை உருவாக்குவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப் படுகின்றன.

கடந்த நவம்பர் மாதம் முன்னேற்றகரமான விஞ்ஞானத்துக்கான அமெரிக்கச் சங்கம் டென்வரில் நடத்திய வருடாந்த மாநாட்டில் மனித உணர்வுகளைப் பிரதிபலிக்கக்கூடிய - மனிதமுகத்தை ஒத்த - ரோபோவின் செயற்பாடுகள் காட்சிப்படுத்தப்பட்டன.

கே - போட் (K-Bot) எனப்படும் இந்த மனித முகம் பொருத்தப்பட்ட - இயல்பு மாறுபடக்கூடிய - ரோபோவை டேவிட் கன்சன் என்பவர் உருவாக்கியுள்ளார். இவர் முன்னர் அமெரிக்காவின் பெரும் பொழுதுபோக்கு நிறுவனமான 'டிஸ்னி லான்ட்டில்' பணியாற்றி வந்தார். தற்போது டெக்ஸாஸ் டாலஸ் பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகிறார்.

இந்த மனிதமுக ரோபோ பொலிமர் (Polyer) எனப்படும் ஒருவகைத் தோலினால் ஆக்கப்பட்டுள்ளது. இந்தத் தோல் மனித முகங்களில் ஏற்படும் பிரதிபலிப்புக்கு ஒத்ததான பிரதிபலிப்பை (உதாரணம் சிரிக்கும்போது ஏற்படும் தோல் சுருக்கங்கள்) காட்டக்கூடியது. முகத்தின் கண்களுக்குப் பதிலாக இரு கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. உங்கள் அசைவுகள் எல்லாவற்றையும் பின்தொடரக்கூடிய திறன் இவற்றுக்கு உண்டு. பொலிமர் தோலுக்குக் கீழே (13ஆம் பக்கம் பார்க்க)



பொலிமர் தோல் முகம்

# இனி இதுதான் நாகரிகம்

உங்களது ஆடைகள் விரைவிலேயே சின்னஞ்சிறிய இயந்திரப்பகுதிகளை உள்ளடக்கியதாக உருமாற்றம் பெற்றுவிடும் என்கிறார்கள் மேற்குல நாகரிக (Fashion) மற்றும் தொழில்நுட்ப நிபுணர்கள்.

ஆள்பாதி ஆடைபாதி என்ற நிலை மாறி விரைவில் ஆடை பாதி இயந்திரம் பாதி என்ற நிலை உருவாகி விடும். ஆனால், வெளியில் இருந்து பார்ப்பதற்கு இது தெரியாது. சாதாரண உடை போன்றே இருக்கும். எனினும் இந்த ஆடைகளை மக்கள் விரும்பும் வகையில் வடிவமைத்து சந்தைக்கு விடுவதில் பொறியியலாளர்களும் ஆடை வடிவமைப்பாளர்களும் கடும் சவால்களை எதிர்நோக்குகின்றனர். மக்களின் வாழ்க்கையை மேலும் எளிதாக்கத்தக்கக் உதவக் கூடிய ஆடைகளை வடிவமைப்பதிலேயே முக்கிய கவனம் செலுததப்படுகிறது. இதனடிப்படையில் கணனி செயற்பாட்டுடன் கூடிய உடைகளே ஆய்வாளர்களின் இலக்கு.

ஏற்கனவே, சில உடைகளில் இத்தகைய தொழில்நுட்ப அம்சங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ஆனிப்பாவனைக் கணனிகளும் ஆடை வடிவத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன.

செல்லிடப்பேசிகள் தற்போது மனிதனின் ஓர் அங்கம் போன்றாகி விட்டது. அத்துடன் மேலைநாடுகளில் நடந்தவாறும் மெல்ல ஓடியவாறும் இசையை





ரசிப்பதும் சாதாரணமானது. இதற்காக 'வயர்'களுடன் கூடிய 'இயர்போன்'கள் மற்றும் கருவிகளைக் காவிச்செல்ல வேண்டிய நிலை இன்று இருக்கிறது. இதைமாற்றி அனைத்தையும் ஆடைகளுக்குள்ளேயே பொருத்தி வைப்பதற்குத் தான் இப்போது முயல்கிறார்கள்.

ஆடையை அணிந்ததும் நீங்கள் கெட்போனை மாட்டிக்கொண்டால் போதும் இசையையும் கேட்கலாம்; செல்லிடப் பேசியிலும் பேசலாம். அப்படி ஓர் ஆடையை உருவாக்கவே மும்முரமான ஆய்வுகள் நடக்கின்றன.

இந்த வடிவத்தில் ஏற்கனவே ஜக்கட் ஒன்று வந்துள்ளது. அதன் மேல் கைப் பகுதியில் தேவையான கட்டுப்பாட்டுச் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. அதனைத் தொட்டு இயக்குவதன் மூலம் நீங்கள் இசையைக் கேட்கலாம்; ரசிக்கலாம்.

இதுபோன்றே இனிவரும் காலங்களில் ஆடையை மேலும் கணனி மயப்படுத்த தொழில்நுட்ப வல்லுநர்களும் பொறியியலாளர்களும் முயன்று கொண்டிருக்கின்றனர். ஆடை வடிவமைப்பு நிறுவனங்கள் இதற்குப் பெரும் ஆதரவு வழங்கி வருகின்றன.

இன்னும் 10 வருடங்களில் 20 வீதமான ஆடை உற்பத்தி நிறுவனங்கள் இத்தகைய கணனிமயப்படுத்தப்பட்ட ஆடைகளை உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வித்தியாசமானதை நோக்கியே நகரும் இந்த உலகில் இனி இதுதான் நாகரிகம் என்றாகிவிடும்.

# 106 மில்லியன் மைல்களுக்கு அப்பால்....



பிரேம்

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ளது பஸடேனா என்ற இடம். அங்குள்ள ஜெட் புரோபுலிஸன் லபோறட்றியில் மிகப்பெரும் விஞ்ஞானிகளும் ஆய்வாளர்களும் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களும் கடந்த 20 நிமிடங்களாக இருக்கைகளின் நுனிகளில் அமர்ந்திருக்கிறார்கள். அதி உச்சப் பதற்றத்துடன் காத்திருக்கிறார்கள்.

ஒருவித மரண அவஸ்தைக்குப் பின்னர் அவர்கள் வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்த கணனித் திரைகளில் சில சமிக்ஞைகள் தெரிகின்றன. அனைத்து அவஸ்தைகளும் மறந்து அவர்கள் துள்ளிக் குதிக்கிறார்கள்; மகிழ்ச்சியில் ஒருவரையொருவர் கட்டித் தழுவிக்கொள்கிறார்கள்; முத்தமிட்டுக் கொள்கிறார்கள்.

செய்தி கேட்டு நாஸா விண்வெளி நிலையத்தில் இருந்த அனைவர் முகங்களிலுமே மகிழச்சிப் புன்னகை. வெற்றிப் பெருமிதம்.

இத்தனைக்கும் காரணம் அவர்கள் அனுப்பி வைத்த 'ஸ்பிரிட்' (Spirit - உற்சாகம்) இயந்திர ஆய்வுக் கலம் (Rover - ரோவர்) செவ்வாயில் பாதுகாப்பாகத் தரையிறங்கி விட்டமைதான். கடந்த ஜூன் மாதத்தில் பூமியில் இருந்து அனுப்பப்பட்ட அது தனது 7 மாதகாலப் பயணத்தை முடித்துக்கொண்டு தற்போது பத்திரமாக செவ்வாயில் தரையிறங்கியுள்ளது.

106 மில்லியன் மைல்களுக்கு அப்பாலிருந்தபடி அது முதலில் கறுப்பு - வெள்ளைப் படத்தையும் பின்னர் கலர் படங்களையும் நாஸா ஆய்வு மையத்துக்கு அனுப்பிவைக்க ஆரம்பித்துள்ளது.

'ஸ்பிரிட்' செவ்வாயில் தரையிறங்கிய கடைசி 6 நிமிடங்கள் அதி உச்சப் பதற்றம் நிறைந்தவை என்கிறார்கள் நாஸா விஞ்ஞானிகள். ஏற்கனவே ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி நிலையமான ஈஸா அனுப்பிய 'பீகிள் - 2 ரோவர்' செவ்வாயில் தரையிறங்கிய சமயம் காணாமற் போயிருந்தது. அதனுடன் இன்னும் தொடர்பை ஏற்படுத்த முடியவில்லை. இந்த நிலையில் 'ஸ்பிரிட்'டின் தரையிறக்கம் கச்சிதமாக இருக்க வேண்டும் என்ற பதற்றம் நாஸா விஞ்ஞானிகளுக்கு.

ஏற்கனவே செவ்வாய்க்கு அனுப்பப்பட்ட இரு விண்கலங்களின் பயணங்கள் தோல்வியில் முடிந்த பின்னர் 'ஸ்பிரிட்'டின் வெற்றி நாஸாவுக்கு அவசியமானதாக இருந்தது. அந்த எதிர்பார்ப்பு வேறு பதற்றத்தை மேலும் அதிகரித்தது.

'ஸ்பிரிட்' வெற்றிகரமாக செவ்வாயில் தரையிறங்கிய சமிக்ஞைகளை அனுப்பத் தொடங்கியதும் நாஸா வல்லுநர்களின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. பிரதான கலத்தில் இருந்து பிரியும் செயற்பாடுகள் மற்றும் தரையிறங்கும் போது ரோவர் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான காற்றுப் பைகளின் செயற்பாடுகள் அனைத்தும் கச்சிதமாக இருந்தன. இதனால் எந்தப் பாதிப்பும் இன்றி 'ஸ்பிரிட்' தரையிறங்கியது.

'ஸ்பிரிட்' தரையிறங்கிய சமயத்தில் அங்கு புழுதிப் புயல் வீசியது. அதனையும் மீறி தரையிறக்கம் வெற்றிகரமாக அமைந்தது என நாஸா தெரிவித்துள்ளது.

செவ்வாயில் தண்ணீருக்கான கனியுப்புக்கள் இருக்கின்றனவா? அதற்கான சாத்தியங்கள் எப்படி? என்பன பற்றி ஆராய்வதுதான் 'ஸ்பிரிட்'டின் முக்கிய பணி. இதற்கு ஏற்ற வகையிலேயே அது வடிவமைக்கப்பட்டுள்ளது.

1997இல் நாஸாவால் செவ்வாய்க்கு அனுப்பப்பட்ட பாத்பைன்டர் விண்கலத்தில் கொண்டு செல்லப்பட்ட சோஜோர்னர் (SoJourner) ரோவர் செவ்வாயில் தரையிறங்கியதன் பின்னர் அங்கு வெற்றிகரமாகத் தரையிறங்கிய ரோவர் 'ஸ்பிரிட்'.

இதன் சகோதர ரோவரான 'ஒப்போசூனிட்டி' (Opportunety - சந்தர்ப்பம்) இந்த மாத இறுதியில் செவ்வாயின் மற்றொரு பகுதியில் தரையிறங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.


'ஸ்பிரிட்' தரையிறங்கியுள்ள பகுதி பள்ளமான பகுதி எனக் கருதப்படும் குசேவ் என்ற இடமாகும். (குசேவ் - நாஸா விஞ்ஞானிகள் இட்ட பெயர்) ஆனால் ஒப்போசூனிட்டி மேட்டுப்பாங்கான மெரிடியானி என்ற இடத்தில் தரையிறங்கும்.

'ஸ்பிரிட்' 6 சக்கரங்களைக் கொண்ட ஊர்ந்து செல்லும் தன்மை வாய்ந்த ஓர் ஆய்வுக் கலம். சூரிய மின் கலங்களின் (Solar) உதவியுடன் இயங்கக்கூடியது.


பூமி நேரப்படி காலையில் 9 மணிக்கு ரோவர் தனது பணியை ஆரம்பிக்கும். பிற்பகல் 2 முதல் 3 மணிவரை அன்றைய தினம் தான் என்ன வேலைகளைச் செய்தேன் என்ற விவரத்தை நாஸா கட்டுப்பாட்டு நிலையத்துக்கு அனுப்பிவைக்கும்.

'ஸ்பிரிட்' தனது தகவல்களை அனுப்புவதற்கும் கட்டுப்பாட்டு நிலையத்தில் இருந்து தொடர் வழிகாட்டல்களை அனுப்புவதற்கும் இடையில் 19 மணி நேர இடைவெளி தேவை என்று நாஸா விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். அப்படிக் கொடுக்கப்படும் வழிகாட்டல்கள் மறுநாள் காலையே ரோவரைச் சென்றடையும்.

தன்னுடைய பணி நேரத்தில் 'ஸ்பிரிட்', (13ஆம் பக்கம் பார்க்க)

















## மாணவனின் சடலம் கரையொதுங்கியது!

யாழ்ப்பாணம்,ஜன.7

பொன்னாலை திருவடி நிலைக் கடலில் குளித்துக்கொண்டிருந்த வேளை அடித்துச்செல்லப்பட்ட பாடசாலை மாணவரின் சடலம் நேற்று முன்தினம் கரை ஒதுங்கியது.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மாணவனான முத்துலிங்கம் காந்தரூபன் (வயது19) என்பவரின் சடலமே கரை ஒதுங்கியது.

மல்லாகம் பதில் நீதிவான் எஸ். வசந்தசேனன் மரணவிசாரணையை நடத்திய பின் உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டது.

(ஒ-3)

# வேலணை பிரதேசசபை

## சந்தைகள், ஆட்டிறைச்சிக்கடைக்கான மீள் கேள்வி அறிவித்தல்-2004

வேலணை பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள் ஆட்டிறைச்சிக் கடை என்பவற்றை 01-01-2004 ஆம் திகதி முதல் 31-12-2004 ஆம் திகதி வரையான காலப் பகுதிகளுக்கு குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் 16-01-2004 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும். 16-01-2004 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணத்தில் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ ஒருவர் சமுகமளிக்கலாம்.

கேள்விப் பத்திரங்கள் 08-01-2004 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 16-01-2004 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை வேலணை பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் கீழ்க் குறிப்பிடப்படும் கேள்வி வைப்பு பணம் கேள்விப் படிவக் கட்டணம் ஆகியவற்றை பணமாக செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரித்து மூலப் பிரதியினை வேலணை பிரதேசசபை தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியிலும் இணைப்பிரதியினை *பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், இல.: 20 செட்டித்தெரு, நல்லூர்* என்ற முகவரிக்கும் அனுப்பிவைத்தல்வேண்டும். இவை பற்றிய மேலதிக விவரங்களை வேலணை பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல: | குத்தகை விவரம் | கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கக் கூடியது. | கேள்விப்பத்திர பணம் மீளளிக்கப்பட மாட்டாது. | ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 01 | வேலணை துறையூர் மீன்சந்தை | 1000/- | 100/- | 125000/- |
| 02 | செட்டிப்புலம் மீன்சந்தை வேலணை | 750/- | 100/- | 30000/- |
| 03 | புங்குடுதீவு மீன்சந்தை | 750/- | 100/- | 25000/- |
| 04 | நயினாதீவு தெற்கு மீன்சந்தை | 1000/- | 100/- | 25000/- |
| 05 | நயினாதீவு வடக்கு மீன்சந்தை | 1000/- | 100/- | 25000/- |
| 06 | வேலணை ஆட்டிறச்சிக்கடை | 750/- | 100/- | 25000/- |

*முக்கிய குறிப்பு:-*

மீன் சந்தைகளுக்கான குத்தகைகள் எடுக்கப்பட்டு வேலணை பிரதேச சபை நிர்வாகத்துடன் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படாவிட்டால் 01-02-2004 ஆம் திகதியிலிருந்து வேலணை பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் பிடிக்கப்படும் மீன்கள் விற்பனைக்காக வெளியிடங்களுக்கு கொண்டு செல்லுதல் முற்றாக தடைசெய்யப்படும்.

வேலணை ஆட்டிறைச்சிக்கடையினை குத்தகைக்கு எடுப்போரே கடையினையும் நிலையத்தையும் சுயமாக அமைத்துக்கொள்ளல் வேண்டும்.

கேள்விப் பத்திரப்பணம், கேள்வித்தொகை ஆகியவற்றுக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 20% (வற்வரி) மேலதிகமாக செலுத்தப்படல்வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் கோருபவர்கள் அடையாள அட்டையினைக் கொண்டுவருதல் வேண்டும்.


*வேலணை பிரதேச சபை,*
*வேலணை.*
*05-01-2004* (சி-32611)(32-11-16)

திரு.செல்லப்பா சண்முகராசா (ஜே.பி.)
செயலாளர்,
வேலணை பிரதேச சபை.




# 3ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
12
02
1934



மறைவு
09
01
2001

## அமரர் சின்னப்பு இரத்தினசபாபதி

(களஞ்சியப் பொறுப்பாளர் - தெல்லிப்பழை)

திதி : பூரணை 07-01-2004

ஐயா என்ற அன்புமுகம்
ஆறி அமர்ந்து இறைவனடி சேர்ந்து
ஆண்டதும் மூன்று ஆகின - இன்னும்
ஆறாத்துயரில் ஆழ்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

போக்காலை வீதி,
உடுப்பிட்டி. (26828)(32-11-16)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில்
15
12
1921



விண்ணுலகில்
18
12
2002

## அமரர் சீனியர் பாலசிங்கம்

திதி: 07.01.2004


மரணம் என்பது நிச்சயம்தான் - இது
எமக்குத் தெரிந்ததுதான் - ஆனால்
உங்கள் இழப்பை தாங்கமுடியவில்லை ஐயா!
ஓர் ஆண்டு என்ன? - எம்
உயிர் உள்ளவரை மறவோம் ஐயா.
என்றும் உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

குமரகோட்டம்,
கோண்டாவில். (26826)(32-11-16)

# ஆறாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
16
08
1936



விண்ணில்
07
01
1998

## அமரர் மாணிக்கம் பொன்னம்பலம்

(Drilling forman-Irrigation Dept., Colombo)

எம்மோடு வாழ்ந்திட்ட
எம் குடும்பத்தின் ஒளிவிளக்கே!
ஆண்டுகள் ஆறு சென்றதையா
ஆறவில்லை எம் துயரம்
கள்ளங் கபடம் இல்லா
கண்டவர் மனம் கவர்ந்த
உங்கள் நினைவலைகள்
எம் மனத்திரையில் அழியாது!
உங்கள் ஆத்மசாந்திக்காக
நித்தம் நாம் விழுகின்றோம்
இறைவன் திருவடியில்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பொற்பதி வீதி,
கொக்குவில். (26838)(32-11-16)

# எண்கணித ஜோதிடம் - 2004

## எண் - 5

5,14,23ஆம் திகதிகளில் பிறந்த நீங்கள் வெற்றியை நோக்கி எப்பொழுதும் பயணஞ்செய்பவர்கள். உங்கள் உழைப்பு வீணாகாது. பண்பாளரான உங்களைப் பலர் நேசிப்பர். எதிலும் வீண்பேச்சு ஆகாது. அடிக கடி முடிந்து போனதை நினைக்காதீர்கள். குழப்பமும் பதற்றமும் இரத்த அழுத்தத்தைத் தூண்டும் என்பதை மறக்காதீர்கள். தியானம் மனதிற்கு அமைதயூட்டும். முடிந்ததை நினைத்து வேதனைப்படுவது முட்டாளதனம் என்பதை நீங்கள் உணரவேண்டும்.

உங்களிடம் திறமை, பக்தி, அன்பு இம்மூன்றும் கலந்து காணப்படும். ஆனால் மனதில் அவ்வப்போது குழப்பம் வந்து போகும். அதேநேரத்தில் எந்த விஷயத்தையும் கொஞ்ச நேரம் சிந்தித்துத் தெளிவான முடிவுக்கு வந்துவிடுவீர்கள். பொதுவாக உங்களிடம் தன்னம்பிக்கை அதிகம் உண்டு. யார் எதைப் பேசினாலும் அதை முழுமையாகக் காது கொடுத்து கேட்கமாட்டீர்கள். மற்றவர்களை முழுமையாகப் பேசவிடமாட்டீர்கள்.

வளவள என்று பேசுபவர்களைக் கண்டாலே உங்களுக்குப் பிடிக்காது. எதையும் உடனுக்குடன் செய்து முடிக்க வேண்டும் என்பதே உங்கள் கொள்கை. பொயிண்ட் பொயிணடாக எதையும் எடுத்துக் கூறுவீர்கள். உங்கள் பேச்சில் பலர் மயங்கி விடுவர். அநியாயத்தை எதிர்த்துப் பேசுவீர்கள். உங்களிடம் ஒரு கவர்ச்சி இருக்கிறது. அன்பாகப் பேசி எப்படிப்பட்ட ஆளையும் மயக்கி விடுவீர்கள். நீங்கள் ஒரு சாதாரண ஆள்கிடையாது.

பணம் இன்று வரும் நாளை போகும். நல்ல மனிதர்கள் கிடைப்பதுதான் அரிது என்று கூறுவீர்கள். தக்க சமயத்தில் கீழ்படிந்து நடப்பீர்கள். 'ஒருவன் கீழ் பணிய முடியாவிட்டால் தலைமை தாங்கத் தகுதியற்றவன' என்று விமர்சிப்பார்கள். இளமையில் போராடினாலும் வயது கூடக் கூட முன்னேற்றப்பாதையில் செல்வீர்கள்.

'செல்வத்திற்குப் பின் வறுமை வருவதைக் காட்டிலும் வறுமைக்குபின் செல்வம் வருவது மேல' என்பது உங்கள தத்துவமாகும்.

பணம் இருந்தால் பத்துப் பேருக்கு உதவி செய்ய மனம தூண்டும். அதே நேரத்தில் பணவுதவி செய்த பின் அது திரும்பி வருமா? வராதா? என்ற குழப்பம் ஏற்படும். பசி என்று யார் கேட்டாலும் உடனே பசிக்கு உணவளிப்பதோ அல்லது அதற்குண்டான பணம் அளிப்பதோ உங்களிடம் உள்ள பெருந்தன்மையாகும். நல்ல மனமும், குணமும் உங்களுக்கு இயற்கையாகவே உண்டு. ஆனால், யாராவது உங்களை ஏமாற்ற நினைத்தால் சரியான எதிரியாக மாறிவிடுவீர்கள்.

நீங்கள் 'பார்த்தால் பசு பாய்ந்தால் புலி' உங்கள் சூழ்ச்சியும் திறமையும் நல்ல விசயங்களுக்காக பயன்படுத்தப்பட்டால் விரைவில் மிகவும் உயர்ந்து விடுவீர்கள். வயதானவர்களை மதிப்பீர்கள் அன்பும் அரவணைப்பும் உங்கள் இரு கண்கள் போன்றது. பொதுவாக நீங்கள் உங்களிடம் யாராவது உண்மையான அன்பு காட்டினால் அவர்களிடம் ஒன்றி விடுவீர்கள்.

அதே நேரத்தில் உங்களிடம் உள்ள தெய்வீக சக்தி எந்த ஒரு பிரச்சினை தோன்றினாலும் காப்பாற்றி விடும். இறைவனை வணங்குதல் வேறு. இறைவனிடம் வேண்டுதல் வேறு. இறைவனை நம்புதல்வேறு. இதில் நம்புதலுக்குத் தான் அதிக சக்தி. 'கடுகளவு இறை நம்பிக்கை இருந்தால் கடலைக் கூட வற்ற வைக்கலாம' என்பது பைபிள் வாக்கு. எங்கு எதைச் சொன்னாலும் எது நல்லதோ அதை உடனே எடுத்துக் கொள்ளும் தன்மை உங்களிடம் என்றும் உண்டு.

தனக்கென்று ஒரு நீதி, பிறருக்கு ஒரு நீதி கூறுவது உங்களுக்குப்பிடிக்காது. அடிக்கடி முடிந்து போன விஷயங்களை நினைத்து வேதனைப்படுவீர்கள். சட்டத்தின் முன் எல்லோரும் சமம்தான் என்று உறுதியாகக் கூறுவீர்கள். எங்கு அக்கிரமம், அநியாயம் நடக்கிறதோ அங்கெல்லாம் உங்கள் நீதிக்குரல் கேட்கும். நாட்டை நல்வழிப்படுத்த பல நல்ல திட்டங்களைப் போட்டுப் பார்ப்பீர்கள். உங்கள் திறமைக்கு நல்ல வாய்ப்புக் கிடைக்கும் காலம் வரப்போகிறது.

அவ்வப்போது சின்னச்சின்ன விஷயங்களுக்குப் பதற்றப்படுவீர்கள். மனதைத் தெளிவாக வைத்துக் கொள்ளப் பழகிக்கொள்ளுங்கள். எதிர்பாராத வகையில் பணம் தேடி வரும். குழந்தைகளினால் மகிழ்ச்சி உண்டு. கெட்டவர்களை அடையாளம் கண்டு ஒதுங்கி விடுவீர்கள். கடனை முடிந்த வரை அடைத்து விடுவீர்கள். ஆனால் வர வேண்டிய பணம் வாயில் போட்ட சவ்வுமிட்டாய் மாதிரி இழுபறியாகத்தான் இருக்கும். எதற்கும் கவலைப் படாதீர்கள். எந்த ஒரு விஷயமும் கொஞ்சம் இழுபறியாகக் கிடந்துதான் வெற்றி பெறும்.

அரசு மற்றும் தனியார் உத்தியோகத்தில் இருப்பவர்கள் உயர்வு பெறுவீர்கள். சிலருக்கு இடமாற்றம் இருக்கும். மேலதிகாரிகளின் அழுத்தம் காணப்படும். உயர் கல்வி கற்போர் முன்னேற்றப் பாதையில் செல்வர். புதிய மனிதர்களின் சந்திப்பும், அவர்களின் ஆதரவும் உங்கள் உயர்வுக்கு வழிவகுக்கும். தொழிற்கல்வி கற்றவர்களுக்கும், வெளிநாடு செல்ல முயன்றவர்களுக்கும் கண்டிப்பாக வெளிநாடு செல்ல வாய்ப்பு உண்டாகும்.

### நோய்

வாத உடல் அமைப்பு கொண்ட உங்களுக்கு கால்வலி, மூட்டுவலி, நரம்பு சம்பந்தப்பட்ட வியாதிகள் தோன்றி மறையும். பொதுவாக கொழுப்பு, எண்ணெய், வறுவல் உணவுகளைக் குறைத்துக்கொள்ளவேண்டும்.

### மாணவர்களுக்கு

இந்த ஆண்டு உங்கள் கல்வியில் சிறு தடைகள் ஏற்பட்ட போதும் அதை வெற்றிகரமாக முடிப்பீர்கள். மேற்படிப்புக்கு முயல்பவர்கள் கூட உயர்வு பெறுவர்.

### குறிப்பு

உங்கள் பெயரில், கையெழுத்தில் அதிர்ஷ்ட எண் வரா விட்டால் முன்னேற்றம் தடைப்படும். இதனால் நீங்கள் கையெழுத்தை சரியாக அமைத்துப் பலன் பெறவேண்டும்.

### மாதப்பலன்கள்

*ஜனவரி:* உல்லாசப் பயணம் மேற்கொள்வீர்கள். வெளிநாட்டுத்தொடர்பு மனதிற்கு மகிழ்ச்சியளிக்கும். காதல் மலரும். புதுப்புது வாய்ப்புகள் வந்து உங்கள் மனதிற்குத் தெம்பளிக்கும். எங்கு சென்றாலும் வரவேற்பு கிடைக்கும். பெரிய மகான்களின் சந்திப்பும், நல்ல மனிதர்களின் உறவும் உங்கள் தகுதியை உயர்த்தும். கொடுக்கல், வாங்கல் திருப்திகரமாகச் செல்லும். தொழிலில் முன்னேற்றம் இருக்கும். எதிர்பாராத நன்மைகள் நடக்கும். வேண்டாத சிந்தனைகள் மனதைக் குழப்பிக்கொண்டிருக்கும். எடுத்த காரியம் எவ்வழியிலும் கைகூடி வரும். ஒப்பந்தம், தரகு, முகவர்கள், நிதிகையாளல் போன்றவற்றால் அதிகலாபம் பெறுவீர்கள். கல்வியில் உயர்வு பெறுவீர்கள்.

*பெப்ரவரி:* பணம் பல வழியில் வந்து சேரும். எடுத்த காரியங்கள் கை கூடும். பெரிய மகான்களின் சந்திப்பும், சுபகாரிய நிகழ்ச்சியும் நடக்கும். புதிய திட்டங்கள் உருவாகும். எதிர்ப்புகள் குறையும். மனம் அடிக்கடி குழம்பும். வாகனத்தால் செலவு உண்டு. வெளியூர் பயணம் செய்வீர்கள். கொடுக்கல், வாங்கல் சிறப்பாக இருக்கும். தொழிலில் புதிய வாய்ப்புகள் வந்து உங்கள் முன்னேற்றத்திற்கு வழிகாட்டும்.

புதிய முயற்சிகள் கை கூடி வரும். காதல் கசக்கும். குடும்பத்தில் அவ்வப்போது வாக்குவாதம் இருக்கும், சளித் தொந்தரவு காணப்படும். நோய்கள் படிப்படியாக குறையும். வீடு வாங்க, விற்க கைகூடும். திடீர் பயணம் மேற்கொள்வீர்கள். திட்டம் போட்டு எதையும் முடித்து விடுவீர்கள். கல்வியில் முன்னேற்றம் உண்டு. உத்தியோகத்தில் ஒருபடி உயரும்.

*மார்ச்:* எடுத்த காரியங்கள் மளமளவெனக் கைகூடிவிடும். பணம் பல வழியில் வந்து சேரும். எதிர்பாராத நன்மைகள் நடக்கும். தூரத்துப் பயணங்கள் செய்வீர்கள். புகழும், அந்தஸ்தும் கூடும். விடாப்பிடியாக எதையும் சாதிப்பீர்கள். பெரிய மனிதர்களின் நட்புக் கிடைக்கும். பகை நீங்கும். சொத்துக்கள் வாங்க, விற்க சிறப்பாக இருக்கும். வேண்டாத பயம் மனதை வாட்டும். திடீரென தெம்பும், தெளிவும் பிறக்கும், ஆடை, ஆபரணம் சேரும், கெட்ட கனவுகள் தோன்றிமறையும் பக்தியில் மனம் லயிக்கும். வெளிநாட்டுத் தொடர்பு உங்கள் மனதிற்கு திருப்தியாக இருக்கும். புதுப்புது யோசனைகள் உங்கள் மனதில் தோன்றிய வண்ணம் இருக்கும். கல்வியில் மேன்மை, உத்தியோகத்தில் உயர்வு உங்கள் மனதிற்கு இதமாக இருக்கும்.

*ஏப்ரல்:* தேவையில்லாத விடயங்களை கற்பனை செய்து குழப்பிக்கொள்வீர்கள். குழப்பமும், தெளவும் மாறி மாறி வரும். சொத்துக்கள் வாங்க, விற்க சிறப்பாக இருக்கும். தேவையில்லாத எதிர்பார்ப்புக்கள் உருவான போதும் பின்பு சரியாகிவிடும். சாப்பாட்டில் ருசி பார்க்கும் உங்களுக்கு சிற்றின்ப ஆசை கூடும். நல்ல சந்தர்ப்பங்கள் உருவாகி கடைசி நேரத்தில் கைநழுவிச் செல்லும். பணம் பல வழியில் வந்து உங்கள் பையை நிரப்பும். சிக்கனமாக இருக்க நினைத்தாலும் செலவைக்கட்டுப்படுத்த முடியாது. உங்களிடம் உதவி பெற்றவர்கள் நன்றி மறந்து விடுவர். கொடுக்கல், வாங்கல் இழுபறியாக இருக்கும். வீடு, வாகனம் இவற்றால் செலவு உண்டு. உறவினர்கள் கடன் கேட்டுத் தொந்தரவு செய்வார்கள்.

*மே:* சிறு விபத்து ஏற்பட்டுத் தப்பிவிடுவீர்கள். வாய் நிதானம், போக்குவரத்தில் நிதானம் தேவை. உங்கள் திட்டங்கள் குறிப்பிட்ட நேரத்தில் நடக்காது. எதிலும் அவசரம் இருக்கும் நண்பர்களிடத்தில் கசப்புணர்வு ஏற்படும். குடும்பத்தில் பிரச்சினைகள் தோன்றி மறையும். எதையோ இழந்தமாதிரி அடிக்கடி மனம் தவிக்கும். எதிர்பாராத வகையில் பணம் தேடிவரும். புதுப்புது யோசனைகள் தோன்றி மறையும். உங்கள் உழைப்பிற்கும், திறமைக்கும் தகுந்த ஊதியம் கிடைக்கவில்லை என்று வருத்தம ஏற்படும். பெரிய மகான்களின் சந்திப்பும், நல்ல மனிதர்களின் ஆதரவும் இருக்கும். சொத்துக்கள் வாங்க விற்க சிறப்பாக இருக்கும். கடன் சுமை இருக்கும்.

*ஜூன:* தேவையில்லாத சிந்தனைகள் மனதைவாட்டும். கனவுத் தொல்லைகள் இருக்கும். எங்கு சென்றாலும் போட்டிகள் காணப்படும். நினைத்தது ஒன்று நடப்பது வேறொன்றாக இருக்கும், தெய்வீகம், ஞானம் கைகூடும். காதலில் கசப்பு தட்டும். குடும்பத்தை விட்டுப்பிரியநேரும். அலைச்சல் காணப்படும் . பணம் பல வழிகளில் வந்து சேரும். எடுத்த காரியங்கள் இழுபறியாக இருந்தாலும் வெற்றி உங்களுக்கே. உடன் பிறப்புக்களால் பகை ஏற்படும். தொழில் ஆமை வேகத்தில் முன்னேறும். வாகனத்தால் செலவு உண்டு, கொடுக்கல் வாங்கல் சுமாராகச் செல்லும். கல்வியில் ஆர்வம் காணப்படும். வழக்கு இழுபறியாக இருக்கும். சில பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தையால் தீர்த்துக்கொள்வீர்கள்.

*ஜூலை:* மனதிற்கு மகிழ்ச்சியும், திடீர் நன்மைகளும், பொருளாதார முன்னேற்றமும், மகான்களின் சந்திப்பும் ஏற்படும். குழப்பம் தெளியும். சந்தேகம் நீங்கும். எதையோ இழந்தது போன்று இருந்த நீங்கள் தெம்பாகவும், தெளிவாகவும் காணப்படுவீர்கள். குடும்பத்தில் இருந்த பிரச்சினை நீங்கி முன்னேற்றப் பாதையில் செல்வீர்கள். அலைச்சல், மன உளைச்சல் குறையும், இன்பகரமான விசயங்களை நோக்கி உங்கள் மனம் செல்லும். எதை எடுத்தாலும் தாமதித்து முடிக்க நேரும். நோய்கள் நீங்கும். எதிர்பாராத வகையில் பணம் சேரும். நல்ல பல வாய்ப்புகள் வந்து உங்கள் வாயிற் கதவைத்தட்டும். தாய் நாட்டைப்பற்றி சிந்தனை வரும். திருமண சுபகாரியம் நடக்கும். வழக்கு சாதகமாகும். கல்வியில் மேன்மை உண்டு.

*ஓகஸ்ட்:* எதிலும் அவசரப்படுவீர்கள். உடனே முடியவில்லையே என்ற ஆதங்கம் இருக்கும். தொழிலில் புதிய யுக்திகளைக் கையாண்டு முன்னேற்றப் பாதையில் செல்வீர்கள். தேவையில்லா விஷயத்திற்குப் போய் பதற்றப்படுவீர்கள் கொடுக்கல், வாங்கல் சிறப்பாக இருக்கும். பலருடன் பழகினாலும் ஒரு சிலர்தான் விசுவாசமாக இருப்பர். ஒப்பந்தம் ,தரகு, வாங்க, விற்க நிதி போன்ற தொழில்கள் அதிக இலாபத்தைக் கொடுக்கும். சொத்துக்கள் சேரும், வாகனத்தால் செலவு உண்டு. வெளியூர், வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்வீர்கள். இரத்த அழுத்தம், கால்வலி வந்து நீங்கும். சுபகாரியத் திட்டங்கள உருவாகும். அடிக்கடி பயம் அவ்வப்போது வந்து மனதைப புண்படுத்தும். திடீர் பணவரவு ரொனிக் மாதிரி உங்கள் மனதிற்குத் தெம்பளிக்கும். கல்வியில் உயர்வு உண்டு.

*செப்ரெம்பர்:* சுறுசுறுப்பாகக் காணப்படுவீர்கள். தொழில் முன்னேற்றப் பாதையில் செல்லும், சொத்துக்கள் வாங்க, விற்க சிறப்பாக இருக்கும். மனதில் தேவையில்லாத கவலைகள் தோன்றி மறையும். தாமதித்து வந்த காரியம் கூட படிப்படியாக வெற்றி பெறும், பெரிய மனிதர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் உங்கள் மனதிற்குத் தெம்பளிக்கும். வெளியூர், வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்வீர்கள். பெற்றோர்களின் உடல்நிலை சிறிது பாதிக்கும். வேண்டாத சிந்தனைகள் மனதில் வலம் வரும். அடிக்கடி வயிற்றில் பிரச்சினை வந்து நீங்கும். மலச்சிக்கல் வராது பார்த்துக் கொள்ளுங்கள். எதிர்பாராத நன்மைகள் நடக்கும். கல்வியில் வெற்றி கிடைக்கும்.

*ஒக்ரோபர்:* கடுமையான முயற்சியால் எதையும் முடிப்பீர்கள். தொழில் ஏற இறங்க இருக்கும். கொடுக்கல், வாங்கல் திருப்திகரமாகச் செல்லும். தெய்வ வழிபாடு, மகான்களின்சந்திப்பு உங்கள் மனதிற்கு தெம்பளிக்கும். பாராட்டும், மதிப்பும் உயரும். எதையோ இழந்தது போன்று அடிக்கடி மனம் ஏற இறங்க இருக்கும். பணம் பல வழியில் வரும். ஆனால் செலவுகளைக் கட்டுப்படுத்த முடியாது. சொத்துக்கள் வாங்க, விற்க சிறப்பாக இருக்கும். புதிய திட்டங்கள் போட்டு அதை நடைமுறைக்கு கொண்டுவரக் கடுமையாக உழைப்பீர்கள். குடும்பத்தில் குழப்பங்கள் வந்து நீங்கும். வாய்ச்சண்டை, மற்றவர்களிடம் கருத்து வேறுபாடு ஏற்பட்டு நீங்கும், வாகனத்தால் செலவு உண்டு.

*நவம்பர்:* மனதில் அடிக்கடி குழப்பம் குடிகொள்ளும். சிறிய விடயத்தைப் போய் பெரிதாக எடுத்துக்கொள்வீர்கள். காதல் கசக்கும். அலைச்சல் இருக்கும். சுபகாரியம் நடக்கும். எதிர்பாராத பணவரவு மனதிற்குத் தெம்பளிக்கும். தொழில், தடைகளைத் தாண்டி உயரும். வழக்கு சாதகமாகும். புதிய பொருள் சேர்க்கை உண்டு. விடாப் பிடியாக எதையும் செய்து வெற்றி பெறுவீர்கள். பணம் எவ்வளவு வந்தாலும் நிற்காது. குழப்பம் குடிகொள்ளும். கெட்ட பெயர்வர வாய்ப்பு இருப்பதால் பதற்றம் அடையாது பார்த்துக் கொள்ளுங்கள். கொடுக்கல், வாங்கல், சவ்வு மாதிரி இழுபறியாக இருக்கும். மருத்துவச் செலவு உண்டு. பெற்றோர்கள் உடல் நலம் பாதிக்கும்.

*டிசெம்பர்:* எடுத்த காரியம் கைகூடும். புதிய வாய்ப்புகள், சுபகாரியத் திட்டம், சொத்துச்சேர்க்கை ஏற்படும். தூரத்துப்பயணம, மகான்களின் சந்திப்பு, ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. அடிக்கடி மனம் திட்டம் போடும். காதல் கைகூடும். மனதில் இனம் புரியாத தெம்பும், தெளிவும் பிறக்கும். பாராட்டும், மதிப்பும் உங்களை மகிழச்செய்யும். திடீரென எதையே இழந்தது போல மனம் வாடும். சளி பிடித்தால் உடனே போகாது. ஒவ்வாமை, மூலவருத்தம் வராது கவனம் தேவை. உத்தியோகத்தில் இருந்த அழுத்தம் குறையும். தொழில் போட்டிகளைத் தாண்டி உயரும். கொடுக்கல், வாங்கல் திருப்தியாக இருக்கும். திடீர் நன்மைகள் நடக்கும்.

(வளரும்)

# சிவத்தமிழ்ச் செல்வி, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 79ஆவது பிறந்த நாள் அறநிதிய விழா சிறப்புமலர்

# அபயகரமாக விளங்கும் அன்னை சிவத்தமிழ்ச்செல்வி

அன்பும் அறிவும் ஆராய்ந்த சொல்வன்மையும் நிறைந்த எங்கள் அன்னை சிவத்தமிழ்ச்செல்வி அவர்களுக்கு அகவை எழுபத்தொன்பது இன்று நிறைவு பெறுகின்றது. உலகம் முழுவதும் போற்றுகின்ற ஆன்மீக அன்னை ஈழத்திருநாட்டின் ஈடு இணையற்ற பெருஞ் சொத்தாவார். அல்லலுற்று அபயம் என்று தன்னை நாடி வருபவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் அபயகரமாக அன்னை விளங்குகின்றார். தெல்லிமாநகரில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் துர்க்கையம்பாள் திருக்கோயிலை சர்வதேசம் போற்றும் பெருங்கோயிலாக மிளிரச் செயத பெருமை அன்னையைச் சாரும். தன் இனிய வாழ்வை ஆன்மீகப் பணிக்காக அர்ப்பணித்து அல்லும் பகலும் அனவரதமும் உழைத்த அன்னையை வையகம் என்றும் வாழ்த்திய வண்ணமே உள்ளது. அன்னையின் பிறந்ததின விழா அறக்கொடை விழாவாக ஒவ்வோர் ஆண்டும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. உலகின் பல பாகங்களிலும் வாழும் இந்துக்கள் அன்னையின் பிறந்ததின விழாவை புனிதமான விழாவாகக் கொண்டாடி வருகின்றார்கள். புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களால் நடாத்தப்படுகின்ற வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை போன்ற ஊடகங்கள் அனைத்தும் ஜனவரி ஏழாம் திகதியை சிவத்தமிழ்ச் செல்வியின் சிறப்புநாளாக முதன்மை கொடுத்து வருகின்றன. தள்ளாத வயதிலும் தளராத மனத்தோடு "தன் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற அப்பர் சுவாமிகளின் கூற்றுக்கமைய அன்னை தன் பணிகளைத் தளர்வின்றித் தொடர்ந்துகொண்டிருக்கின்றார். அன்னையின் தூய பணியால் பெறற்கரிய பெருவிருதுகள் அவரை நாடிவந்தன. ஈழத்திருநாட்டில் வாழும் இந்துக்கள ஒப்பற்ற இந்துமதத் தலைவராக போற்றித் துதிக்கும் ஒருவராக அன்னை விளங்குகின்றார். அவர் தினமும் தனது நித்திய பிரார்த்தனையில் எங்கள் நாடு நலம் பெற வேண்டும், எல்லோரும் சாந்தியும் சமாதானமும் பெற வேண்டுமென இறைஞ்சிய வண்ணம் இருக்கின்றார். அன்னை சிவத்தமிழ்ச்செல்வி அவர்கள் துர்க்கையம் பாளின் பேரருளால் இன்னும் பல்லாண்டு எம்மோடு வாழ்ந்து எம்மை ஆற்றுப்படுத்த வேண்டும் எனப் பிரார்த்தனை செய்து வாழ்த்தி வணங்குகின்றோம்.

- செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்.



## நீண்ட புகழ் கொண்டு வாழி!

முத்தமிழும் தித்திக்க முழக்கமிட்டு
முதுமையிலும் சைவமதை பேணும் தாயாள்
பத்தினிப் பெண் என நாடு போற்றுகின்ற
பாவையே ! பண்பாட்டின் சிகரமாய்
உத்தமியாய் துர்க்கையவள் பாதம் போற்றி
உடல் இளைக்க ஊருக்குச் சேவை செய்யும்
வித்தகியே ! உன் போல் பெண்ணொருத்தியினை
விதி வசத்தால் ஈழத்தாய் பெற்றாளன்றோ ?
நித்தமும் அநாதைகள் நினைவில் கொள்ளும்
நின்சேவை ஈசனவன் சேவையன்றோ ?
புத்தரும் இயேசுவும் புராணமெல்லாம்
போதித்த போதனை உன்போதனையே
நித்திலமாய் நீலமணி ஈழ நாட்டில்
நீண்ட புகழ் கொண்டு பல ஆண்டு வாழி !

- விகடகவி மு.திருநாவுக்கரசு.

ஆஸ்திரேலியா - ஈழத்தமிழர் கழகத் தலைவர் திருமிகு வை.ஈழலிங்கம் அவர்கள் அன்னையின் அறக்கொடை விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுவார்.

# சிவத்தமிழ்ச் செல்வி, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி (J.P.) அவர்களின் 79ஆவது பிறந்த நாள் அறநிதிய விழா

## நிகழ்ச்சி விவரம்

| | | |
|---|---|---|
| இடம் | : | தெல்லிப்பழை துர்க்கா மணிமண்டபம் |
| காலம் | : | 07.01.2004 புதன்கிழமை |
| நேரம் | : | மு.ப. 9.30 மணி |
| தலைவர் | : | கலாநிதி, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி (J.P.) அவர்கள் |
| திருமுறை | : | |
| வரவேற்புரை | : | திரு.மு. சபாநாதன் (J.P.U.M) அவர்கள் (பதில் நீதிவான், உபதலைவா - தேவஸ்தான நிர்வாகசபை) |
| ஆசியுரைகள் | : | சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள்<br>ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்<br>கலாநிதி தி. கமலநாதன் அவர்கள் (பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்)<br>திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள் (உதவிக் கல்விப்பணிப்பாளர், வலிகாமம் வலயம்) |
| வாழ்த்துரை | : | திரு . வை. ஈழலிங்கம் அவர்கள் (தலைவர், ஈழத்தமிழர் கழகம், ஆஸ்திரேலியா) |
| பிரதம விருந்தினர் | : | கலாநிதி திரு . சி . சிவலிங்கராசா அவர்கள் (தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) |
| சிறப்பு விருந்தினர் | : | செங்கை ஆழியான் கலாநிதி திரு . க. குணராசா அவர்கள் (பிரதேச செயலர் - வலி. வடக்கு) |
| தலைவர் முன்னுரை | : | |
| நூல் | : | "அறிவொளி காட்டிய சான்றோர் வரிசையில்" |
| நூல் வெளியீடு | : | செங்கை ஆழியான் கலாநிதி திரு. க . குணராசா அவர்கள் |
| வெளியீட்டுரை | : | கலாநிதி திரு . சி . சிவலிங்கராசா அவர்கள் |
| நன்றியுரை | : | சொஞ்சொற் செல்வர் திரு . ஆறு. திருமுருகன் அவர்கள் |
| திருமுறை | : | |
| நண்பகல் | : | 12.30 மணி மதியபோசனம் வழங்குதல் |

| | | |
|---|---|---|
| இடம் | : | கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபம் |
| காலம் | : | 10.01.2004 சனிக்கிழமை |
| நேரம் | : | முற்பகல் 10.00 மணி |
| தலைவர் | : | திரு.ப. அரியரத்தினம் அவர்கள் (வலயக் கல்விப்பணிப்பாளர், கிளிநொச்சி வலயம்) |
| ஆசியுரை | : | தவத்திரு. மகாதேவா கணேசானந்த சுவாமிகள் (மகாதேவா ஆச்சிரமம்) |
| பிரதம விருந்தினர் | : | திரு . தி.இராசநாயகம் அவர்கள் (அரச அதிபர், கிளிநொச்சி) |
| சிறப்பு விருந்தினர்கள் | : | திரு . வே. இளங்குமரன் அவர்கள் (தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர்)<br>சொஞ்சொற்செல்வர் திரு . ஆறு. திருமுருகன் B.A. அவர்கள் (ஆசிரியா, ஸ்கந்தவரோதயக் கல்லூரி - சுன்னாகம், நிர்வாகசபை உறுப்பினர் - ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை) |
| நன்றியுரை | : | திரு. நா. தவநாதன் அவர்கள் (நிர்வாகச் செயலாளர் - ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை) |

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட நூறு மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் கொள்வனவு செய்ய அறக்கொடை [நிதி] அன்பளிப்பு.

- விழாக் குழுவினர்.

அன்பர்கள், அபிமானிகள் அனைவரையும் இவ்விழா நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பிக்குமாறு அன்பாகவேண்டுகின்றோம்.

அறநிதிய வங்கி விவரம்:
சிவத்தமிழ்ச்செல்வி பிறந்த நாள் அறநிதியம்
தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்.
சே.க/கு இல: 1-0006-02-7248-5

பொ. சன யாழ்ப்பாணம்

# புத்தளம் - கொழும்பு வீதி விபத்தில் மூவர் பலி!

# ஆத்திரமடைந்த மக்கள் பஸ்ஸை நொறுக்கினர்

கொழும்பு,ஜன.7

வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிவந்த தனியார் பஸ் ஒன்று வானொன்றுடன் மோதியதில் அருட்தந்தையொருவரும் இரு அருட் சகோதரர்களும் கொல்லப்பட்டனர். புத்தளம் - கொழும்பு வீதியில் மாரவில, மூதுகட்டுவ என்ற இடத்தில் கடந்த ஞாயிறன்று இரவு 11.30 மணியளவில் இக்கோரவிபத்து இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தை அடுத்து அந்த இடத்தில் திரண்ட பொதுமக்கள் பஸ்ஸை அடித்து நொறுக்கினர். அத்துடன் மன்னார், வவுனியா, அநுராதபுரம் ஆகிய நகரங்களிலிருந்து கொழும்பு செல்லும் பஸ்கள் மீதும் கற்கள் வீசப்பட்டன. இதனால் கொழும்புக்கான பஸ்போக்குவரத்து நேற்று முன்தினம் காலை வரை கொழும்பு - புத்தளம் வீதியில் நடைபெறவில்லை.

கட்டுனேரிய புனித செபஸ்தியார் ஆலயத்தைச் சேர்ந்த அருட்தந்தை பிரியந்த பெர்னாண்டோ என்பவரே இந்த விபத்தில் கொல்லப்பட்டவராவார். வானை இவரே செலுத்தியுள்ளார். இவருடன் கட்டுனேரிய கத்தோலிக்க குருமனையைச் சேர்ந்த இரு அருட்சகோதரர்களும் பயணஞ்செய்துள்ளனர். அந்த இருவரும் விபத்தில் கொல்லப்பட்டனர்.

இந்த விபத்தைப் புகைப்படமெடுக்கச் சென்ற செய்தியாளர் ரெக்ஸ் ஹெரிசன் பெர்னாண்டோ என்பவரும் கூட்டத்தினரால் தாக்கப்பட்டார். அவரும் மாரவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இவரது புகைப்படக்கருவியும் அடித்து நொறுக்கப்பட்டது.

சிலாபம் பொலீஸ் அத்தியட்சகர் உபாலி ரணசிங்கவின் பணிப்பின் பேரில் நாத்தாண்டிய பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.எஸ்.செனிவிரட்ன, மாரவில பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி கபில பண்டார ஆகியோர் துரித நடவடிக்கை எடுத்ததன் பேரில் நேற்றுப்பகல் புத்தளம் - கொழும்பு வீதியில் பஸ் போக்குவரத்து வழமை நிலைக்குத் திரும்பியது.

## அம்பாறை மாவட்டத்தில்

# ஆசிரியர் கொடுப்பனவு மோசடி! அதிபர் இடைநிறுத்தப்பட்டு விசாரணை

திருக்கோவில்,ஜன.7

பொத்துவில் கல்விக்கோட்டத்தில ஆசிரியர் நிலுவைப்பணம் மற்றும் பதவி உயர்வுக் கொடுப்பனவுகளை கோட்டக்கல்வி அலுவலர்கள் சிலருடன் இணைந்து மோசடிசெய்தார் எனக் கூறப்படும் அதிபர் ஒருவர் கடந்த 26 ஆம் திகதி முதல் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டார். அவருக்கு எதிராக குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொத்துவில் கல்விக்கோட்டத்தில் 22 ஆசிரியர்களுக்கான சம்பள உயர்ச்சி நிலுவைகள் வழங்கப்பட வேண்டிய நிலையில் சில ஆசிரியர்களது சுமார் 7 லட்சம்ரூபா கொடுப்பனவுகளை சம்பளப்பட்டியலில் சேர்த்து இப்பாடசாலை அதிபரின் ஒத்துழைப்புடன் அலுவலர்கள் 2003 ஜனவரி மாதம் தொடக்கம் ஜூன் மாதம் வரை கையாடியுள்ளனர்.

இம்மோசடியினை பொத்துவில் கோட்டக்கல்வி அலுவலக இலிகிதர் ஒருவர் வலயக்கணக்காளரிடம் சுட்டிக்காட்டியதையடுத்து மோசடிப்பணத்தை மீளச்செலுத்துமாறு வலயப்பணிமனையால் பணிக்கப்பட்டது. குறிப்பிட்ட அதிபர் சுமார் மூன்று இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவை மட்டும் மீளச் செலுத்தினார் என்று அறியப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக அக்கரைபற்று வலயக்கல்விப் பணிமனை மேலதிக வலயக்கல்விப்பணிப்பாளர்களான லோவநாதகிறி, சக்கரியா மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் அடங்கிய குழு விசாரணை மேற்கொண்டு அறிக்கையினை மாகாண சபைக்குச் சமர்ப்பித்ததையடுத்து அதிபர் பதவியில் இருந்து இடைநிறுததப்பட்டுள்ளார். (ஐ)

# வடலியடைப்புக் கிராமத்தில் வேலைத் திட்டங்கள் தெரிவு

சண்டிலிப்பாய்,ஜன.7

வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கம் 'யாழ். மாவட்ட துரித அபிவிருத்திதிட்டம் - 2004' என்ற திட்டத்தின் கீழ் தமது பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசிய வேலைத்திட்டங்களை இனம் கண்டு பட்டியல் தயாரித்து சண்டிலிப்பாய் பிரதேச செயலரிடம் சமர்ப்பித்துள்ளது.

மேற்படி திட்டத்திற்கான முன்மொழிவுகளைத் தயாரித்து தமக்குச சமர்ப்பிக்குமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் இப் பிரிவிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களிடம் கேட்டிருந்தது. அதனையடுத்தே இந்தத் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சங்கத்தலைவர் க.அரசரத்தினம் தெரிவித்தார்.

கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்தும் முன்பள்ளிக்கு நிரந்தரக் கட்டடம் நிறுவுதல், ஆரம்ப சுகாதார நிலையமொன்று அமைத்தல், நீண்ட காலமாகப்புனரமைப்புச் செய்யப்படாமலிருக்கும் வீதிகள், ஒழுங்கைகள் ஆகியவற்றை புனரமைப்புச் செய்தல், கிராமத்திலுள்ள விவசாய, பொதுக் கிணறுகளைப் புனரமைப்புச் செய்தல், வடலியடைப்பு வட்டக்குள வாய்க்கால்களை ஆழமாக்கி புனரமைப்புச் செய்தல், மின்சாரம் இல்லாத இடங்களுக்கு மின் விநியோகம் வழங்குதல் ஆகிய முக்கிய திட்டங்கள் நடைமுறைப்படுததப்பட வேண்டும் என்று இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-135)

## பயிற்சி நெறி

அரியாலை,ஜன.7

யாழ். மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி, கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர சாதாரண பிரிவுப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்புவோர் குருநகரில் உள்ள மேற்படி பயிற்சிக் கல்லூரியுடன் தொடர்பு கொள்ளுமாறும் விண்ணப்பிக்கும் இறுதித் தினம் எதிர்வரும் 8 ஆம் திகதி என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

## மகஜர் கையளிப்பு

கைதடி,ஜன.7

இந்த ஆண்டில் தென்மராட்சிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான மகஜர் ஒன்று தென்மராட்சிப் பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசத்தினால் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (எ-10-75)

## சுகாதார நிலையம் நிறுவக் கோரிக்கை

வடமராட்சி கிழக்கில் உள்ள பொற்பதி மற்றும் உடுத்துறை ஆகிய கிராமங்களில் ஆரம்ப சுகாதாரநிலையங்களை அமைக்குமாறு வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு நிறுவனம் யாழ். அரச அதிபரிடமும், சுகாதார சேவைகள் திணைக்களத்திடமும் வேண்டுகோள் விடுத்துள்ளது.(எ-10-182)

## அடையாள அட்டைப்பிரிவு இடமாற்றம்

நவாலி,ஜன.7

யாழ். செயலகத்தின் கீழ்த்தளத்தில் இயங்கிவந்த அடையாள அட்டைப் பிரிவு தற்பொழுது மேல் தளததில் இயங்கி வருகிறது.

மேல்தளத்தில் புள்ளிவிவரக் கிளைக்கு அருகில் உள்ள அறையொன்றில் இது தற்போது இயங்கி வருகிறது. (எ-10-100)

# பரீட்சைகளை நடத்துவது மட்டுமே பரீட்சைத் திணைக்களத்தின் பணி அல்ல

## உதயனுக்கு அளித்த செவ்வியில் ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம்,ஜன.7

பொதுப்பரீட்சைகளை நடத்துவது மட்டும் எமது பணியல்ல. ஒவ்வொரு வகுப்புக்களிலும் மாணவர்களின் கற்றல் தொடர்பான கணிப்பீடுகளையும் செய்துவருகின்றோம்.

- இப்படிக் கூறினார் பரீட்சை ஆணையாளர் டபிள்யூ.ஏ.மகிந்த விஜயசிறி.

யாழ்ப்பாணத்துக்கு இருநாள் விஜயம் மேற்கொண்டிருந்த அவர் உதயனுக்கு வழங்கிய செவ்வியில் இதைத் தெரிவித்தார்.

அவரின் செவ்வி விவரம் வருமாறு:-

▲ *கேள்வி:-* பரீட்சை ஆணையாளராகத் தாங்கள் பதவியேற்ற ஒரு வருட காலத்தில் பரீட்சைத் திணைக்களத்தில் ஏற்படுத்திய சீர்திருத்தங்கள் எவை?

✹ *பதில்:-* பரீட்சைகளில் சுதந்திரமாகச் சிந்தித்துச் செயற்படாமல், பக்கத்தில் இருப்பவரின் திறமையைப் பயன்படுத்துவதைத் தடுக்கவும் பரீட்சார்த்திகளின் கேள்விகளுக்கு பதிலளிக்க போதிய அவகாசம் வழங்கவும் விடைத்தாள்களைத் தனித்தனித் தாளாக வழங்குவதைத் தவிர்க்க நடவடிக்கை எடுத்தேன். 12 பக்கங்கள் கொண்ட புத்தக வடிவில் விடைத்தாள்களை வழங்கமுடிவு செய்யப்பட்டது. வீணான காலதாமதத்தையும், சிரமத்தையும் மாணவர்களுக்குக் கொடுப்பதை நிறுத்தினோம். முதல் தடவையாக கடந்த டிசெம்பரில் நடந்த சாதாரண பரீட்சையில் புத்தக வடிவில் விடைத்தாள்களை வழங்கினோம்.

பரீட்சையை நடத்தும் பிரதம பரீட்சகரின் அவதானிப்புகள், அறிவுறுத்தல்கள் ஆகியன தொடர்பான பகுப்பாய்வு அறிக்கைகளை புத்தக வடிவில் வெளியிட முடிவு செய்தோம். இந்தப் புத்தகம் மாணவர்களின் கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு உதவுவதாக அமைந்துள்ளது. சிங்களமொழியில் இந்தப் புத்தகம் ஏற்கனவே அறிமுகமாகிவிட்டது. 10 வருடங்களின் பின் உயர்தர, சாதாரணதரப் பரீட்சைகள் தொடர்பாக தமிழில் புத்தகம் வெளியாக இருக்கின்றது. மாணவர்கள் கற்பித்தலில் எதிர்நோக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு இப்புத்தகம் மூலம் விளக்கம் பெறக்கூடியதாக உள்ளது.

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவன் அதேவருடத்தில் பல்கலைக்கழகக் கல்வி குறித்த முடிவை எடுக்க வசதியாக அதே வருடத்தில் பரீட்சை முடிவுகளை வெளியிட ஏற்பாடு செய்துள்ளோம்.

இதேபோன்று சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் மாணவன் ஓரிரு மாதங்களில் உயர்தர வகுப்புக்கு செல்வது தொடர்பான முடிவை எடுக்கக்கூடிய நிலையை உருவாக்கியுள்ளோம்.

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றுபவர்களின் பெறுபேறுகளையும் இரு மாதங்களுக்குள் வெளியிட்டு அவர்களின் கல்வி வாய்ப்புக்கு இடமளித்துள்ளோம்.

கடந்த காலங்களில் பரீட்சை முடிவுகள் காலம் தாழ்த்தி வெளிவருவதால் இடைப்பட்ட காலத்தில் மாணவர்கள் விரக்தி நிலையில் காணப்படுகின்றனர். இதைத் தவிர்ப்பதற்காக நவீன தொழில்நுட்பத்துறையில் இணைந்து விரைவான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம்.

▲ *கேள்வி:-* கடந்தகால யுத்தம் காரணமாக பெரும் எண்ணிக்கையானவர்கள் தமது பரீட்சை சான்றிதழ்களை இழந்துள்ளார்கள். அவர்கள் தமது தொழில் மற்றும் வெளிநாட்டு வாய்ப்புக்களை இழக்கின்றனர். இந்தச் சான்றிதழ்களைப் பெற ஏற்பாடு செய்துள்ளீர்களா?

✹ *பதில்:-* இதற்கென தனியான பிரிவு ஒன்றை ஆரம்பித்துள்ளோம். எமது திணைக்களத்தில் இந்தப் பிரிவு இயங்குகின்றது. 1991 ஆம் ஆண்டுக்குப் பின்பாக பரீட்சை முடிவுகள் கணனிமயப்படுத்தப்பட்டுள்ளதால் அககாலப் பகுதிக்கான சான்றிதழ்களை ஒரே நாளில் பெறமுடியும். சான்றிதழ் பெற 300 ரூபா செலுத்தவேண்டும். அக்காலப்பகுதிக்கு முந்திய காலப் பகுதிக்கான சான்றிதழ்களை ஒரு வார காலத்தவணையில் பெறமுடியும்.

▲ *கேள்வி:-* பரீட்சைகளை நடத்துவதில் வடக்கு - கிழக்கில் ஏதாவது பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றீர்களா?

✹ *பதில்:-* பெரிய அளவில் பிரச்சினைகளை எதிர்நோக்கவில்லை. பரீட்சை மேற்பார்வையாளர், நோக்குநர்கள் ஆகியோரின் நியமனத்தில்தான் பிரச்சினைகள் எதிர்நோக்கப்படுகின்றன. இந்த நியமனம் வழங்குவதற்கான அதிகாரம் வலயப்பணிப்பாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. தெரிவுகள் இடம்பெறுவதில் ஏற்படும் சில பிரச்சினைகள் குறித்து முறைப்பாடுகள் கிடைக்கின்றன.



மற்றுமொரு முக்கிய பிரச்சினையை நாம் எதிர்நோக்கியுள்ளோம். எமது திணைக்களங்களில் போதிய அளவு தமிழ்மொழி மூலமான எழுதுநர்கள், தட்டெழுத்தாளர்கள், கணனி இயக்குநர்கள், நிர்வாக அதிகாரிகள் இல்லை. இதன் காரணமாக வடக்கு - கிழக்குப் பிரதேசத்துக்குரிய பணிகளை விரைவாகப் பூர்த்திசெய்ய முடியாதுள்ளது. இரகசியம் பேணக்கூடிய அதிகாரிகள் முன்வந்து எமது திணைகளத்தில் இணைய வேண்டும்.

▲ *கேள்வி:-* வடக்கு-கிழக்கில் பரீட்சைகள் நடத்த விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்புக் கிடைக்கிறதா?

✹ *பதில்:-* பரீட்சைகளை எந்த வித தடைகளும் இன்றி நடத்த விடுதலைப் புலிகள் ஆதரவு வழங்குகிறார்கள். எமக்கு நல்ல ஒத்துழைப்பையும் அளித்துவருகின்றனர்.

▲ *கேள்வி:-* பரீட்சைக்குப் புறம்பாக தங்கள் திணைக்களம் வேறு என்ன பணிகளை ஆற்றிவருகின்றது?

✹ *பதில்:-* பரீட்சைகளுக்குப் புறம்பாக பாடசாலை மட்டத்தில் கணிப்பீடுகளைச் செய்துவருகின்றோம். மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டு இந்தச் செயறபாட்டை ஆரம்பித்துள்ளோம். ஒவ்வொரு தவணையிலும் முடிவில் நடக்கும் பரீட்சைகளை மதிப்பீடு செய்கின்றோம்.

இந்த மதிப்பீட்டில் இரு விடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஒன்று - பாடசாலைகளில் மாணவர்கள் கற்றலில் ஊக்கம் காட்டுகின்றனர்.

இரண்டு - ஆசிரியர்கள் வேலைப்பளு இருந்தபோதும் கற்பித்தலை பூர்த்தி செய்கிறார்கள். ஆனால், பரீட்சைக்கு மாணவர்களை தயார் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

இந்நிலைக்கு தீர்வு காணப்பட வேண்டியது ஆரோக்கியமானதாக இருக்கும் என நம்புகிறேன்.

▲ *கேள்வி:-* தங்கள் திணைக்களப் பணிகளை பன்முகப்படுத்தத் திட்டம் ஏதும் உண்டா?

✹ *பதில்:-* திணைக்களப் பணிகள் இரகசியமாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால் அவை பன்முகப்படுத்தப்படமாட்டா. ஆனால் விடைத்தாள்களை மதிப்பிடும் பணிகளை பரவலாக்கவிருக்கின்றோம். யாழ்ப்பாணத்தில் 20 நிலையங்கள் இம்முறை இயங்கின. மலையகப் பகுதிக்கும் இதப்பணிகள் பன்முகப்படுத்தப்படவிருக்கின்றன.

▲ *கேள்வி:-* மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு கொடுப்பனவுகள் காலதாமதமாகவே கிடைப்பதாக எழுப்பபடும் குற்றச்சாட்டுகள் குறித்து....?

✹ *பதில்:-* படிவங்களை பூர்த்தி செய்து அனுப்புவதில் எதிர்நோக்கும் பிரச்சினைகளே தாமதத்துக்கு காரணம். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஏற்பாடு செய்யப்படுகின்றது.

அத்துடன் அவர்களுக்கான கொடுபனவுகளை அதிகரிப்பது தொடர்பாக ஆராயக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் இந்த வருடத்தில் இருந்து கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படும்.

▲ *கேள்வி:-* அடுத்துவரும் மாதங்களில் தேர்தல்கள் இடம்பெற்றால், ஏப்ரலில் நடக்கும் ஜி.சீ.ஈ (உயர்தர) பரீட்சை பின் போடப்படுமா?

✹ *பதில்:-* தேர்தல் நடந்தாலும், பரீட்சைகள் திட்டமிட்டபடி அட்டவணைப்படி இடம்பெறும். மாற்றம் இருக்காது. (ஐ-3)

## வீதி விளக்கு நிறுவக் கோரிக்கை

சண்டிலிப்பாய்,ஜன.7

பண்டத்தரிப்பு - சித்தன்கேணி பிரதான வீதியில் பொதுமக்கள் நலன் கருதி மின்விளக்குகள் அமைக்கப்பட வேண்டும் என்று வடலியடைப்பு கிராமஅபிவிருத்திச் சங்கம் இலங்கை மின்சார சபையின் வட்டுக்கோட்டை அலுவலக பொறுப்பதிகாரியிடம் கடித மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இப்பகுதியில் இரவு வேளைகளில் திருடர் நடமாட்டம் மற்றும் மதுபோதையில் செல்வோரின் அட்டகாசம் என்பன இருந்து வருவதால் இவ்வீதியில் வீதி மின்விளக்குகள் அமைக்கப்பட வேண்டும் என்று இக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

## சிறுவர் உளநல சிகிச்சை

யாழ்ப்பாணம்,ஜன.7

யாழ்.ஆஸ்பத்திரி சிறுவர் உளநல சிகிச்சை நிலையத்தில் பிரதி சனிக்கிழமை தோறும் இடம்பெற்று வரும் சிறுவர்களுக்கான கிளினிக் நாளை வியாழக்கிழமையும் மறுநாள் வெள்ளிக்கிழமையும் நடைபெறவிருக்கின்றது.

நாளை காலை 8மணி முதல் நண்பகல் 12மணி வரையும் நாளை மறுதினம் காலை 8மணி முதல் 11 மணி வரையும் கிளினிக் இடம்பெறும். இக்கிளினிக்குகளை கொழும்பில் இருந்து வரும் குழந்தைகள் உளநல மருத்துவர்கள் நடத்துவர். (ம-3)

## விவசாயிகளுக்கு கடனுதவி

சண்டிலிப்பாய், ஜன.7

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் சங்க அங்கத்தவர்களான விவசாயிகளுக்கு வெங்காயச் செய்கை மற்று மிளகாய்ச் செய்கை ஆகியவற்றுக்கு கடனுதவி வழங்குவது என்றும் தீர்மானித்துள்ளது.

இக்கடனைப் பெறவிரும்பும் விவசாயிகள் தமது விண்ணப்பத்தை தமது பிரிவு கிளைக்குழுவின் சிபார்சுடன் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் சங்கத் தலைமை அலுவலகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று சங்கப் பொதுமுகாமையாளர் சு.வைரவநாதர் தெரிவித்துள்ளார். (ஐ-135)

# தியாகி அறக்கொடை நிறுவனம்

## 2ஆம் ஆண்டு நிறைவு விழா சிறப்பிதழ்

இல. 527, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தொ.பே. இல. 021 222 6189

## தேவையறிந்து செயலாற்றும் திறன்!



தியாகி அறக்கொடை நிறுவனம் தனது சமூகப்பணியில் இரண்டு ஆண்டுகளைப் பூர்த்திசெய்துள்ளமையையிட்டு மலர் ஒன்றினை வெளியிடுவது பெருமகிழ்ச்சியைத் தந்துள்ளது.

யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த திரு.வாமதேவா தியாகேந்திரன் அவர்களின் நிதிப்பங்களிப்போடு கடந்த இரு வருடங்களாக காலத்தின் தேவையறிந்து பல பயன்மிகு பணிகளைச் செய்து வருவது போற்றுதற்குரியது.

இந்நிறுவனம் நலிவுற்ற மக்களின் மேம்பாட்டிற்காக கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் போன்ற துறைகளில் பல்வேறு திட்டங்களை நாடளாவிய ரீதியில் சிறந்த முறையில் செயற்படுத்தி வருகின்றது. வறிய மாணவர்களின் கல்வி முதல் மருத்துவ வசதிகள் வரை தேவையறிந்து செயலாற்றும் திறன் வலிமை வாய்ந்தது.

இவர்களுடைய பணி இன்னும் பல ஆண்டுகள் தொடரவும், வெளியிடுகின்ற மலர் சிறப்பான முறையில் வெளிவரவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

## தூண்டா மணி விளக்காக வாழி!

"சொல்லுக்கு முன்னே எப்போதும் செயல் இருக்க வேண்டும். செயலால்தான் நாங்கள் செல்வாக்குப் பெற்றோம். செயல்தான் எமது நடவடிக்கைக்கு அரசியல் வடிவம் தருகின்றது".

என்ற எமது தலைவரின் சிந்தனைக்கு அமைவாகவும்

*"வறியார் கென்று ஈவதே ஈகை
மற்றெல்லாம் குறியெதிர்ப்பை நீர துடைத்து"*

அதாவது, ஏழைகளுக்கு அவர் வேண்டுவதொரு பொருளைக் கொடுப்பதே ஈகையாகும். மற்றவையெல்லாம் உதவியை எதிர்பார்க்கும் தன்மையுடையனவே என்ற திருவள்ளுவரின் குறளுக்கு அமைவாகவும் செயற்படும் தியாகி அறக்கொடை நிறுவனம் நூல் வெளியிடுவதையிட்டு மிகவும் உவகை அடைகின்றோம். யாழ். மண்ணின் சேவையை மட்டும் கொள்ளாது வன்னி மண்ணின் வறிய மக்களின் தேவையினைப் பூர்த்திசெய்யும் ஒரு மைல்கல்லாக விளங்கும் இந்நிறுவனமும், இந்நிறுவன ஸ்தாபகரின் சேவையும் என்றும் தொடர எமது நல்லாசிகளை வழங்குவதுடன், மக்களின் சேவையுடன் நின்றுவிடாது.

*"வைரமுடைய நெஞ்சு வேண்டும்
இது வாழும் முறைமையடி பாப்பா"*

'அதாவது, இரும்பை வெட்டும் வைரம் கொண்ட நெஞ்சம் இல்லாவிடில் இன்றைய இருள் சூழ்ந்த நிலையில் இறைக்குச் சமமான எழுத்தறிவிக்கும் கல்விப் பயிரை வளர்க்க முடியாது என்று பாரதியார் கூறியதற்கு அமைய வன்னியில் 100 வறிய சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவிய இந்நிறுவனம் "தூண்டாமணி விளக்காக" தனக்கென உரிய பாதையில் அபிவிருத்தியடைந்து தனது சேவையை காலத்தின் தேவைக்கேற்ப வழங்க வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

**கிராமிய அபிவிருத்தி வங்கி,
பணிப்பாளர்,
பணியாளர்கள்.**

## அறக்கொடை ஆற்றல்கள் வளர்க!




கல்விக்கு, வறுமைக்கு, அறிவுக்கு, சிகிச்சைக்கு, தொழிற்பயிற்சிக்கு, வாழ்வின் எழுச்சிக்கு மழையின் கொடையை விட அதிகமாக திரு. வாமதேவா தியாகேந்திரன் நாளும் வழங்கும் வள்ளல் நிலை நமது மண்ணில் தொடர வேண்டும்.

தேசியத்தின் சின்னமாக நாவலர் பெருமான் பாதங்கள் படிந்த வீதியில் நம் மண்ணின் நலிவகற்ற முளைத்த தியாகி அறக்கொடை நிறுவனம் ஆற்றல்கள் குவிக்க வாழ்த்துக்கள்.

வசந்தப் பூக்களின் தொட்டிலில் நிம்மதியாக ஆடிட, பாடிட, வாழ்ந்திட நாளும் பாடுபடும் அறக்கொடை நிறுவனம், அதன் உழைப்பாளிகள், பயணங்கள் நீண்ட வாழ்வில் பணிகள் தொடர அருளாசிகள்.

சூரியன் விழித்ததும் சிரிக்கும் அழகு மலர்கள் போல், சமூக மேம்பாடுகள் மண்ணின் வள்ளல்களால் உறுதி செய்யப்படல் வேண்டும். இந்தப் பணியில் தான் பிறந்த ஊருக்கு நல்லது சொல்வேன், எனக்கு உண்மை தெரிந்தது சொல்வேன் என்று சீருக்கெல்லாம் முதலாகும் திரு. வாமதேவா தியாகேந்திரன் தெய்வத் துணையுடன் சேவையில் நீடுழி வாழ்ந்திட அருளாசிகள்.

**ப.விக்னேஸ்வரன்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.**



புதிதாக அமையவுள்ள தியாகி அறக்கொடை நிறுவனக் கட்டடத்தின் வரைபடம்

**மூன்றாவது ஆண்டில் காலடி
வைக்கும் நிறுவனத்துக்கு
நன்றியுடன் இவ்விதழ் சமர்ப்பணம்.**

சிறப்பிதழ் அமைப்பு
ஞா.கபிலன்

## பாராட்டத்தக்க நன்முயற்சி!



யாழ். நகரில் இயங்கி வரும் தியாகி அறக்கொடை நிறுவனம் தனது இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாட இருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். திரு. வாமதேவா தியாகேந்திரன் அவர்களின் நன்முயற்சியினால் இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு இன்று பல்வேறு சமூகப் பணிகளை ஆற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. அவரின் நன்முயற்சியைப் பாராட்டி தியாகி அறக்கொடை நிறுவனம் மேலும் உயர்வடையப் பிரார்த்தித்து ஆசி கூறி அமைகின்றேன்.

**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி,
சமாதான நீதிபதி, தலைவர் ,
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.**

## மணிக்குருக்களின் ஆசிச்செய்தி

*"எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது"
"எது நடக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கிறது"
"எது நடக்கவிருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்"*

திரு.வாமதேவா தியாகேந்திரனால் முன்பே இக்கைங்கரியம் நடைபெற உள்ளத்தில் விதைக்கப்பட்டுள்ளது. இப்பொழுது துளிர் விட்டு வளர்ந்து கொண்டிருக்கிறது. இன்னும் பெரு விருட்சமாய் வளர்ந்து இந்த தியாகி அறக்கொடை நிலையம் தனது சேவையை செழிப்புற தொடர்ந்து செய்வதற்கு எல்லாம் வல்ல எம் கைலாச விநாயகப் பெருமான் அருள் பெற்று சிறப்புற நடைபெற விநாயகப்பெருமானைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கிறேன்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

**கு.மணிக்குருக்கள்
கைலாச வீநாயகர் தேவஸ்தானம், நல்லூர்.**

## சமூக மேம்பாட்டுக்கு உழைக்கும் நிறுவனம்!



சமூகப் பணியை மேற்கொண்டுவரும் தியாகி அறக்கொடை நிறுவனம் தனது இரண்டாவது ஆண்டைப் பூர்த்தி செய்யுமுகமாக வெளியிடப்படவுள்ள மலருக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

யாழ்ப்பாணம், நல்லூர், நாவலர் வீதியைச சேர்ந்தவரும் தற்போது சுவிற்ஸர்லாந்து நாட்டில் வசித்து வருபவருமாகிய திரு. வாம தேவா தியாகேந்திரன் அவர்களின் நிதியுதவியுடன் நலிவுற்ற மக்களின் மேம்பாட்டிற்காக இயங்கி வரும் இச்சமூக நிறுவனமானது கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் போன்ற துறைகளில் குறிப்பாக, வறிய குடும்பத்தைச் சேர்ந்த திறமையுள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும், உழைப்பாளிகள் அற்ற குடும்பங்களுக்கு அவர்கள் நிரந்தர வருமானத்தைத் தேடும் வரையும் குறிப்பிட்டளவு உதவிப்பணத்தை மாதாந்தம் வழங்குதல், மாணவர்களின் ஆங்கில அறிவை வளர்ப்பதற்காக இலவச ஆங்கில வகுப்புகள் நடத்துதல், மருத்துவ வசதிகள் அற்ற கிராமங்களில் இலவச மருத்துவ சேவை செய்தல், அத்துடன் மகரஹம வைத்தியசாலையில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு தங்கியுள்ள நோயாளிகளுக்கு மாதாந்தம் உதவிப்பணம் வழங்கி வருதல், அதைமட்டுமல்லாமல் சுயதொழில் பயிற்சிக்காக இலவச தையல் பயிற்சி நிலையங்களை நடத்தி சுய தொழில் முயற்சிக்கான கடன் வசதிகளைச் செய்து கொடுத்தல் போன்ற திட்டங்களை நாடளாவிய ரீதியில் செயற்படுத்தி வருகின்றது. இந்நிறுவனத்தின் சமூகப்பணியானது பாதிக்கப்பட்ட மக்களின் வளர்ச்சிக்காகத் தொடர்ந்தும் தனது சேவையில் ஈடுபட வேண்டுமென வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**செ.பத்மநாதன்
அரச அதிபர், யாழ்.மாவட்டம்.**

(C/32614)

## எதிர்காலத்தைக் கட்டி எழுப்புக!



சுவிற்ஸர்லாந்து நாட்டில் வசித்து வரும் திரு. வாமதேவா தியாகேந்திரன் அவர்களின் நிதி உதவியுடன் நலிவுற்ற மக்களின் மேம்பாட்டிற்காக உதவி வரும் தியாகி அறக்கொடை நிறுவனத்தின் பணிகளை அறிந்து மகிழ்ச்சி அடைகிறோம்.

நீண்டகால போர் முடிவுற்றாலும் அதன் தாக்கங்களும் விளைவுகளும் எமது மண்ணையும் மக்களையும் விட்டு மிகவிரைவில் நீங்கி விடப்போவதில்லை. உடல், உளரீதியாக போரின் தாக்கங்களையும் விளைவுகளையும் அனுபவித்தவர்கள் எம் மத்தியில் தொடர்ந்து சில காலம் வாழவே போகிறார்கள் என்பது உண்மையாகும். அநாதைகளாக, விதவைகளாக, நோயாளர்களாக, வறியவர்களாக வாழப்போகின்ற இந்த மக்களுக்கு செய்கின்ற பணி உண்மையிலேயே ஓர் உயர்ந்த பணியாகும். இப்பணிக்கு எம் மண்ணில் இன்று அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டிய ஒரு தேவை உண்டு.

வறியவர் ஒருவருக்கு மீனைக் கொடுப்பதைக் காட்டிலும் மீன்பிடிக்கக் கற்றுக் கொடுப்பது சிறந்தது என்பதை வெளிக்காட்டும் வகையில் பணமாக மட்டும் உதவியை வழங்காது சுயதொழில் முயற்சிகளுக்கும் இந்நிறுவனம் முன்னுரிமை கொடுப்பது பாராட்டுதற்குரியது. இவர்களது இந்த அன்புப் பணியில் எதிர்காலத்தைக் கட்டி எழுப்பக் கூடிய உயர்கல்வி, தொழில்முயற்சிகள் என்பவற்றில் இன்னும் அதிக கவனம் செலுத்தப்படலாம் என வேண்டுகோள் விடுக்கிறோம்.

*'என்சின்னஞ்சிறிய சகோதரர்களுக்கு பணி செய்த போதெல்லாம் 'எனக்கே செய்தீர்கள்'* என்ற இயேசு பெருமானின் வார்த்தைகளை நினைவில் வைத்து நலிவுற்ற மக்களின் மேம்பாட்டிற்கு பணிபுரியும் இந்நிறுவனத்தை வாழ்த்தி தாராள உதவி செய்ய இன்னும் பலர் முன்வர வேண்டும் என்று ஆசித்து நிற்கிறோம்.

**மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை
யாழ். ஆயர்**

## மத்திய கல்லூரி அதிபரின் ஆசிச் செய்தி



இருப்பதைப் பகிர்ந்து மற்றவர்களும் வாழ, உயர, அவர்களிடம் இருக்கும் திறமையைச் சமூகத்திற்குப் பயன் பெற வைக்க வழி அமைத்து நிற்கும் கொடையாளர் சிலரையே எமது சமூகம் தன்னுள் கொண்டுள்ளது.

அந்த வகையில் 'அறக்கொடை நிறுவன இயக்குநர் திரு.வாமதேவா தியாகேந்திரன் அவர்களின் தன்னலமற்ற சமூகப்பற்றுறுதியுள்ள சேவையை நாம் மிக்ப் பெருமையுடன் வாழ்த்துகிறோம்.

தன்னைப் பெற்ற சமூகம் - தன்னை ஏணியில் ஏற்றி உயர்த்தி விட்ட சமூகம் - தனது மன நிலையில் மக்களை மதிக்கும் மாண்பை ஏற்படுத்திய சமூகம் - உயர வேண்டும் என்ற எண்ணத்துடன் சமூகத்தில் உயரத்துடிக்கும், ஆனால், பொருளாதாரத்தின் தாழ்நிலையில் இருக்கும் சமூக அங்கத்துவன் ஒருவனுக்கு உதவும் மனநிலையை அவருக்கு ஆண்டவன் அளித்ததே முதல் சிறப்பாகின்றது.

இவ்வகையாக பல கல்வி நிறுவனங்களில் கற்கும் மாணவர்களுக்கும் மற்றும் உயரத் துடிப்பவர்களுக்கும் ஒரு பாரம் தூக்கி போல அவர்களைத் தூக்கிவிட்டு உயர்த்தும் உத்தமனாக திரு. வா.தியாகேந்திரன் இருப்பதைப் பாராட்டுகின்றேன்.

அவரது சமூகத்தொண்டும், தார்மீக உணர்வும், தாராள சிந்தனையும் மேலும் வளர, வளம் பெற வாழ்த்துகின்றேன். அவர் நீடு வாழ இறையருள் என்றும் கிடைக்கும்.

**க.இராசதுரை
அதிபர்.**

## மக்களுக்கு வரப்பிரசாதம்

நாவலர் பிறந்த மண்ணில் பிறந்து அவர் ஆற்றிய பணியை அடியொற்றி தம் கல்வியை மற்றைய சிறார்கள் போல் கற்றிட ஏங்கி நிற்கும் சிறார்களின் ஏக்கத்தைப் போக்க எண்ணிய தியாகேந்திரன் என்னும் தியாகி, தியாகி அறக்கொடை நிலையத்தை ஸ்தாபித்து நாவலர் பெருமானின் சகோதரர்களின் வழித்தோன்றியவர்களின் உதவியுடன் அளப்பெரிய சேவையை ஆற்றிவருவது மக்களுக்கொரு வரப்பிரசாதமாகும்.

இத்தியாகி அறக்கொடை நிலையமானது இலங்கைத் திருநாட்டில் தேசிய ரீதியாக பல சேவைகளையாற்றி வருகிறது. சிறுவர்கள், ஆதரவற்ற தாய்மார்கள், நோயாளர்கள், இளம் யுவதிகள் இவ்வுதவியைப் பெறுகின்றார்கள் என்பதனை நாம் அறிவோம். இந்த நிறுவனம் தனது ஆண்டு விழாவினைக் கொண்டாடும் போது வாழ்த்துச் செய்தியினைத் தெரிவிப்பதில் சிறுவருக்கான அபிவிருத்தி நிலைய இயக்குநர்கள் மிக்க மகிழ்ச்சி அடைகின்றார்கள்.

**த.பாலதயானந்தன்,
அமைப்புச் செயலாளர்,
சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம்.**

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Sony(பாவித்த), T.V.கள், 20", 21",2030,2032,2060,2192-G21 என்பன மலிவு விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: R.மகேஸ்வரன் (சிறுவர் பூங்கா எதிரில்), K.K.S.வீதி, மல்லாகம். (26872)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் மெமோறியல் லேன், எலிம் சிறுவர் இல்லத்துக்கு அண்மையில் உள்ள வைரவர்கோவிலோடு சேர்ந்த காணி (3½ பரப்பு) விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 6100822, சுரேஷ்குமார், இல.9, குறுசோ றோட், சுண்டிக்குளி. (26856)

யாழ். மாநகர எல்லைக்குள் மத்திய அரியாலை முள்ளி வீதியை முகப பாகக்கொண்ட மூன்று பரப்புக்காணி விற்பனைக்குள்ளது. தொடர்பு: 857, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.(26737)

## திருமண சேவை

1962 ஆம் ஆண்டு, ரேவதி, 2இல் செவ்வாய், பாவம் குறைந்த சைவ மணமகனிற்கு சைவ மணமகள தேவை. உடன் தொடர்புகொள்ளவும். துர்க்கா திருமணசேவை, 101/1, ஓட்டுமடம் வீதி, சிவலிங்கப்புளியடி, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். பதிவுக் கட்டணம் இலவசம். (26857)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், வயது 29, இத்தாலி P.R. உள்ள செவ்வாய்க்குற்றமுள்ள மணமகனுக்கும், அரச உத்தியோகம், வயது27, திருவாதிரை, தனியார்துறை (வயது 28), திருவாதிரை மணமகன்களுக்கும் மணமகள் தேவை. ஜாதகம், புகைப் படத்துடன் தொடர்புகொள்க. "புதிய பாலம்",த.பெ.இல.10, வவுனியா. (26545)

## மணமகன் தேவை

1980, B.Sc.(மாணவி), R.C. அழகிய மணமகளுக்கு உயர் உத்தியோக மணமகன் தேவை. சீதனம் உண்டு. உள்ளூர், வெளியூர் மணமக்களுக்கு தொடர்புகொள்க. துரை விமலா, இலகு திருமணசேவை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (26785)

## தவறிவிட்டது

வி.எச்.லேன் இருபாலையைச் சேர்ந்த சுபத்திரா சிறிகாந் என்பவருடைய தே.அ.அ. (இல.737773868V), விசேட அ.அ.(090301512) என்பன 02.01.2004 அன்று முகமாலைக்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் ஊர்மிளா ஸ்ரூடியோ, 3 ஆம் கட்டை, கல்வியங்காடு எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். T.P.:222 6587. (26830)

பூநகரியைச் சேர்ந்த இரத்தினசிங்கம் நாகேஸ்வரன் என்பவருடைய தே.அ.அ.(இல.740142135V), Cat காட் மற்றும் ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் கொக்குவிலுக்கும் யாழ்.நகருக்கும் இடையில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் 26/2, வளாக வீதி, திருநெல்வேலி எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (26846)

## கோழிக்குஞ்சு விநியோகம்

பகிரா இன புறொயிலர் குஞ்சுகள (07.01.2004) இன்று மாலை விநியோகிக்கப்படும். பதிவுசெய்தோரும், தேவைப்படுவோரும் உடன்தொடர்பு கொள்ளவும் (விலை குறைக்கப்பட்டுள்ளது). றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி.T.P.:3529, 2867. (26841)

## வாடகைக்கு

வின்சர் சந்திக்கும் (நவீனசந்தை) பாட்டா சந்திக்கும் இடையில் கஸ்தூரியார் வீதியில் சகல வசதிகளும் கொண்ட அறைகள் வாடகைக்குண்டு. தொடர்பு:121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (26863)

## விற்பனைக்கு

புதிய Sony Ha 14, Ha 21 (Sterio) T.Vக்கள் (wega Model) விற்பனைக்குண்டு
தொடர்பு:
இல.15/40, மாரியம்மன் வீதி
(முத்துமாரியம்மன் பின் வீதிவழியாக)
திருநெல்வேலி தெற்கு,
(26877) யாழ்ப்பாணம். (21-19-11)

# 106 மில்லியன் மைல்களுக்கு...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

செவ்வாயின் மேற்பரப்பு மண்ணை ஆய்வு செய்யும். அங்குள்ள பாறைகளையும் அவற்றின் உட்பகுதிகளையும் ஆராயும். அதற்கு ஏற்ற வகையில் ரோவரின் முன்பகுதியில் தானியங்கி கைகள் பொருத்தப் பட்டுள்ளன.

மண்ணின் மேற்பரப்பில் இருந்து குறிப்பிட்ட ஆழத்திற்குத் துளையிட்டு கீழிருக்கும் மண்ணையும் ஆய்வு செய்யும் திறன் ஸ்பிரிட்டுக்கு உண்டு. இந்த ஆய்வு மூலம் நிலத்தடியில் தண்ணீர் இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் எவையாவது இருந்தால் தெரியவரும் என்பது நாஸா ஆய்வாளர்களின் நம்பிக்கை.

1997இல் பார்பைன்டர் மூலம் தரையிறக்கப்பட்ட ஸன்ஜோயர் ரோவர், செவ்வாயில் தரையிறங்கி ஆய்வுகளை எப்படிச் செய்வது என்ற தொழில்நுட்பதைச் சரிபார்த்துக் கொள்வதையே பிரதான நோக்கமாகக் கொண்டு அனுப்பட்டது. ஆனாலும அது ஒரு நல்ல விஞ்ஞான விருத்தியைக் கொடுத்தது. ஸ்பிரிட், அதிலிருந்து பெரிதும் வேறுபட்டது. உயர் தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டது. தானே ஆய்வுகளை மேற்கொளளக் கூடியதிறன் வாய்ந்தது.

"எங்களது ரோவர்கள் முக்கிய விஞ்ஞான சாதனங்கள். செவ்வாயில் தண்ணீர் இருப்பதற்கான சூழல் உண்டா என்பதை ஆராய்வதுதான் அதன் முக்கிய பணி. அங்கு உயிர்கள் இருக்கின்றனவா என்பதை ஆராய்வது அவற்றின் நோக்கமல்ல. உயிர் வாழ்வதற்கான சூழல் முன்னர் இருந்ததா என்பதையே அவை ஆராயும்.

"பூமியைப் போன்ற சூழல் செவ்வாயில் புரிந்துகொள்வதுதான் எமது நோக்கம். அதற்காக அங்குள்ள சூழலை ரோவர்களைக் கொண்டு அவதானிக்க முயற்சிக்கின்றோம். அங்கு உயிர்கள் இருக்கின்றனவா என்பது பற்றி ஆராய வேண்டுமானால், நாம் அங்கிருந்து மாதிரிகள் (Sam-ples) சில வற்றை பூமிக்கு எடுத்து வர வேண்டும்.

"மாதிரிகளைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளுக்கு தரையிறக்கிகளையும் தேவையான ஏனையவற்றையும் செவ்வாய்க்கு அனுப்புவதற்குத் தேவையான தகவல்களைப் பெற ரோவர்களைப் பயன்படுத்தலாம். ஒரு வேளை ரோவர்களின் செயற்பாடுகள் திருப்திகரமாக இல்லாதபோதும் பூமிக்கு வெளியே நீண்ட தூரத்துக்குக் கருவிகளை வெற்றிகரமாக அனுப்பும் தொழில்நுட்பத்தை நாம் பெற்றிருக்கிறோம் என்பது புதிய விடயமே.." - என்று தெரிவித்தார் நாஸாவின் செவ்வாய் ஆராய்ச்சிக்கான பிரிவின் பதில் முகாமையாளர் மார்க் அட்லர்.

"ஸ்பிரிட்" ரோவருடன் நாஸா கட்டுப்பாட்டாளர்கள் தற்போது நேரடித் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு விட்டனர். அதன் மூலம் இன்னும் மூன்று மாதங்களுக்கு அது செவ்வாய் பற்றிய தகவல்களை பூமிக்கு அனுப்பிக் கொண்டிருக்கும். ஞாயிற்றுக்கிழமைக்குப் பின்னர் அது செவ்வாய் பற்றிய கலர் படங்களைத் தொடர்ச்சியாக அனுப்பிக் கொண்டிருக்கின்றது. முப்பரிமாணப் படங்களையும் அது அனுப்பிவைத்துள்ளது.

அது தரையிறங்கிய பகுதியிலிருந்து அதனை நகர்த்தி செவ்வாயின் புளுதி மண்டலம் உள்ள பகுதிக்குக் கொண்டு சென்று ஆய்வுகளை மேற்கொள்ள விஞ்ஞானிகள் தற்போது திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

'ஸ்பிரிட்' அனுப்பி வைத்திருக்கும் படங்களை ஆராயும்போது செவ்வாய் பற்றிய பல சுவாரஸயமான தகவல்கள் தமக்குக் கிடைத்து வருவதாக நாஸா விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

'செவ்வாயின் ஜன்னல்கள்' என்று வர்ணிக்கக்கூடிய வகையிலான பெரும் குழிகள் - 'தூங்கு பள்ளங்கள்' - அங்கு காணப்படுவதாக அவர்கள் சந்தேகிக்கின்றனர்.

"தரையில் பெரிய ஓட்டை உள்ளது. செவ்வாயின் உள்ளே இருக்கும் ஜன்னல் என்று அதனைக் கூறலாம்" - என்று தெரிவித்தார் இந்த ஆய்வின் பிரதான விஞ்ஞானியான ஸ்ரீவ். "அது எங்களுக்கு பெரும் ஆச்சரியங்களைத் தருகின்றது. நாங்கள் செல்வதாக இருந்தால் அங்குதான் முதலில் செல்வோம்" - என்றும் அவர் சொன்னார்.

பூமிக்கு வெளியே வேறு கோள் ஒன்றுக்கு அனுப்பப்பட்ட மிகப் பெரிய பொருள் 'ஸ்பிரிட்'தான். அது இன்னும் ஆச்சரியப்படத்தக்க தகவல்களைப் பூமிக்கு அனுப்பும் என்று எதிர்பார்க்கலாம். ✪

## துடுக்குத்தனம்.....

(7ஆம் பக்கத்தொடர்ச்சி)

சின்னஞ்சிறிய மோட்டார்கள் பொருத்தப்பட்டுள்ளன. மாற்றங்களைப் பிரதிபலிக்கும் கணினி மென்பொருள்களினால் இயக்கப்படும் இந்த மோட்டார்கள் பொலிமர் தோலில் பிரதிபலிப்பை ஏற்படுத்தும் அதன்மூலம் கே-போட் முகம் பிரதிபலிப்பை (Expressions) வெளிப்படுத்தும்.

இந்தத் தொழில்நுட்பத்தின் மூலம் அந்தமுகம் சிரிக்கும். கேலியாகப் புன்னகைக்கும். முகத்தைச் சுளிக்கும். கள்ளப்பார்வை பார்க்கும்.

24 இயந்திரத் தசைகள் (Mechanical Muscles) ஒரு செக்கனில் இந்தப் பிரதிபலிப்புக்களை வெளிப்படுத்தும். நீங்கள் என்ன முகப்பிரதிபலிப்பைக் காட்டுகிறீர்களோ அதையே பிரதிபலிக்கும் திறன் இந்த கே-போட்களுக்கு உண்டு.

இவை மொத்தம் அத்தனையும் சேர்த்து ஒருமுகம் 2 கிலோகிராம் நிறையுடையதாகின்றது. இதனை இன்னும் உயிரியல் ரீதியாக வளர்ப்பதற்கு ஆராய்ச்சியார்கள் முடிவுசெய்துள்ளனர்.

"இது ஒரு சமூக ரோபோ" என்கிறார் இதனை உருவாக்கிய ஹன்சன். தனது கலாநிதி ஆய்வுக்காக அவர் இதனை உருவாக்கியுள்ளார். எதிர்கால கணினி வளர்ச்சி இதில் மேலும் மேலும் மாற்றங்களைக் கொண்டுவரும் என்றும் அவர் எரித்பார்க்கின்றார்.

இப்படியே போனால் உங்கள் அருகே நிற்பது ஆளா இல்லை மனித வடிவிலான ரோபோவா என நீங்கள் சந்தேகக் கண்ணால் கள்ளப்பார்வை பார்க்கும் காலம் ஒன்று வரும்.


## ஆண்டுகள் பல வாழ்க!



உலகம் போற்றும் ஆன்மீக அன்னை
**சிவத்தமிழ்ச் செல்வியை**
பல்லாயிரம் ஆண்டுகள் வாழப் பிரார்த்தனை செய்து வாழ்த்துகிறோம்.
நவாலி மகாவித்தியாலயம்
நவாலி, மானிப்பாய்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
(35-21-19-11) (C/32621)

## பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்



கல்விப்பணி, சமூகப்பணி, ஆதரவற்றவர்களுக்கான அறப்பணி ஆகியவற்றை ஆற்றுகின்ற
கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி
**தங்கம்மா அப்பாக்குட்டி**
அவர்களை 79ஆவது பிறந்த நன்நாளில் பல்லாண்டு வாழ வாழ்த்துவதோடு, மேலும் அறப்பணியாற்ற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
"செந்தமிழோடுயர் சைவமும் வாழ ஜெகமிதில் உழைத்திடுவோம்"
இந்து வாலிபர் சங்கம்
வட்டுக்கோட்டை
(26859)(35-21-11-19)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



சந்திரபுரம் மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட
**திரு. வல்லிபுரம் மகாலிங்கம்**
அவர்கள் 05. 01. 2004 அன்று சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் நீதிபதி திரு. சிவசுப்பிரமணியம் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். அவர்தம் சேவைகள் மேன்மேலும் உயர்வு பெறவும், சிறப்புறவும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி. (26879) (26-21-11)
செல்லையா இரத்தினம்,
இ. தேவி,இ. முரளிதரன்,
இ. காயத்திரி

## APPLICATIONS CALLED FOR TEACHERS FOR TRO PRE SCHOOLS WITH INTERNATIONAL STANDARDS

The service of teachers, trained on early childhood development, pre school education and care is required. They should have substantial knowledge of child psychology, English and techniques to stimulate children to growth and development through play activities. They also should have traits to cultivate good and amicable relationship with children, parents and other stakeholders.

The administration will provide accommodation and food. The scale of the salary will be fixed on the basis of qualifications and experience. The pre school will be located in Kilinochchi.

Applications for above should reach TRO Head Office, Kandy Road, Kilinochchi before 10-01-2004. Interview for the selection will be held at the above address on 13-01-2004 at 10a.m. Those who have applied should be present for the interview.

Contact Tel.No. 021 228 3947.
**Executive Director, TRO.** (C/32615) (26)

கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி
**தங்கம்மா அப்பாக்குட்டி** அவர்களுக்கு
**மனமுவந்த வாழ்த்துக்கள்**

07.01.2004இல் எழுபத்தொன்பதாவது அகவையில் காலடி வைக்கும் அம்மா அவர்களை நீடியஆயுளும், நாடியபொருளும், நோயற்ற வாழ்வும் பெற்று, சைவமும் தமிழும் மேல்நிலை அடைய உறுதியுடன் உழைக்க துர்க்காதேவியின் இன்னருள் கிடைக்க இத்தருணம் மனமுவந்து வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச் சமூகம்
யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.
(26876)(35-21-11-19)

## விக்னா கல்வி நிறுவனம்

52 ஸ்ரான்லி வீதி, யாழ்.

| | | |
|---|---|---|
| **O/L** | DAY CLASS | (8.30 - 2.00) |
| | EVENING CLASS | (4.00 - 6.00) |
| தரம் 10,9,8,7,6 வகுப்புக்கள் | | (4.00 - 6.00) |

ஆரம்பமாகி விட்டன.
பிரிவு 2ற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
☆ தனித்துவமான ஆசிரியர்குழு
☆ O/L Day Class அனுமதிகள் வழங்கப்படுகின்றன
☆ O/L Day Class பிரிவு 2 மிக விரைவில்
(சி-32617)(21-19-11)

## வலி.மேற்கு சிகை அலங்கரிப்பாளர் சங்கம் கிளை 03 சங்கானை

| | | |
|---|---|---|
| 01. | முடிசேவ் | - 60/= |
| 02. | முடி மட்டும் | - 50/= |
| 03. | முடிவெட்டி தாடி ஒதுக்க | - 65/= |
| 04. | சேவ் மட்டும் | - 25/= |
| 05. | சிறுவர்களுக்கு | - 35/= |
| 06. | குழந்தைகளுக்கு | - 30/= |
| 07. | பெண்களுக்கு | - 50/= |
| 08. | மசாஜ் செய்ய | - 25/= |
| 09. | கீற்றர் பிடிக்க | - 20/= |
| 10. | மொட்டை வழிக்க | - 100/= |
| 11. | தாடி ஒதுக்க | - 30/= |

★இத்தகைய தொகைக்குக் குறைவாக வேலை செய்வோருக்கு குற்றப்பணமாக 1000/= அறவிடப்படும்.
நன்றி
வலி.மேற்கு
சங்கானை. சிகை அலங்கரிப்பாளர் சங்கம்.
(26871)(35-21-11)

## அன்னையே வணங்குகிறோம்



எங்கள் அன்னை
சிவத்தமிழ்ச்செல்வியே,
அகவை எழுபத்தொன்பது
நிறைவுறும் இந்நாளில்
வணங்கி, வாழ்த்துகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி.
கந்தரோடை. சுன்னாகம்.
(C/32622) (26-13-17-32)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மண்டைதீவைச் சேர்ந்த இராசரத்தினம் பரதன் 05-01-2004 அன்று யாழ் மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி S.நந்தசேகரன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவரது சேவைகள் மென் மேலும் வளர மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

*110, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (26886)(32-13-17)

எஸ்.பி.ஓ.என்ரப்பிறைசர்ஸ்
ஊழியர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சங்கானையைப் பிறப்பிடமாகவும் பிடாரி கோவிலடி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகக் கொண்டவரும், இளைப்பாறிய இலங்கை இராணுவ இளநிலை அதிகாரியும், உதயதாரகை சனசமூக நிலையம், ஆனைக்கோட்டை முன்னாள் தலைவரும், சமூகசேவையாளருமாகிய



### உயர்திரு.செ.குமாரசாமி, ச.நீ.அவர்கள்

நீதி அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் செய்யப்பட்டு, 02.01.2004 அன்று மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் திருமதி ச.இளங்கோவன் அவர்களின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*ஓடக்கரை வீதி,*
*சங்கானை* (சி-32616) (26-13-17-32)

திருமதி சி.மகேஸ்வரி குடும்பம்
திருமதி ம.தவமணிதேவி குடும்பம்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15
-
08
-
1921



மறைவு
21
-
12
-
2002

### திருமதி செல்வரெத்தினம் செல்வரத்தினம்

(முன்னாள் யாழ்ப்பாணம் பெஷன் ஹவுஸ்
உரிமையாளரின் துணைவியார்)
திதி: 07-01-2004

காலங்கள் ஆயிரம் போகட்டும் உங்கள் முகம் இன்னும்
எம் நினைவுகளில் பசுமையாய், நீங்கள் நடமாடித் திரிந்த
இடமெல்லாம் இன்று வெறுமையாய்
உங்கள் நினைவுகளுடனேயே இன்று எமது நாள்களாய்!
ஓம்! சாந்தி!! சாந்தி!! சாந்தி!!!

*9,சேர் பொன். இராமநாதன் வீதி,*
*கலட்டி சந்தி, கலட்டி*
*யாழ்ப்பாணம்.* (26885)(32-13-17)

அன்பின்,
குடும்பத்தினர்.

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

*தோற்றம்*
*18*
*-*
*01*
*-*
*1927*



*மறைவு*
*01*
*-*
*01*
*-*
*1999*

### அமரர் நவரத்தினம் நடராசா (சாரதி)

திதி: 07-01-2004

ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
என்றும் எம்முள் வாழ்ந்து
கொண்டிருக்கின்றீர்.....

*ந. அருள்நாதன்,*
*அருச்சுனா இறப்பர் முத்திரை,*
*521, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

(26881) (2613-17-32)

## பொதுமக்கள் சிரமம்

வடமராட்சி கிழக்கு,ஜன.07

மருதங்கேணி பிரதேசத்துக்கு பல வருடங்களாக திடீர் மரண விசாரணை அதிகாரி ஒருவர் நியமிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இப்பிரதேசத்தில் ஏற்படும் திடீர் மரணங்கள் தொடர்பான விடயங்களுக்கு மக்கள் கிளிநொச்சி மாவட்டத்துக்குச் செல்ல வேண்டியுள்ளது. இது தொடர்பாக யாழ். அரச அதிபரிடம் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

(எ-10-182)

## கணனிகள் அன்பளிப்பு

தென்மராட்சி,ஜன.7

தென்மராட்சி கல்வி வலயத்திற்கு இரண்டு கணனி இயந்திரங்களையும் பிரின்டரையும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ் நேற்றுமுன்தினம் வழங்கினார்.

வலயத்திற்குச் சொந்தமான இரு கணனி இயந்திரங்கள் இந்துக் கல்லூரியிலிருந்து காணாமல் போயிருந்தன. அதனால் ஏற்பட்ட பாதிப்பை நிவர்த்தி செய்யும் வகையில் இந்தக் கணனிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியுடன் தனது சொந்தப் பணத்தையும் சேர்த்து இவைகளை நாடாளுமன்ற உறுப்பினர் கொள்வனவு செய்து வலயக் கல்விப் பணிப்பாளரிடம் கையளித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## கருத்தரங்கு

கொழும்பு,ஜன.7

மாற்றுக் கொள்கைக்கான அமைபின் ஏற்பாட்டில் குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தின் சட்டத்துறைப் பேராசிரியரும் 'ஆஸ்திரேலிய அரசியலமைபபுச் சட்டம்' என்ற நூலின் ஆசிரியருமான சூரியரத்தினபாலாவின் கருத்தரங்கொன்று இன்று மாலை 4.45 மணிக்கு கொழும்பு 7இல் அமைந்துள்ள இலங்கை ஆதார நிலையத்தின் பிரதான கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை அரசியலமைப்பு மற்றும் ஏனைய அரசியல் அமைப்புக்கள் தொடர்பாக இக்கருத்தரங்கில் ஆராயப்படவுள்ளது. (ம-10)

## தொலைபேசி இயக்குநர் தேவை

சுன்னாகத்திலுள்ள தனியார் தொலைத்தொடர்பு நிறுவனம் ஒன்றில் பணிபுரிய முன் அனுபவமுள்ள, 2மைல் சுற்றாடலில் வசிப்பவரான பெண் தொலைபேசி இயக்குநர் தேவை. தகுதியுடையோர் உடன் நேரில் தொடர்புகொள்ளவும்.

'மிது கொம்'
ஜெற் மோட்டர்ஸ் கட்டடம்,
180, K.K.S வீதி,
சுன்னாகம்.

## விற்பனைக்கு

20 அங்குல சிங்கர் T.V கலர், அய்வாடெக் (றிமோட்டுடன்), 2 பொக்ஸ், அக்காய் அம்பளிவயர், 5150 ரேப்செற். கசியோ ஓகன், கமரா, ஓடியோ வீடியோ சொனி CD பிளேயர் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு:
V.தேவராஜா,
சண்முகம் வீதி,
சங்கத்தானை,சாவகச்சேரி.

(26888) (26882)

## தவறிவிட்டன

புத்தூர் மேற்கு, நவக்கிரி பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த இராசலிங்கம் குகனேஸ்வரன் என்பவருடைய டயறி, ஓட்டோப் புத்தகம், இன்சூரன்ஸ் ரக்ஸ், வரிகட்டிய ரசீது, காட், தே.அ.அட்டை (இல.623113000V) மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பை ஒன்று 25.12.2003 நத்தார் தினத்தன்று புன்னாலைக்கட்டுவனுக்கும் சுன்னாகத்துககும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழுள்ள முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தியாகராஜா நடராஜா
பிள்ளையார் கோயிலடி கடை,
புத்தூர் மேற்கு, நவக்கிரி.

(32) (26843)

## பிறந்த நாள் வாழ்த்து

தன்னலமற்ற சேவை செய்யத்
தயங்காத அன்னை

### செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களின் இன்று 07.01.2004இல்
79ஆவது பிறந்த நாளில்
துர்க்கை அம்மன் அருளை வேண்டி
வாழ்த்துகின்றேன்.

த.கமலா
85. அம்மன் வீதி.
கந்தர்மடம். யாழ்ப்பாணம்.

(26880)(26)

## சாயி பஜனை



நாளை (8.1.2004) வியாழக்கிழமை காலை 10மணிக்கு உடுப்பிட்டி துஷாந் இல்லத்தில் சாயி பஜனை நடைபெறும். அதில் சாயி அன்பர்கள், நண்பர்கள் அனைவரும் வந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

வே. சுந்தரலிங்கம்,
ரஜினி பீடா ஸ்ரோஸ், உடுப்பிட்டி

(C/32623)(35-13-18-32)

## நன்றி நவில்கிறோம்



*கற்கோவளம் ஸ்ரீதம்பி முத்துமாரி அம்பாள் ஆலய புனருத்தாரணப் பணிக்கு நன்கொடையாக ரூபா 75ஆயிரம் தந்து உதவியதற்கும், 1000 பை சிமெந்து வழங்குவதாக உறுதியளித்து இதுவரை 500 பை சிமெந்து தந்து உதவியதற்க மாண்புமிகு இந்துசமய விவகார அமைச்சர்*

### உயர்திரு. தி.மகேஸ்வரன்

*அவர்களுக்கு நாம் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.*

ஆலய பரிபாலனசபை, கற்கோவளம், பருத்தித்துறை.
(26874) (26-13-18-32)

## நன்றி நவிலல்

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக யாழ் போதனா வைத்திய சாலை மூன்றாம் இலக்க விடுதியில் அனுமதிக்கப்பட்டு 29.12.2003 திங்கட்கிழமை அன்று காலமான எனது அன்பு மனைவி வைத்திய சாலையில் இருந்த நாள் தொடக்கம் அவர்களைப் பாசத்தோடு பராமரித்த சகல வைத்திய நிபுணர்களுக்கும், தாதியர் சகோதரிகளுக்கும், சென்ஜோன்ஸ் பராமரிப்புச் சேவையைச் சேர்ந்த திருமதி ராஜேஸ் மற்றும் திருமதி சோதிமலருக்கும் குறிப்பாக தங்கள் வேலைப் பளுவையும் மீறி என் மனைவியின் நோய் குணமாக வேண்டும் என்ற உயரிய நோக்கோடு எங்கள் தேவைகளையெல்லாம் நிறைவேற்றிய சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எம். சிவகுமார், வைத்திய நிபுணர் டாக்டர் திருமதி சி.நாகேந்திரன், வைத்திய நிபுணர் டாக்டர் ரி.பேரானந்தராஜா, சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் த.அம்பலவாணர் மற்றும் டாக்டர் கே.குலநாயகம், டாக்டர் ரமேஸ்குமார், டாக்டர் கவிதா, டாக்டர் மணிவாசகம் ஆகியோருக்கும் என் உளமார்ந்த நன்றியறிதலைச் சமர்ப்பிக்கின்றேன்.

அத்துடன் 29.12.2003 திங்கள் எனது அன்பு மனைவி காலமான நாள் தொடக்கம் 31.12.2003 புதன்கிழமை நடந்த இறுதி ஊர்வலம் வரை வங்கி வருட இறுதிக் கடமைகளையும் விட்டு எனதும் எனது மகனதும் துயரில் பங்குகொண்டு மலர் வளையங்கள், செய்திகள் மற்றும் கண்ணீரினால் அஞ்சலி செலுத்தி என் தோளோடு தோள் நின்று சகல விடயங்களையும் செவ்வனே நிறைவேற்ற உதவிய இலங்கை வங்கி வடபிராந்தியத்தில் பணியாற்றும் மாவட்ட முகாமையாளர்கள், பிரதம முகாமையாளர்கள், முகாமையாளர்கள், அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோருக்கும் எனது மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவிக்கின்றேன்.

மேலும் தங்கள் மேலான கடமைகளுக்கிடையேயும் எனது மனைவியின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டு என்துயரில் பங்குகொண்ட டாக்டர் மணிவாசகம், டாக்டர் குலநாயகம், சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் சிவகுமார், தாதியர் சகோதரி செல்வி சியாமளா அவர்களுக்கும் மற்றும் என்னையும் மகனையும் தங்கள் பிள்ளைகளைப் போல் பராமரித்து எங்கள் தாங்கமுடியாத சோகத்தைத் தணித்ததோடு மட்டுமல்லாமல் பல நாள்களாக எமக்கு வேண்டிய உணவை அளித்து எம்முடனேயே இருந்து எம்மைக் கவனித்துக் கொண்ட உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மிகுந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் எனதும் எனது மகனதும் துயரை பகிர்ந்து கொண்டது மட்டுமன்றி இறுதி ஊர்வல ஒழுங்குகளைச் சிறப்பாக வடிவமைத்துத் தந்த எனது உறவினர்கள், நண்பர்கள், மகனுடைய நண்பர்கள் சிறப்பாக Ewis Ltd நிறுவன ஊழியர்கள், தூர இடங்களிலிருந்து வருகை தந்து மலர் வளையங்களினால் அஞ்சலி செலுத்திய அனைவருக்கும், பருத்தித்துறை வங்கி சதுக்க வர்த்தகர்கள், யாழ் வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சிவகடாட்சம் ஆகியோருக்கும் மற்றும் கலந்து கொண்ட அனைவருக்கும் எனது உளம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

மீண்டும் நன்றி

### திரு.க.பாலசுப்பிரமணியம்

(உதவிப் பொதுமுகாமையாளர்,
இலங்கை வங்கி வடபிராந்தியம்),
திரு. பா. முரளீதரன் (Ewis Ltd).

(26889)(13-18-32)

## மரண அறிவித்தல்

### முத்துக்குமாரு குமாரசாமி

*(முன்னாள் கிராம சபை லிகிதர், காரைநகர்)*

மன்னாரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு குமாரசாமி 03.01.2004 சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் திரு. திருமதி முத்துக்குமாரு (இளைப்பாறிய ஆசிரியர்) ஆகியோரின் மூத்த மகனும் விசாலாட்சியின் (முன்னாள் தாதியர், யாழ். போதனா வைத்தியசாலை) அன்புக் கணவரும் சிவகுமாரி, சிவகலா ஆகியோரின் அன்புத் தந்தையும் கோகிலராஜ், துரைசிங்கம் ஆகியோரின் மாமனாரும் தேவதாசன் (ஜேர்மனி), பாலேஸ்வரி, சந்திராதேவி (கிராம சேவகர், நுணாவில் மத்தி), இந்திராதேவி (லண்டன்), செல்வரதி, மங்கையர்க்கரசி (கிராமிய வங்கி, இலுப்பைக்கடவை), சாந்தினிதேவி (ஜேர்மனி), கனகேஸ்வரி, தேவகாந்தன் (லண்டன்), சுமித்ரா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கந்தவனம், சுந்தரலிங்கம், சந்திரபாலன், திருநாவுக்கரசு, மல்லிகாந்தன், செல்வநாதன், மரியா, அருள்ராஜ் ஆகியோரின் மைத்துனரும் சங்கீத், சோபிகா, தர்சித், பிரகீஷா, நிரோசன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2004) புதன்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி கந்தவனம் பாலேஸ்வரி
(சகோதரி).

*நுணாவில் கிழக்கு,*
*சாவகச்சேரி.* (26883)(13-18-32)

# இந்தியா - ஆஸ்திரேலியா இடையே நான்காவது டெஸ்ட் போட்டி 'டிரா'

ஆஸ்திரேலிய - இந்திய அணிகளுக கிடையிலான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வி யின்றி முடிவுற்றது.

ஆஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்ரீவ்வா, சிமோன்கட்டிக் ஆகியோர் நிதானமாகத் துடுப்பெடுத்தாடி தமது அணியை தோல்வியிலிருந்து மீட்டனர்.

சிட்னியில் நடைபெற்ற இப்போட் டியின் நான்காவது நாளன்று ஆஸ்தி ரேலியஅணி விக்கெட் இழபபின்றி 10 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இறுதிநாளான நேற்றுக் காலை மழை காரணமாக சுமார் 10 நிமிடம் தாமதமாகவே ஆட்டம் ஆரம்பமாகியது.

காலை நேர ஆட்டத்தில் அனில் கும்ளே, முரளிகார்த்திக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

மதிய உணவு இடைவேளையின போது ஆஸ்திரேலிய 2 விக்கெட் இழப பிற்கு 117 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

தேநீர் இடைவேளைக்குச் சற்று முன்னர் டேமியன் மார்ட்டின், ரிக்கிபொன டிங் ஆகியோரும் ஆட்டமிழந்தனர்.

ஆனால், தனது கடைசி இன்னிங ஸில் விளையாடிய ஸ்ரீவ்வோவும், சிமோன கட்டிக்கும் சுமார் 5 ஆவது விக்கெட்டுக்காக 142 ஓட்டங்களைப் பெற்றனர்.

போட்டி முடிவடைவதற்கு நான்கு ஓவர்கள் மாத்திரம் இருந்த போது 80 ஓட்டங்களுடன் கும்பிளேயின் பந்து வீச்சில் ஸ்ரீவ்வோ ஆட்டமிழந் தார். 159 பந்துகளை எதிர்கொண்ட அவா 15 பௌண்டரிகளையும் அடிததார்.

ஸ்ரீவ்வோ துடுப்பெடுத்தாடக் களம இறங்கியபோது. அரங்கில் இருந்த அனைவரும் எழுந்து நின்று வரவேற்றனர்.

ஸ்ரீவ்வோவின் சொந்த நகரான சிட்னியிலேயே இப்போட்டி நடைபெற றமை குறிப்பிடத்தக்கது.

168 டெஸ்ட் போட்டிகளில் 10 ஆயிரத்து 927 ஓட்டங்களை (சராசரி 51.06) பெற்று தனது டெஸ்ட் கிரிக்கெட் வாழ்வை முடித்துக் கொண்டார் ஸ்ரீவ்வோ.

அவர் ஆட்டமிழந்த பின் அதே ஓவரின் 5 ஆவது பந்தில் அடம் கில கிறிட்சையும் ஆட்டமிழக்கச் செய்தார் கும்ளே. ஆஸ்திரேலியா 94 ஓவர் களில் 6 விக்கெட் இழப்பிற்கு 357 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் வெற்றி தோல்வியின்றி இப்போட்டி முடிவுற்றது.

4 போட்டிகள் கொண்ட இத்தொட ரில் இரண்டாவது போட்டியில் இந்தி யாவும் மூன்றாவது போட்டியில் ஆஸ்திரேலியாவும் வென்றன.

இதனால், இத்தொடர் 1-1 என்ற விகிதத்தில் சமநிலையில் முடிவுற் றுள்ளது. எனினும் இவ்விரு அணி களுக்கிடையில் 2001 ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற டெஸ்ட் தொட ரில் இந்திய அணி 2-1 விகிதத்தில் வென்றது. இதனால் இச்சுற்றுப் போட்டிக் கான 'போர்டர் - காவஸ்கர்' கிண்ணத்தை இந்திய அணியே தொடர்ந்தும் தக்கவைத் துக் கொண்டது.

நான்காவது போட்டியின் சிறப்பாட் டக்காரராக சச்சின் டெண்டுல்கரும் தொட ரின் சிறப்பாட்டக்காரராக ராகுல்திராவிட்டும தெரிவு செய்யப்பட்டனர்.


## பொருளியற் கல்லூரி

பெருமாள் கோவில் அருகில், நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
இணுவில் மத்திய கல்லூரி அருகில், கே. கே. எஸ் றோட், இணுவில்.

**A/L 2006** கலை,வர்த்தகப் பிரிவு மீண்டும் ஒரு புதிய பிரிவு

ஆரம்பம் : 10.01.2004 சனி

யாழ் நகரில் - கலைப்பிரிவு 9.00 a.m.
வர்த்தகப்பிரிவு 10.00 a.m
இணுவிலில் - கலைப்பிரிவு 9.00 a.m
வர்த்தகப்பிரிவு 10.00 a.m

(27899)(17-18)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

எமது நிறுவனத்தில் கீழ்வரும் கற்கைநெறிகளிற்கான விண்ணப்பங்கள் மாணவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.



**Dip in MS Office**
**Dip in Desktop Publishing**
**Internet @ email**
**Quick Book 2000 Pro**
(பல்கலைக்கழக மாணவர்களுக்கானது)
**AutoCAD Drawing**

ஆரம்பம்: 10-01-2004 சனி காலை 10.00
(மாணவர்களின் வசதிக்கேற்ற நேரசூசி வழங்கப்படும்)
மேலதிக விபரங்களிற்கு:
STP Your Partner in IT Solution
73, Palaly Road, Kantharmadam. Jaffna.
Branch:Sankaththanai,Chavakachcheri T.P:2222674


## வாழ்த்துகின்றோம்

### திரு. வல்லி மகேந்திரன்



அண்மையில் அகில இலங்கை சமாதானநீதிவானாக பதவிப் பிரமாணம் செய்துகொண்ட முன்னாள் யாழ் / மத்திய கல்லூரியின் மாணவனும், பட்டயக்கணக்காளரும் பிரபல ஆசிரியரும், இலங்கை வங்கி காசாளரும், விவசாய காப்புறுதிச் சபை அழிவு மதிப்பீட்டு உத்தியோகத்தரும், கலிகைக் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா சபை செயலா ளரும், தயாநிதி சனசமூகநிலைய பொருளாளரும், அராலி தெற்கு இந்து சமய விவகார சனசமூக நிலைய போசகரும், முன்னாள்(MATHAN TIMBER DEPORT) உரிமையாளரும், அம்மன் றான்ஸ் போட் உரிமையாளரும், பிரபல வர்த்தகரும், சிறந்த சமூக சேவை யாளனுமாகிய திரு. வல்லி மகேந்திரன் அவர்களை என்றும், நலமுடன் வளமாக வாழ்கவென்று உளமார வாழ்த்துகின்றேம்.

இங்ஙனம்,
சகோதரன்,
சிதம்பரநாதன் குடும்பம்.

27/15,றக்கா றோட்,
கச்சேரி, யாழ்ப்பாணம்(27891)(3617-18)

## விஞ்ஞானபீட மாணவர்களுக்கு

அனைத்து வருட மாணவர்களுக்குமான அவசரமானதும் அவசியமானதுமான கலந்துரையாடல் நாளை (08.01.2004) வியாழன் 9.00மணியளவில் பிரதான மண்டபத்தில் நடைபெறும். அனைவரும் கட்டாயம் கலந்துகொள்ளும்படி வேண்டுகின்றோம்.

(27893)(36-17-18) -விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன புலமைப்பரிசில், விஞ்ஞானத்துறை ஆசிரியர் திரு. K.பகீரதன் அவர்களின் மைத்துனர்
**கணேசையா விமலேஸ்வரன் அவர்கள்**
டென்மார்க்கில் அமரரான செய்திகேட்டு அதிர்ச்சியடைந்து, துயரோடு அன்னாரின் குடும்பத்துயரில் பங்குகொள்கிறோம்.

சயன்ஸ் அக்கடமி,
அரியாலை, நல்லூர்.
-இயக்குநர், ஆசிரியர், மாணவர்கள்.

(27895) (36-17-18)


வடமராட்சியிலும் ஓர் உதயம்
அன்றும் இன்றும் இனி என்றும

K. உதயன்
(B.B.A (Jaffna), B.A. (Pora) D.S.E.C.
**பொருளியல்**
**A/L Day Class**
ஆரம்பம்: 8.1.2004 வியாழன
மு.பகல் 9.00 மணி

**ENGLISH CLASS**
பிரிவு III-39
(O/L எடுத்த மாணவர்களுக்கானது)
ஆசிரியர் S.சடகோபன்
ஆரம்பம்: 9.1.2004 வெள்ளி
பி.ப. 4.00 மணி

ஆசிரியர் சேவை
போட்டிப் பரீட்சை வகுப்பு
T.தவசேகர்

கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி.
(C-32630) (32-17-18)

**லிபேட்டி** அச்சுவேலி
சிலம்பரசன், ராஜேந்தர், சர்மி நடித்த
காதல் அழிவதில்லை (ரீஸ்ஸ்)
தினசரி : 3.00, 7.00.
சனி, ஞாயிறு : 11.00, 3.00,7.00 (பி.நே.)
(C-32371) (32)

**நாகம்ஸ்** சுன்னாகம்



ஷாம், அருண்குமார், குட்டி ராதிகா, செந்தில் நடித்த
இயற்கை (ரீல்ஸ்)
தினசரி காட்சி : 11.00, 3.00. (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 7 மணி
15 ஆம் திகதி முதல்
கமல், அபிராமி நடித்த
விருமாண்டி
★இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தினவெளியீடு.
(C-31620)(32)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
சூர்யா, ஜோதிகா நடித்த
காக்க காக்க (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி சனி ஞாயிறு
KEOMA
இரவு 8.45 இந்த (பி.நே.)
(C-32370) (12)

**ராஜா** யாழ்ப்பாணம்



இளைய தளபதி விஜய், ஜோதிகா நடித்த
திருமலை
(ரீல்ஸ்)
காட்சிகள்
10.30,2.30,6.30,9.30 (பி.நே.)
8ஆம் திகதிவரைக்கும்
(சி-32369) (32)


## அருளுரை

இடம்: இணுவில் கந்தசுவாமி கோயில் மணி மண்டபம்
காலம்: இன்று(07.01.2004) புதன் பி.ப.5.30 மணி
கலாநிதி சபா ஜெயராசா அவர்களின் தலைமையில்
தமிழ்நாடு, தர்மபுர ஆதீனம் டாக்டர் சிறீமத் குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள் அவர்களின் அருளுரை இடம்பெறவுள்ளது.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

இணுவில் கந்தசுவாமி கோயில்,
தர்மகர்த்தா சபை,இளந்தொண்டர் சபை. (சி-32632)(36-17-18)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் சங்கீத ஆசிரியை
திருமதி சறோஜினிதேவி தவனேஸ்வரன் அவர்களது அன்புத் தந்தை
**திரு.மாணிக்கம் கிருஷ்ணன் (கிட்டுணு)**
காலமாகியதையிட்டு அன்னாரது குடும்பத்தவர்களுக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

யா/சேர் வை.து.ம.ம.வி வேலணை,
அதிபர்,ஆசிரியாகள், மாணவர்கள்,
ஊழியர்கள்.
(27894)(17-18)

## எட்டாவது வருட நினைவுகளுடன்

அன்னை மடியில் 13 . 03 . 1956



ஆண்டவன் அடியில் 05 . 01 . 1996

**முத்துக்கிருஷ்ணர் சிவகுமாரன் (குமார்)**

அன்புக் குமாரா!
நீ எம்மைப்பிரிந்து எட்டாத இடம் சென்று
எட்டாண்டுகள் உருண்டோடி விட்டதனை
ஈரவிழிகளுடன் இந்நாளில் நினைவு கூருகிறோம்.

- உன்பிரிவால் வாடும்:
தாய், பிள்ளைகள்,
சகோதரர்கள்.

காளிகோவிலடி,
மல்லாகம். (சி-32626)(36-18-17)

## கண்ணீர் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்

விவசாய பீடத்தின் விரிவுரையாளரான
திரு. P.ஜெயசீலன் அவர்களின் சகோதரனாகிய
**பா. ஜெயரஞ்சன்**
அகால மரணமடைந்ததையிட்டு அன்னாரிற்கு எமது கண்ணீர் பூக்களை காணிக்கையாக்குவதுடன், அவரது குடும்பத்தினரிற்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

விவசாய பீட மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.
(27896)(36-17-18)

## கண்ணீர் அஞ்சலி



மீசாலை கைத்தொழில் வணிகர் மன்றத்தின் உபதலைவர்
செ.பரமலிங்கம்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி
**பொன்னம்மா செல்லத்துரை**
அவர்களின் மறைவிற்காக அஞ்சலி பகிர்கின்றோம்.

மீசாலை கைத்தொழில்,
வணிகர்மன்றம்.
மீசாலை.
(27892)(36-17-18)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னுத்துரை நடராசா

நாவற்குழி, சித்திவிநாயகர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை நடராசாஅவர்கள் கொழும்பில் நேற்று (06.01.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விரைம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சித்திவிநாயகர் கோயிலடி,
நாவற்குழி.
(சி-32627)(36-17-18)
தகவல்:
து.வெங்கடேஸ்
(பெறாமகன்).

### சந்தான கிருஸ்ணன் சிவநேசன் (சிவா)

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் டுபாயில் வசித்தவருமாகிய சந்தான கிருஸ்ணன் சிவநேசன் (சிவா) அவர்கள் டுபாயில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - வீரலஷ்மி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற உருத்திராபதி மற்றும் தையலம்பாள் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தசாமி கோவிலடி,
இணுவில் மேற்கு,
இணுவில்.
(சி-32682)(36-17-18)
தகவல்:
உ.பாலகிருஸ்ணன்
(மாமா).

## தோட்டாக்களை...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

இராணுவப் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர். இராணுவப் பொலீஸார் இவர்களை பலாலி பொலீஸாரிடம் கையளித்தனர். மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் பொலீஸார் இவர்களை ஆஜர் செய்தனர். எதிர்வரும் 19ஆம் திகதி வரை இரு வரையும் விளக்கமறியலில் வைக்கும் படியும் - கைப்பற்றப்பட்ட துப்பாக்கி ரவைகளை பகுப்பாய்வுக் குட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் - மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி ச.இளங்கோவன் உத்தரவிட்டார். (ஓ-8-86)

## வீதிவிபத்தில் இளைஞர் காயம்!

யாழ்.செயலகத்திற்கு முன்பாக நேற்றுக்காலை இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக்கொண்டன. இதில் ஒரு மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவரான பண்டத்தரிப்பைச் சேர்ந்த பற்றிக் துரைராஜன் ஜோடஸ அலிஸ்ரஸ் (வயது 24) என்பவர் காயமடைந்தார்.

அவர் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இவர் செலுத்திய மோட்டார்சைக்கிளுடன் இராணுவத்தினர் இருவர் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியதாகக் கூறப்படுகிறது.

இந்த விபத்துத் தொடர்பாக யாழ். பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ஒ-6-7)

## ஜனாதிபதி-பிரதம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னெடுத்துச் செல்வது என்ற விடயத்தைத் தீர்க்காமல் மனோ - மலிக் குழு பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பது பயனற்றது எனவும் அமைச்சர் சேனாரத்ன மேலும் கூறியிருக்கிறார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மூன்று அமைச்சுகளைப் பொறுப்பேற்றதையடுத்து ஏற்பட்ட அரசியல் நெருக்கடியைத் தீர்க்கும் வழிவகைகள் குறித்து ஆராய மனோ-மலிக்குழு அமைக்கப்பட்டது தெரிந்ததே.

கடந்த டிசெம்பர் மாத நடுப்பகுதி வரை அக்குழு பல தடவைகள் கூடி ஆராய்ந்தது. குழுவின் பேச்சுகள் திருப்திகரமாக நடைபெற்று வருகின்றன எனவும் கூறப்பட்டது. இருந்தாலும், டிசெம்பர் மாத நடுப்பகுதியில் குழுவின் கூட்டம் ஒத்திவைக்கப்படும் வரை எந்த ஒரு தீர்வும் காணப்படவில்லை. மீண்டும் கூடும் திகதி குறிப்பிடப்படாமலேயே ஒத்திவைக்கப்பட்ட மனோ-மலிக்குழு மீண்டும் கூடுமா என்பது குறித்து இதுவரை எந்த ஒரு தகவலும் வெளியாகவில்லை.

## துணைவேந்தரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்பகல் பேச்சு இடம்பெற்றது. இதில் இணக்கப்பாடு ஏற்படாததையடுத்து துணைவேந் தரை அவரது அலுவலகத்தினுள் வைத்து அலுவலகக்கதவை ஊழியாகள் பூட்டினார்கள். பிற்பகல்3 மணியளவிலேயே அலுவலகக்கதவை ஊழியர்கள் திறந்தனர். அதன்பின் வழமையான பணிகளை துணைவேந்தா மேற்கொண்டார்.

இதேவேளை, யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நேற்றுப் பிற்பகல் பல்கலைக்கழகத்துக்குச்சென்று ஊழியர் சங்கத் தலைவருடனும், துணைவேந்தருடனும் கலந்துரையாடி சுமுகநிலையை உருவாக்க முயற்சித்தார். தமது கோரிக்கைகளுக்கு சாதகமான பதில் கிடைக்காவிட்டால், நாளை தமது போராட்டம் தொடரும் என்று ஊழியர் சங்கம் கூறியுள்ளது.

இந்த நிலையில் பல்கலைக்கழகப் பேரவை இன்று கூடவுள்ளது.


**Lingam master - swiss**

சுவிஸ் வாழ் தமிழர்களின் முன்னணி ஆசிரியர்

Deutsch - பெரியவர்களுக்கு

Deutsch - பாடசாலை மாணவர்களுக்கு

தொடர்பு: 062 7974164 - 079 3344733, 4665 Oftringen - swiss. (26642)(36-11-16)

**விக்கி (B.Com.)**

பிரத்தியேக வகுப்புகள் (வீட்டில் வந்தும் கற்பிக்கப்படும்)

★ A/L 2006 வர்த்தக வகுப்புகள்

★ O/L வர்த்தகமும் நிதியும்

★ 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில்

தொடர்புகளுக்கு: ஞானவைரவர் வீதி, உரும்பிராய் கிழக்கு. T.P. No: 077 6218306 (26643)(16-11)

**ஒலிபெருக்கி சாதனங்கள் விற்பனைக்கு**

SSB - 60M அம்பிளிபயர்
SSB - 80EM அம்பிளிபயர்
SSA - 100M அம்பிளிபயர்
SSA - 160M அம்பிளிபயர்
AMX - 912 9 Ch மிக்சர்கள்
HMT - 30 லைன் ரான்ஸ்போமர்கள்
XLR மைக் வகைகள்
BMS மைக் ஸ்ராண்ட்
DGT மைக் ஸ்ராண்ட்
60 Wat. யூனிற்றுகள்
18" நீள கோண்கள்

தொடர்பு: கோபுரம் சவுண்ட்ஸ் அகுஜா ஒலி பெருக்கி சாதனங்கள்.
விற்பனையாளர் : M.மயூரன். (26858) (22-17-18)

**IBMS** புதிய பிரிவுகள் ஆரம்பம்

Tertiary Vocational Education Commission Reg.No.:P25/0010

250, STANLEY ROAD, JAFFNA.

**Logic**

S.R.J. சுதன்

A/L 2006 ஆரம்பம்

10.01.2004 2.00 p.m.

2005 குறியீட்டு அளவையியல்

சனி, ஞாயிறு 1.00 p.m.

பிறைற்றின் கல்வி நிலையம் சாவகச்சேரி.

**CHEMISTRY CENTRE**
Temple Rd., நல்லூர்

**A/L 2006**

CHE. - அன்பழகன்
Phy. - பிரபா சிவலிங்கம்
Bio. - தற்பரன்
Maths. - ராஜன் (சி-32498)(36)

**புதிய பிரிவுகள்**

எமது நிறுவனத்தில் கீழ்வரும் கற்கைநெறிகளிற்கான விண்ணப்பங்கள் மாணவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

Dip in MS Office
Dip in Desktop Publishing
Internet @ email
Quick Book 2000 Pro (பல்கலைக்கழக மாணவர்களுக்கானது)
AutoCAD Drawing

ஆரம்பம்: 10-01-2004 சனி காலை 10.00

மேலதிக விபரங்களிற்கு

STP Your Partner in IT Solution T.P:2222674

73, Palaly Road, Kantharmadam. Branch: Chavakachcheri

**ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சை**

வழிகாட்டி நூல் — த.தவசேகர்

★ 20.01.2004 இற்கு முன்னர் வாங்கி அதில் உள்ள விண்ணப்பப் படிவத்தை பூர்த்திசெய்து ஆசிரியரின் வகுப்புகள் நடைபெறும் இடங்களில் ஒப்படைத்து சலுகையை பெற்றுக்கொள்ளுங்கள். (26840)(36-17-18)

**SCC விஷேட கணனிப்பயிற்சி நெறிகள்**

இந்தியா, மலேசியா, கனடா மற்றும் அமெரிக்கா எங்கும் வியாபித்திருக்கும் பெருந்தொகையான கணனிசார் வல்லுனர்களை உருவாக்கியதும், IBM மற்றும் Microsoft நிறுவனங்களின் ஆதரவைப் பெற்றுள்ளதுமான Aram Limited (இந்தியா) நிறுவனத்தினரும், SCC நிறுவனத்தினரும் இணைந்து இதுவரையில் யாழ் மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்படாத பாடத் திட்டங்களுடன் தனது சேவையைத் தொடங்கியுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE XP
◆ Fundamentals of Information Technology ◆ Outlook ◆ Word ◆ Excel ◆ MS Money ◆ MS Project ◆ Access ◆ PowerPoint ◆ Binder ◆ MS Schdule ◆ Internet, E-mail — Duration 6 - 7 Months

DIPLOMA IN DESKTOP PUBLISHING
◆ Word ◆ Power Point ◆ Pagemaker ◆ Corel Draw ◆ Photoshop — Duration 4 Months

DIPLOMA IN COMPUTER PROGRAMMING
◆ Information Technology ◆ SAD ◆ MIS, DBMS, RDBMS, ORDBMS ◆ Visual C++(System, Bios, Memory, Disk, Network Programming) ◆ Visual Basic (Com & Dcom Level) ◆ Netware administration programming System Diagnostic Programming ◆ Protocol Builds - up ◆ Visual Fox Pro ◆ Oracle ◆ Java ◆ Internet, Interfacing programming — Duration 12 Months

DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING
◆ Chip & Card level Trouble shooting ◆ Assembling ◆ Various Mother Board Handling ◆ Upgrading ◆ Fault Finding ◆ Repairing ◆ Servicing ◆ Printer, Scanner & Com device management ◆ Software Installation ◆ Configuring Internet Interfacing & Trouble shooting ◆ Networking & Etc... — Duration 4 -5 Months

DIPLOMA IN NETWORK ENGINEERING — Duration 4 Months
DIPLOMA IN VISUAL BASIC — Duration 4 Months
DIPLOMA IN VISUAL FOXPRO — Duration 4 Months
DIPLOMA IN AUTOCAD — Duration 4 Months
DIPLOMA IN C++ — Duration 4 - 5 Months

பிரிவு II ஆரம்பம் 10.01.2004

- உத்தியோகத்தர்களுக்கான மாலை நேர வகுப்புக்கள்.
- விரிவுரைகள் யாவும் இந்தியாவிலிருந்து வருகை தந்த அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் மேற்கொள்ளப்படும்
- கூடிய நேர செய்முறைப்பயிற்சி
- குறைந்த கட்டணம்.
- இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கான உதவிகள் வழங்கப்படும்.
- Online Classes

Possible Which are Impossible by others

**Soft View Computer College**

www.scclanka.com
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170

scclanka@hotmail.com
Arya Gowdar Road, West mambalam Road, Chennai 600 033, India.
T.P : +91-44-4891286


## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசையா பரிமளம்

எழாலை மேற்கு, பன்னஞ்சீமாவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா பரிமளம் அவர்கள் நேற்று (06.01.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா அவர்களின் அன்பு மனைவியும் செல்லம்மா, அழகம்மா, சிவசுப்பிரமணியம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் அரியமலர், தங்கேஸ்வரி, கருணாகரலிங்கம், ராணி, சிவானந்தம் ஞானமலர், நித்தியானந்தம் (ஜேர்மனி) புஸ்பமலர், இராஜேந்திரம் (கனடா), உதயகுமாரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சுப்பிரமணியம், அன்னலிங்கம், இந்திராணி, மகாதேவன், ரஞ்சினி, கந்தையா (சவுதி), அருட்சோதி (ஜேர்மனி) பஞ்சாயுதன், ஜெயலலிதா (கனடா), காஞ்சனமாலா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2004) புதன்கிழமை பி.ப. 3.00 மணியளவில் உடுத்தியோடை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
இ. உதயகுமாரன்
(மகன்).

(32633)(18-17-32)

### திருமதி வல்லிபுரம் தங்கம்மா

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், நுணாவில் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வல்லிபுரம் தங்கம்மா நேற்று (06.01.2004) செவ்வாய்க்கிழமை மாலை காலமானார்.

அன்னார் கந்தர் வல்லிபுரத்தின் அன்பு மனைவியும் நவரத்தினம் (பந்தல் உரிமையார்), சறோசினி ஆகியோரின் அன்புத் தாயாரும் செலவக்குமார் (லண்டன்), செல்வறஞ்சன் (லண்டன்), செல்வநந்தன் (போலந்து), செல்வறஞ்சினி, செல்வஜேந்தினி, திவாகரன் (லண்டன்), காயத்திரி, பிரதிகரன், கஜேந்தினி, கௌசலா, ஜேந்திரபாலா ஆகியோரின் பேர்த்தியும் முத்துலட்சுமி, செல்வரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியாரும் வனோஜன், தர்சாயினி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2004) புதன் பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ.நவரத்தினம்.
(பந்தல் உரிமையாளர்).

நாவற்பள்ளம், கல்வயல்,
சாவகச்சேரி.
(27900)(36-17-18)


**EXPOAIR எக்ஸ்போ எயார்**

your friend in the skies... வானில் உங்கள் நண்பன்...

யாழ் பயணத்தின் போது ரோள்ஸ் றெய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்!

யாழ்ப்பாணம் – 021 2223891, 021 2226297, 071 2348888
கொழும்பு – 074 512666, 360290/1
E-mail:jaffna@expoavi.com

இலங்கையின் நம்பத்தகுந்ததும் முன்னணியுமான யாழ் – கொழும்பு விமான சேவை


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.01.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.